உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
முதலாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 28
சுடர் 33 கதிர் 240 ஆடி 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 24 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## புலிப் பாடல் வரிகளால் வவுனியாவில் பரபரப்பு

வவுனியா, பூம்புகார் கிராமத்தில் உள்ள வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல் வரிகள் எழுதப்பட்டிருந்தமை தொடர்பான விசாரணைகளைப்பொலிஸார் தொடங்கியுள்ளனர்.
நித்திரையா தமிழா நித்திரையா என்ற வரிகளே வீதியில் எழுதப்பட்டிருந்தன. இரவோடுஇரவாக இவை எழுதப்படிருந்தன. இதனால் அப்பகுதி மக்களிடையே குழப்பம் ஏற்பட்டது. இந்த நிலையில் இது தொடர்பாக போலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் ஈச்சங்குளம் மற்றும் மன்னார் போலி » 23

சபை அனுமதித்துப் பரிந்துரைத்தபோதும்

# உத்தியோகபூர்வ இல்லம் யாழ். மேயருக்கு கிட்டாது

*சட்ட ஏற்பாடுகளைக் காட்டி மறுத்தார் முதலமைச்சர்*



யாழ்ப்பாண மாநகர மேயருக்கு உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று வழங்கப்படுவதைத் தடுத்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். மேயருக்கு உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று வழங்கப்படவேண்டும் என்று சபை தீர்மானம் நிறைவேற்றியபோதும் அவ்வாறு வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை என்று காரணம்கூறி அந்தப் பரிந்துரையை நிராகரித்தார் முதலமைச்சர்.
தனது பதவிக் காலத்தில் பயன்படுத்துவதற்கென ஒரு உத்தியோகபூர்வ » 06

## முதலமைச்சர் விக்கிக்கு கம்பன்பில விட்ட சவால்!

கொழும்பு, ஜூலை 24
இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு முன்னரே தமிழர்கள் குடியிருந்துள்ளார்கள் என்பதை முடியுமானால் நிரூபிக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு சவால் விடுத்தார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மம்பில.
இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு முன்னரே தமிழ் மக்களே குடியிருந்துள்ளார்கள் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்து நேற்றுப் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் அதற்கே பதிலளித்தார்.
இந்தக் கருத்தை முடியுமாயின் நிரூபிக்குமாறு அவருக்குச் சவால் விடுக்கின்றேன் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கம்மம்பில கூறினார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
(உ-21)

## பெற்ற கடனில் அரைவாசியை திருப்பித் தரவில்லை பேரவை

*குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் டெனீஸ்*

யாழ்ப்பாணம்,ஜூலை 24
தமிழ் மக்கள் பேரவை தன்னிடம் இருந்து கடனாகப் பெற்ற இரண்டு லட்சம் ரூபா பணத்தில் ஒரு லட்சம் ரூபாவை இது » 06

## டெனீஸின் அமைச்சுப் பதவி இரு வாரங்களுக்கு நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
வடக்கு மாகாண சபையின் அமைச்சராக அதன் முன்னாள் அமைச்சரான பா.டெனீஸ்வரனை அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை அந்தப் பதவியில் தொடர்வதற்கான இடைக்காலக் கட்டளையை நேற்றுப் பிறப்பித்தது கொழும்பு » 06

# மகிந்த – சம்பந்தன் நேற்று திடீர் சந்திப்பு

*புதிய அரசமைப்பு முயற்சிகள் குறித்து ஆராய்வு*

யாழ்ப்பாணம், ஜூலை 24
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது தம்பியும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுத் திடீரெனச் சந்தித்துப் பேசினார்.
புதிய அரசமைப்பு முதல் வரைவு முன்வைக்கப்பட்ட உடனேயே அதற்கு மகிந்த அணி நாடாளு » 06



## நாடாளுமன்றுக்குள் ஏழைகளின் அப்பிள்

கொழும்பு, ஜூலை 24
எண்ணெய்யில் செய்யப்பட்ட சிற்றுண்டிகளுக்குப் பதிலாக ஏழைகளின் அப்பிள் என்று வர்ணிக்கப்படும் வாழைப்பழம் உள்ளிட்ட பழவகைகளை நாடா » 06

## அமர்வுக்கு வராத உறுப்பினரின் ஒப்பம் பதிவேட்டில் வந்ததெப்படி?

*யாழ். மாநகர ஆணையரிடம் விளக்கம் கேட்கிறார் உள்ளூராட்சி உதவி ஆணையர்*

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணம் மாநகர சபையின் 4ஆவது அமர்வில் கலந்துகொள்ளாதபோதும் வருகைப் பதிவேட்டில் ஒப்பமிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் தொடர்பில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மாநகர ஆணையாளரிடம் விளக்கம் கோரியுள்ளார்.
யாழ்ப்பாணம் மாந » 06

வடக்கு மக்களை ஏமாற்றுகிறார்கள்

## புதிய அரசமைப்பை அரசு கொண்டுவராது

*ஆரூடம் கூறுகிறார் நாமல்*

கொழும்பு, ஜூலை 24
கூட்டு அரசு புதிய அரசமைப்பைக் கொண்டு வராது. வடக்கில் உள்ள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே அதைக் கொண்டுவரப்போவதான கதைகளைக் கூட்டு அரசு கட்டவிழ்த்து விடுகின்றது.
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற » 23

## யாழ். பல்கலையில் நேற்று கறுப்பு ஜூலை நினைவேந்தல்



» 06

## செம்மணி எலும்பின் ஆய்வுக்கு பன்னாட்டு நிபுணர்கள் வேண்டும்

*மாவை எம்.பி. வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஜூலை 24
செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூட்டை அகழ்ந்தெடுக்கும் பணிகளிலும் எலும்புகளைப்பகுப்பாய்வு » 06

## செம்மணியில் அகழ்வு இன்று தொடங்கும்

யாழ்ப்பாணம் ஜூலை 24
யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தென்பட்ட மனித எலும்புக்கூடு காணப்படும் இடத்தில் அகழ்வுப் பணிகள் இன்று தொடங்கும் என்று தெரிகிறது. » 06

மானிப்பாய் முதல் அரியாலை வரை

## பல்வேறு இடங்களில் நேற்றிரவு வாள்வெட்டுக் குழு அட்டகாசம்



யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நேற்று இரவு வாள்வெட்டுக் குழுவினர் பெரும் அட்ட » 23

## வடக்கு சுகாதாரத் திணைக்களத்துக்கு முல்லைத்தீவு நீதிமன்று காலக்கெடு

முல்லைத்தீவு, ஜூலை 24
முல்லைத்தீவு, மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத மருந்தகங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கைத் தொடர்வதா அல்லது வாபஸ் பெறுவதா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கு வடக்கு சுகாதாரத் திணைக் » 06

## கோட்டையிலிருக்கும் ராணுவம் உடனே வெளியேற வேண்டும்

*ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று தீர்மானம்*

யாழ்ப்பாணம் ஜூலை 24
யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும் என வடக்கு மாகாண » 24

# சேவைக்கால அடிப்படையில் நியமனம் வழங்க வேண்டும்

## சுகாதாரத் தொண்டர்கள் கோரிக்கை

வவுனியா,ஜூலை 24

சேவைக்கால அடிப்படையில் நிரந்தர நியமனங்களை வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது. வடக்கு மாகாண சுகா தார அமைச்சால் சுகாதார தொண்டர்கள் நிரந்தர நியமனம் தொடர்பாக மத்திய அரசுக்கு எழுத்து மூலமான எந்த அறிவிப்பும் வழங்கப்படவில்லை. இவ்வாறு சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் அமைந்துள்ள சுதேசிய சிறு உற்பத்தியாளர் கூட்டுறவு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

கடந்த வருடத்தில் எங்களுடன் கலந்துரையாடப்பட்டிருந்த போதுகல்விச்சான்றிதழ்இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. கல்விச்சான்றிதழ்இல்லாமல் சேவைக்கால அடிப்படையில் சுகாதாரத் தொண்டர்களாகிய எங்களை உள்ளீர்க்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக இருக்கின்றது.

இது தொடர்பாக நாங்கள் நாடாளுமன்றத்தில் கடந்த 18 ஆம் திகதி கலந்துரையாடச் சென்றிருந்தோம். அதன் போது வடமாகாணசபையிலிருந்தோ அல்லது வடமாகாண சுகாதார அமைச்சினாலோ எங்களை கல்வித்தகமை பாராது சேவைக்கால அடிப்படையில் உள்ளீர்பதற்கான தீர்மான அறிக்கைகள் எவையும் நடுவன் அரசுக்கு அனுப்படவில்லை. இங்கிருந்து அது அனுப்பப்பட்டிருந்தால் அமைச்சரவையில் அந்த விடயம் பேசப்பட்டு ஒரு முடிவு எடுக்கபட்டிருக்கும் என்று எதிர்கட்சி தலைவரின் செயலாளரால் எமக்கு கூறப்பட்டது. எமது போராட்டங்களின் பயனாக ஒரு தொகையானோருக்கு நியமனங்கள் வழங்கபடவுள்ளன என எம்மால் அறியமுடிகிறது. அதன்படி மத்திய அரசால்யாழ்ப்பாண மாவட் டத்துக்கு 100 பேரும் ஏனைய மாவட்டங்களுக்கு 9 பேருமாக 109 சுகாதார தொண்டர்கள் கல்விதகமையின் அடிப்படையில் உள்ளீர்ப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின் போது அறிந்துகொண்டோம். எனவே வடமாகாணசுகாதார அமைச்சு கல்வித்தகமை இல்லாமல் சேவைக்காலத்தின் அடிப்படையில் எமக்கான நியமனங்களை வழங்கும் படியான தீர்மானத்தை மத்திய அரசுக்கு விரைவாக அனுப்பவேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது. என்றனர்.

இது தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சரிடம் கேட்ட போது;

தற்போது சுகாதாரத்தொண்டர்களின் வெற்றிடங்களை அதிகரிக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும் அதற்காக ஏற்கனவே சுகாதாரதொண்டர்களாக கடமையாற்றுபவர்களைபதவி உயர்த்துவதுதன் மூலம் வெற்றிடங்களை ஏற்படுத்தலாம் என்று சிந்தித்து வருகின்றோம் அது தொடர்பான விரைவான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் சேவைக்காலத்தின் அடிப்படையில் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கபடவேண்டும் என்பதில் எனக்கு மாற்றுகருத்தில்லை. இது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருவதுடன் அனைத்து தகவல்களையும் பெற்றபின்னர் மிகவிரைவில் அவற்றை மத்திய சுகாதார அமைச்சுக்கும், எதிர்க்கட்சிதலைவரின் செயலாளர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அனுப்பவுள்ளோம் அவர்கள் அமைச்சரவையிடம் இருந்து நியமனத்துக்கான அனுமதியை பெற்று தரவேண்டும் எனக் கூறினார். (ரி4,110)

# கண்ணிவெடி வெடித்ததில் ஒருவர் காயம்

முகமாலை,ஜூலை 24

முகமாலைப் பகுதியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் காயமடைந்தார். அவர் பளைமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம்நேற்றுஇடம்பெற்றது. கண்ணிவெடி ஒன்றைச் செயலிழக்கச் செய்யும் போதே இந்தவிபத்துஏற்பட்டது. வெடிபொருள்அகற்றும் நிறுவனம் ஒன்றின் தொழிநுட்ப உதவியாளராகப் பணிபுரியும் கருணாதிலக என்பவரே வெடிவிபத்தில் காயமடைந்தார். (35,ரி4)

# கடையில் தீவிபத்து

கொழும்பு,ஜூலை 24

கொழும்பு யூனியன் பிளேஸ்பகுதியில்உள்ள கடை ஒன்றில் நேற்று தீவிபத்து இடம்பெற்றது. பொலிஸாரும் தீயணைப்புபடையினரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வந்தனர்.

தீ விபத்துக்கான காரணம் கட்டறியப்படவில்லை என்றும் எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லைஎன்றும் தெரிவிக்கப்பட்டது. சம்பவம்தொடர்பில்மேலதிக விசாரணைகளை கொம்பனித்தெருபொலிஸார்மேற்கொண்டுள்ளனர். (ரி4)

# வாக்காளராக பதிவு செய்யக்காலநீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

வாக்காளர் இடாப்புக்கான கணக்கெடுப்புப் பதிவுப் படிவங்கள்கிராமஅலுவலரால்வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பதிவை மேற்கொள்ளாதவர்கள் உள்ளூராட்சி சபைகள் மூலம் பதிவு செய்வதற்கு நேற்று தொடக்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளராகக் கணக்கெடுக்கும் பிசி படிவம் கிடைக்காதவர்கள் பதிவை மேற்கொள்ள வந்தால் அதற்கு யுஈ என்னும் படிவத்தை வழங்குமாறும் இந்தக் காலப்பகுதிக்குப் பின்னர் பதிவு செய்ய வருபவர்களுக்கு உரிமைகோரும் படிவத்தை வழங்குமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்த. அகிலன்அனைத்துஉள்ளூராட்சி சபைகளின்செயலாளர்களுக்கும்அறிவித்ததுடன் மாதிரிப் படிவத்தையும் அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் வாக்காளர்களாகக் கணக்கெடுப்பதற்கான படிவங்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களால் வீடு வீடாகச் சென்று விழங்கப்பட்டன.

அவை மாத இறுதியில் மீளப் பெற்றுப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டன. (ரி4,9)

# தேசிய ரீதியில் சாதித்த மாணவருக்கு வரவேற்பு

மன்னார்,ஜூலை 24

அகில இலங்கை தமிழ் தின நாடகப்போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற மன்னார் அல்.அஸ்ஹர் தேசிய பாடசாலை மாணவர்களும், வாசிப்பு போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவியும், பாடசாலைகளின் அதிபர்கள், கற்பித்த ஆசிரியர்களும் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு மன்னார் வலயக்கல்விப் பணிமனையில் நேற்று நடைபெற்றது.

மாணவர்கள் மன்னார் பிரதான பாலத்தடியில் இருந்து வாத்திய இசையுடன் ஊர்வலமாக மன்னார் வலயக்கல்வி அலுவலகம் வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

மன்னார் வலயக்கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் வலயக்கல்வி பணிப்பாளர் சுகந்தி செபஸ்தியன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி4,56)



# காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் ஆரம்பம்

முல்லைத்தீவு,ஜூலை 24



முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் முல்லைத்தீவு நீதிமன்றத் துக்கு அண்மையில் நேற்றுத் திறக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக தொடர்ச்சியாக 500 நாள்களாக கவனவீர்ப்புப் போராட்டத்தை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்திருந்தனர்.

தமது போராட்டத்தை 500 நாள்களுடன் முடிவுறுத்திய நிலையில் இந்தச் சங்கத்தைத் திறந்துள்ளனர்.

இவர்கள் தமது போராட்ட வடிவத்தை மாற்றியுள்ளதாகவும் தமது புதிய போராட்ட வடிவம் விரைவில் தெரியவரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ரி4,102,214)

# கிளி. தொண்டர் ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

கிளிநொச்சியைச் சேர்ந்த, நியமனப் பட்டியலில் உள்வாங்கப்படாத தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள ஈ.சி. கல்வி நிலையத்தில் நடக்கவுள்ளது.

கலந்துரையாடலுக்கு வருவோர் யாழ்ப்பர்ணம், கொழும்பில் நடைபெற்ற நேர்முகத் தேர்வு ஆவணங்களின் மூலப் பிரதியையும், நிழல் பிரதியையும் கொண்டு வர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலுக்கு வராதோரின் பிரச்சினைகள் தொடர்பில் கிளிநொச்சி தொண்டர் ஆசிரியர் சங்கம் பொறுப்பேற்காது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-114)

# பழைய முறைமையின் அடிப்படையில் தேர்தலை உடன் நடத்தவேண்டும்

## சிறுபான்மைக் கட்சிகள் கூடித் தீர்மானம்

மாகாண சபைத் தேர்தலைத் தாமதப்படுத்தாமல் உடன் நடத்த வேண்டும். மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடாது. மேலும் சிறுபான்மை இனங்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளால் எல்லை நிர்ணயம் மீள் திருத்தம் செய்யப்படல்வேண்டும் என்பதால் அதற்கு அதிக காலம் தேவையாகும். ஆகவே பழைய முறைமையின் பிரகாரம் உடன் தேர்தலை நடத்தவேண்டும். இவ்வாறு சிறுபான்மைக் கட்சிகள் ஒன்று கூடி நேற்றுத் தீர்மானம் எடுத்ததுள்ளன. இந்தத் தீர்மானத்தை வியாழக்கிழமை கூடவுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சிறப்புக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்துரைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

மாகாணசபைதேர்தல்முறைமை தொடர்பான சிறுபான்மைக் கட்சிகளுக்கிடையிலான முக்கிய கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை தேசிய நல்லிணக்க சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானாந்தா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொதுச்செயலாளர்ஸுபைர்தீன்ஆகியோர்கலந்து கொண்டனர். இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது மாகாண சபையின் புதிய தேர்தல் முறைமையின் பாதகமான தன்மை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்துரைக்க வேண்டிய விவகாரங்கள் குறித்தும் பேசப்பட்டன. புதிய தேர்தல் முறைமையை ஏற்க முடியாது. குறித்த முறைமை சிறுபான்மை இனத்தவர்களுக்குச் சாதகமானதல்ல தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள எல்லை நிர்ணயம் ஏற்க முடியாதது. ஆகவே எல்லை நிர்ணயம் மீள செய்யப்படவேண்டும். அதற்கு அதிகளவில் காலம் தேவையாகும். ஆகவே அதுவரை ஜனநாயக உரிமையான தேர்தலை பிற்போட முடியாது. இதனடிப்படையில் பழைய முறைமையின் பிரகாரம் உடன் தேர்தலை நடத்தவேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதேபோன்று புதிய முறைமையின் பிரகாரம் தேர்தலை நடத்தினால் உள்ளூராட்சி மன்றங்களைப் போன்று மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரிக்கும். அவ்வாறு செய்யதால் மக்கள் மத்தியில் அதீத பாரத்தைச் சுமத்துவது போன்று ஆகிவிடும். ஆகவே மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படக் கூடாது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (21,61)

# கிணற்றில் வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

வவுனியா,ஜூலை 24


வீட்டுக் கிணற்றில் தவறிவீழ்ந்து முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மல்லாவியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கிணற்றில் தவறிவீழ்ந்த முதியவர் குடும்பத்தினரால் மீட்கப்பட்டு மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

மல்லாவியைச் சேர்ந்த ரத்தினசிங்கம் (வயது-71) என்பவரே உயிரிழந்தார்.

மேலதிக விசாரணைகளைப்பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,110)



## தீடீரெனப்பற்றி எரிந்தது கார்

கொழும்பு.ஜூலை.24
பம்பலப்பிட்டியில்கார்ஒன்றுதீடீரெனதீப்பற்றிஎரிந்துள்ளது. இந்தச் சம்பவம் டுப்பிளிகேஷன் வீதியில் நேற்று இடம்பெற்றது. தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.
இதனால் அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி4)

# கடந்த அரசு செய்தவற்றை கூட்டு அரசு செய்யவில்லை

## மைத்திரி கூறுகின்றார்

கொழும்பு,ஜூலை 24
கூட்டரசுஆட்சிப்பொறுப்பை ஏற்று என்ன செய்தது என்று சிலர் குறுகிய வட்டத்துக்குள் இருந்துகொண்டு குற்றம் சாட்டுகின்றனர். கடந்த அரசு செய்தஎதனையும்கூட்டரசுசெய்யவில்லை என்பதை மக்கள் புரிந்துக் கொள்ள வேண்டும். நிலையான அபிவிருத்தி மற்றும் ஜனநாயக ஒருமைப்பாடு போன்ற விடயங்களைக்கூட்டரசுஉறுதிப்படுத்தியுள்ளது என்றவிடயமேபெரிய வெற்றியாக காணப்படுகின்றது.



இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
களுகங்கைநீர்த்தேக்கத்தின்நீர் நிரப்பும்நிகழ்வுநேற்றுஇடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தனிமனித ஜனநாயகம், ஊடக சுதந்திரம் ஆகியவற்றை முறையாக பயன்படுத்திக் கொண்டு சிறந்த அரசியல் கலாசாரத்தையும் ஆட்சிமுறையையும் தோற்றுவிக்க வழிவகுக்க வேண்டும். கூட்டரசில் அனைத்து ஜனநாயகங்களும் உறுதிப்படுத்தப்பட்டு சுயாதீனமாகச்செயற்படக்கூடிய நிலைமைதோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் கருவியாகச் செயற்பட வேண்டும் என்ற காரணத்தினால் ஊடக சுதந்திரம் பலப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடையமுடியாதநிலைமைஉருவாகியுள்ளது.
தோற்றுவிக்கப்பட்டஜனநாயகம் சிலரது முறையற்ற செயற்பாட்டின் காரணமாக இல்லரதொழிந்து கண்ணீர் சிந்தக் கூடிய நிலைமை உருவாகும்சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.
ஊடகத்தின் சுதந்திரத்தை முறையாகப்பயன்படுத்திஏற்படக்கூடிய ஆபத்துக்களை ஊடகங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
மொரஹாகந்த களுகங்கை அபிவிருத்தி திட்டங்கள் நாட்டின் எதிர்கால விவசாய பொருளாதார மேம்பாட்டுக்குபெரிதும்உதவும். கடந்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை இழுத்தடிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டம்கூட்டரசின் குறுகிய 3 வருட கால நிர்வாகத்தில் முழுமையடைந்துள்ளமை பெரிய வெற்றியாகும் - என்றார். (ரி4)



## மனித என்பு கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் தொடரும் கட்டுமானம்


யாழ்ப்பாணம், ஜூலை 24
செம்மணியில் கட்டட அமைப்பு வேலைகளுக்காக அகழப்பட்ட போது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதும் கட்டட அமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.
நீர்த்தாங்கி அமைக்கும் பணிகளுக்காக செம்மணியில் கடந்த வெள்ளிக் கிழமை நிலம் மண் அகழப்பட்டது.
அங்கு மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் வெளித்தெரிந்ததை அடுத்து அகழ்வுப் பணிகள் உடனடியாக நிறுத்தப் பட்டன. யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதோடு சம்பவ இடத்தை யாழ்ப்பாண மாவட்ட நீதிவான் சதீஸ்கரன் நேரில் சென்று பார்வையிட்டார்.
எலும்புக்கூட்டின் எஞ்சிய எச்சங்கள், அகழப்பட்ட மண்ணுடன் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில், அகழப்பட்ட மண்ணைப் பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சட்ட மருத்துவ அதிகாரி சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பின்னரே எஞ்சிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்று கூறப்பட்டிருந்தது.
நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரி க.மயூரதன், மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்குச் சென்றார்.
தடயவியல் (சோக்கோ) பொலிஸாரும், பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் இரண்டு பொலிஸ் அலுவலர்களுமே அங்கு முன்னிலையாகியிருந்தனர்.
பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வராததாலும் மற்றும் அங்கு அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குரிய உபகரணங்கள் ஒழுங்கு செய்யப்படாமையாலும் சட்ட வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணியை ஒத்திவைத்து விட்டுத் திரும்பிச் சென்றனர்.
ஆனால் நீதிமன்றத்தின் ஊடாக, அகழ்வுப் பணியை நேர்தியாக முன்னெடுப்பதற்குரிய ஒழுங்குகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.
எனினும் அங்கு அமைக்கப்பட்டுவரும் நீர்த்தாங்கி தொடர்பான வேலைகள் எந்தத் தடங்கலும் இன்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. [illegible]0 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கு நீர்த்தாங்கி அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.
**அந்த பிரதேசத்தில் இரண்டு பொலிஸார் கடமைக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். (று-114)**

## சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

வவுனியா,ஜூலை 24
வடமாகாணத்தில் மிக நீண்ட காலமாக பதிவில் உள்ள 826 சுகாதார தொண்டர்களின் பெயர் பட்டியலை மீளாய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.
அதனால் வடமாகாணத்தில் உள்ள அனைத்து சுகாதாரத் தொண்டர்களையும் தங்களது பெயர் விவரங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வவுனியா தொடருந்து நிலைய வீதி சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் அமைந்துள்ள சுதேசிய சிறு உற்பத்தியாளர் கூட்டுறவு அலுவலகத்துக்கு எதிர்வரும் 26 ஆம், 27ஆம் திகதிகளில் காலை 9 மணியிலிருந்து 12 மணிக்குள் சமூகமளித்து தங்கள் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ரி-4,110)

## 39ஆவது நாளாக நேற்று சதொசவில் அகழ்வுகள்

மன்னார், ஜூலை 24
மன்னார் சதொச வளாகத்தில் நேற்று 39ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் நடைபெற்றன.
கடந்த இருதினங்களும் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள், எலும்பு எச்சங்களைச் சுத்தப்படுத்தி வெளியே எடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நேற்றுப் புதிதாக அகழ்வுப் பணிகள் நடைபெறவில்லை. சிறப்பு சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ். ராஜபக்ச தலைமையில் அகழ்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. -60)





## மந்திகை மருத்துவமனைக்கு புதிய நோயாளர் காவு வண்டி

பருத்தித்துறை.ஜூலை 24
மந்திகை ஆதார மருத்துவமனைக்கு புதிய நோயாளர் காவு வண்டி மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் க.குணசீலனால் நேற்று வழங்கப்பட்டது.
கடந்த மாதம் மருத்துவமனைக்குச் சென்ற மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவமனை நிர்வாகம் நோயாளர் அபிவிருத்திச் சங்கம் மற்றும் பொது மக்கள் ஆகியொருடன் கலந்துரையாடினார்.
அவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து நடுவண் சுகாதார திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு நோயாளர் காவு வண்டி வழங்கப்பட்டுள்ளது.
மருத்துவமனையில் ஏற்கனவே இரு நோயாளர் காவு வண்டிகள் உள்ள போதிலும் ஒன்று பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் நோயாளர்களின் நலன்கருதி புதிய நோயாளர் காவுவண்டி வழங்கப்பட்டது.
இதேவேளை நோயாளர்களால் விடுக்கப்பட்ட வேண்டு கோளையடுத்து மகப்பேற்று நிபுணர் நடுவண் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டு நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.
**நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அ.கேதீஸ்வரன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமார் மற்றும் சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி4-9,56)**

### பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு

# கால மாற்றத்துக்கு ஏற்ற ஒழுக்கக்கோவை தேவை

## தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,யூலை 24

தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் காலத்துக்குரிய மாற்றங்களுடன் நடைபெற வேண்டும் என வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நீர்வேலியில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் வழக்கொழிந்து போகின்றன. இது வேதனை தருகின்ற விடயம். நீர்வேலியில் வண்டில் சவாரியைச் சிறந்த முறையில் நடத்தக்கூடிய திடல் உள்ளது. எனினும் கடந்த சில ஆண்டுகளாக இந்தப் போட்டிகள் நடைபெறுவதில் பல்வேறு இடையூறுகள் நிலவின. இதனால் போட்டிகள் தடைப்பட்டும் இருந்தன. இதன் பின்னர் மாட்டு வண்டிச் சாவாரிப்போட்டியை நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் வண்டில் சவாரிச் சங்கத்தினர் என்னுடன் பேசினர்.

சவாரியின் போது காளைகளுக்கு துன்புறுத்தல்கள் பிரயோகிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு விலங்குகள் ஆர்வலர்களால் பொலிஸ் நிலையத்தில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளே சவாரிப் போட்டிகளை நடத்துவதற்குத் தடையாக அமைந்தன என்பதைப் புரிந்து கொண்டேன்.

இந்த நிலையில் நாம் சகலருடனும் பேச்சுக்களை நடத்தி எதிர்காலத்தில் விலங்குகள் சித்திரவதை செய்யப்படாது நல்ல பல மாற்றங்களுடன் எமது பாரம்பரிய விளையாட்டினை மேற்கொள்ள அனுமதியைப் பெற்றுக் கொண்டோம்.

எனவே நல்ல மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு நாங்கள் இந்தத் திடலில் வெற்றிகரமாக இரண்டாவது தடவையாகத் தடைகள் இன்றி சவாரிப்போட்டியை நடத்துகின்றோம் என்பதை எண்ணி நாம் பெருமையடைய வேண்டும்.

எதிர்காலத்தில் எமது பாரம்பரிய விளையாட்டுகளை முன்கொண்டு செல்லும் முகமாகப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளுக்கான ஒழுக்கக் கோவை ஒன்றை நாம் தயாரிக்கவேண்டும். பாரம்பரிய விளையாட்டுக்களில் நிபுணத்துவம்உடையவர்களைக்கொண்டு இதனை நாம் வகுக்க வேண்டும். அதற்காக சகலரும் ஒத்துழைக்க வேண்டும். - என்றார்

## புலிகளால் அமைக்கப்பட்ட பெரிய பதுங்குகுழி அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

சுகாதாரப் பிரிவினரின் சிபாரிசைத் தொடர்ந்து பிரதேச சபையில் எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய பெரும் பதுங்கு குழி கனரக வாகனங்களின் உதவியுடன் அழிக்கப் பட்டுள்ளது.

வலி.தென் மேற்கு பிரதேச மானிப்பாய்பட்டினத்தில்செல்லமுத்து விளையாட்டு மைதானத்தின் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள திறந்த வெளியரங்கிற்கு பின்புறமாக விடுதலைப் புலிகளால் பெரும் பதுங்கு குழி அமைக்கப்பட்டிருந்தது. மழை காலங்களில் இப் பதுங்குகுழிக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதனால் நுளம்புகள் உற்பத்தியாவதுடன் துர்நாற்றமும் வீசிவந்தது.

இந்த நிலை குறித்து சுற்றாடலில் வசிக்கும் மக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு முறையிட்டமையையடுத்து பதுங்குகுழியை நேரில் சென்று பார்வையிட்ட சுகாதாரப் பிரிவினர் பதுங்குகுழியை அழிக்கவேண்டிய அவசியம் குறித்து பிரதேசசபைக்கு சிபாரிசு செய்திருந்தனர்.

சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து பிரதேச சபையில் எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பெரிய வாகனங்களின் உதவியுடன் பதுங்கு குழி அழிக்கப்பட்டது.

பதுங்குகுழியிலிருந்து மீட்கப்பட்ட பெரும் இரும்புப் கேடர்கள் இப்பிரதேசத்திலுள்ள மயானங்களின் அபிவிருத்தி வேலைக்குப் பயன்படுத்தப்படுமென்று தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார். (115)

## மாற்றுப்பயிரை முன்மொழியாது விட்டால் புகையிலையும் கடத்தல் பொருளாகும்

### மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 24

புகையிலைக்கு ஈடாக மாற்றுப் பயிரை முன்வைக்காமல் அதனைத் தடை செய்தால் தற்போது கஞ்சா கடத்தல் நடைபெறுவது போல எதிர்காலத்தில் புகையிலைக் கடத்தலும் இடம்பெறும் நிலை வரும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பான மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பான மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை அரசு புகையிலையைத் தடை செய்யவுள்ளதாகக் கூறிவருகின்றது. அவர்கள் கூறிய நாளில் இருந்து நாமும் புகையிலைக்கு மாற்றுப் பயிரைக் கொண்டுவரவேண்டும் எனப் பேசிக்கொண்டே இருக்கின்றோம். ஆனால் இன்றுவரை அதற்கு முறையான தீர்வைக் காணவில்லை. புகையிலைச்செய்கையின் ஊடாக்க் கிடைக்கும் வருமானத்தின் நிகராக நாம் மாற்றுப் பயிர்த் திட்டத்தைக் கொண்டுவந்தாக வேண்டும். அல்லது விட்டால் தற்போது வடக்கில் இடம்பெறும் கஞ்சா கடத்தல் போல எதிர்காலத்தில் புகையிலைக் கடத்தலும் இடம்பெறும் நிலையே உருவாகும் என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம், புகையிலைக்கு மற்றுப் பயிராக விவசாயத் திணைக்களத்தினர் வெங்காயத்தையும், பச்சை மிளகாயையும் முன்மொழிந்து வருகின்றனர். அவற்றின் ஊடாக ஓரளவு இலாபம் கிடைத்தாலும் இது முழுமையாக வெற்றியடைய வேண்டுமானால் எமது விவசாயிகளுக்கு இந்தப் பயிர்களை ஊக்குவிப்பதுடன் குறித்த நேரங்களில் வெளியில் இருந்து இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தாலே இது சாத்தியமாகும் என்றார். (21.8)

## விபத்தில் சிறுவன் காயம்

கொடிகாமம், ஜூலை 24

உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட உந்துருளி மோதியதில் வீதியால் சென்ற சிறுவன் காயமடைந்த சம்பவம் தவசிகுளம் மிருசுவில் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

தேவராசா நிதர்சன் (வயது -11) என்ற சிறுவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டார்

தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்வதற்காக வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தவேளை வீதியில் சென்ற உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட உந்துருளியில் வந்த பெண் ஒருவர் சிறுவனை மோதிவிட்டுச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (159)



யாழ்ப்பாணம், வட்டு கிழக்கு சித்தன்கேணி விநாயகர் கிராம நல்லொழுக்க சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் 30ஆவது ஆண்டு நிகழ்வும் 31ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் அண்மையில் நடைபெற்றது. கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பிரேமிலன் மங்கள விளக்கை ஏற்றி வைப்பதைப் படத்தில் காணலாம்.

## தரம் 5 மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை

கொடிகாமம் ஜூலை 24

மாணவர்களின் பெறுபேறுகள் தேர்ச்சி மட்டங்களை அதிகரிக்கும் நோக்கத்தில் யாழ்ப்பாணம் வரணிப் பிரதேசத்திலுள்ள 6 ஆரம்பப் பாடசாலைகளை ஒன்றிணைத்து தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாகாண மட்ட முன்னோடிப்பரீட்சையை நடத்தினர். ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. திருவாசகனின் வழிகாட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை வரணி மத்திய கல்லூரியில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்றது. (159)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்.ஜூலை 24

தீவகக்கல்வி வலயத்தில் அமைந்துள்ள வகை-II, வகை-III பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வகை -II யைச் சேர்ந்த பாடசாலைகளான யாழ்ப்பாணம் புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம், யாழ்ப்பாணம் காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம், யாழ்ப்பாணம் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைப் புனித மரியாள் றோ.க. வித்தியாலயம், யாழ்ப்பாணம் நாரந்தனை றோ.க.வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் வகை - III இனைச் சேர்ந்த யாழ்ப்பாணம் நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க. வித்தியாலயம், யாழ்ப்பாணம் அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை, யாழ்ப்பாணம் நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம், யாழ்ப்பாணம் மெலிஞ்சிமுனை றோ.க.வித்தியாலயம், யாழ்ப்பாணம் பாலாவோடை இ.த.க. பாடசாலை, யாழ்ப்பாணம் புங்குடுதீவு றோ.க. வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலய நிர்வாகப் பிரிவில் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு தீவக கல்விப் பணிப்பாளர் இளங்கோ தெரிவித்தார்.

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

சுதுமலை,ஜூலை 24

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் தொடர்பான விண்ணப்பங்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றம் கோரிக்கைகளின் அடிப்படையில் 2019 இல் அவர்கள் கடமையாற்ற விரும்பும் திணைக்களங்கள் அல்லது அமைச்சுக்கள் என்பனவற்றை முன்னுரிமை அடிப்படையில் தெரிவிக்க வேண்டும். மேற்படி விண்ணப்பங்கள் பிரதேச செயலகம்- மாவட்டச் செயலகங்கள் ஊடாக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (147)

## 'தஞ்சம்' சிறுகதை வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

க.சட்டநாதம் எழுதிய "தஞ்சம்" சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் மறுபாதிக்குழுமத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்வில் வரவேற்புரையை சி.ரமேஸ்சும், தலைமையுரையை பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும், மதிப்பீட்டுரைகளை த.அஜந்தகுமார், ந. குகபரன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

வெளியீட்டுரையை நிகழ்த்திய தி.செல்வமனோகரன் தெரிவிக்கையில்:

சட்டநாதம் 7 சிறுகதைத் தொகுதிகளை வெளியீட்டுள்ளார். இவர் 70 களிலே நூலை எழுத ஆரம்பித்தவர் இவருடைய நூல்கள் மத்திய தர வர்க்கத்தவர்கள் மட்டுமன்றி மேல் உள்ளவர்களது நிலைகளையும் எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளது - என்றார். (113)

# அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், மீசாலை கிழக்கு அருள்மிகு பன்றிக் கேணி கந்தசாமி ஆலயத்தின் (கதிர்காமக்கந்தன்) வருடாந்த அலங்காரத் திருவிழா உற்சவம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 26ஆம்திகதிவியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள்வெள்ளிக்கிழமைதீர்த்தத் திருவிழாவும் ஆலயகுரு சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (131)

# மோதலில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 24

நாவற்குளி, தச்சன்தோப்புப் பகுதியில் கடந்த சனிக் கிழமை இரவு இரு பகுதியினருக்கிடையில் இடம் பெற்ற மோதலில் இருவர் காயமடைந்துள்ளனர். இதில் இதே இடத்தைச் சேர்ந்த யோகேஸ்வரன் திலகன் (வயது 22) சத்தியசீலன் மதனராஜ் (வயது 26) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் சாவ கச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச் சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9)

## சமாதான நீதிவானாகப் பதவியேற்பு

வடமராட்சி,ஜூலை 24



யாழ்ப்பாணம், ஆவரங்கால் இந்து இளைஞர் மன்ற வீதியை சேர்ந்த பொன் கஜேந்திரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். கோப்பாய் பிரதேசசபை, இலங்கை செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றின் ஆயுள் கால உறுப்பினராகிய இவர் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய பழையமாணவராவார். வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் மருத்துவ மனை பதில் மேற்பார்வையாளாராக கடமையாற் றும் இவர் அச்சுவேலி ப.நோ.கூ சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினருமாவார். (173)

# புலமைப்பரிசில் நிகழ்வு

காரைநகர், ஜூலை 24

தேசிய சேமிப்பு வங்கி காரைநகர் கிளையால் நடத் தப்படும் கப்பன் புலமைப்பரிசில் நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் கிளை அலுவலகத்தில் முகாமையாளர் தி.மயூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ந.பகீர தனும், சிறப்பு விருந்தினர்களாகக் காரைநகர் கோட் டக் கல்விப்பணிப்பாளர் ஆ.குமரேசமூர்த்தி, யாழ்ற ரன் கல்லூரி அதிபர் தி.மதியழகன், ஊர்காவற்றுறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி.சுதாகர், வர்த்தகர் சு.செல்வக்குமார் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். கடந்த 2016 , 2017 ஆம் ஆண்டுகளில் தரம் ஐந்துப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த காரைநகர் தேசிய சேமிப்பு வங்கியில் சிறு வர் கணக்கினையுடைய மாணவர்கள் நிகழ்வில் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (250)



# மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், உடுவில் பிரதேச செயலக பிரிவிற்க் குட்பட்ட திடற்புலம் நரசிங்க வைரவர் ஆலய அற நெறி பாடசாலை மாணவர்களின் மாணிக்கவாச கர் குருபூசை நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் எஸ்.ரி.குமரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக துமி அமைப்பைச் சேர்ந்த வி.மகாசேனன் ஆ.துசேந் ஆகியோர் கலந்து கொண்டனர். அறநெறிப்பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் போட் டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

## கல்லுண்டாய் – காக்கைதீவு வெளியில்

# போக்குவரத்துக்கு இடையூறான கழிவுகள் உடன் அகற்றப்படும்

### மாநகரசபையுடன் கைகோர்த்து வலி.மேற்குப் பிரதேசசபை செயற்படுத்தும்

யாழ்ப்பாணம்,ஜூலை 24

கல்லுண்டாய் காக்கைதீவு பிரதேசத்தில் வாகனப் போக்குவரத்துக்க ளுக்கு இடையூறாகவும் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடுகளையும் ஏற்படுத்திவரும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு முன்வந்துள்ள வலி.தென் மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன் யாழ்ப்பாண மாக நர சபையினரின் உதவியை நாடிக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தவிசாளரின் கோரிக்கையை ஏற்று உதவ முன்வந்துள்ள மாந கர சபை முதல்வர் 10 சுகாதாரத் தொழிலாளர்களையும் 3 உழவு இயந்திரங்களையும் ஜெ.சி.பீ வாகனமொன்றையும் வழங்கு வதாக அறிவித்துள்ளார்.

காக்கைதீவு பிரதேசத்தில் கட்டுப் பாடின்றி வகைதொகையின்றி அதிகளவான திண்மக்கழிவுகள் நாளாந்தம் கொட்டப்படுவத னால் வாகனங்களின் போக்கு வரத்திற்கு இடையூறுகள் ஏற்படு வதுடன் துர்நாற்றம் வீசுவத னால் பொதுமக்களுக்குச் சுகா தார சீர்கேடுகளும் ஏற்படுகின் றன.

அந்த நிலை குறித்து வலி.தென் மேற்குப் பிரதேச சபை தவிசாள ருக்குச் சுட்டிக்காட்டியுள்ள பொது அமைப்புக்களும் பொதுமக்க ளும் இந்தப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணுமாறும் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் கழிவுகளை அகற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனுப்பி வைத் துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட் டதாவது:

காக்கைதீவு கல்லுண்டாய் வரையுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குட்பட்ட பாதைய ருகே பல்வகை கழிவுகளும் கொட்டப்பட்டு வருகின்றன. இத னால் அப்பகுதி மக்களும் அவ்வீ தியினைப் பயன்படுத்தும் மக்க ளும் பெரும் சுகாதாரக் கேட் டுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனால் இவ்வீதியோரக் கழிவு களை அகற்ற நடவடிக்கை எடுக் கவேண்டிய தேவை ஏற்பட்டுள் ளது. இவ்வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது என்பதனால் அவர்களுடன் வலி காமம் தென்மேற்கு பிரதேச சபையினரும் யாழ்ப்பாண மாந கர சபையினரும் இணைந்து முன்னெடுக்கும் பட்சத்தில் இத் திட்டத்தை வெற்றிகரமாகச்செயற்ப டுத்தலாம்.

பரந்த பிரதேசத்தில் அதிக கழிவு களை அகற்றவேண்டிய தேவை உள்ளமையால் இவ்வேலைத் திட்டத்துக்கு மனித வலுவுடன் இயந்திரங்களின் உதவியை யும் கூடுதலாகப் பயன்படுத்த வேண்டிய தேவை உள்ளது. எனவே இத்திட்டத்தில் பங்கேற் பதற்கு தங்களுக்கு இயலுமான காலப்பகுதியையினையும் தங் களால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளையும் எமக்கு அறியத்தரும் சந்தர்ப்பத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்பைக் கோரி எமது செயற்பாட்டுக் கால அட்டவ ணையை வழங்க உதவியாக இருக்கும் என் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. (115)



# பரிசளிப்பு நிகழ்வு



புலோலி,யூலை 24

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு ஆழிய வளை வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிச ளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.பாஸ்கரன் தலைமையில் அண் மையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருதங் கேணிப் பிரதேச செயலர் கெ.கனகேஸ்வ ரன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.திரவிய ராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (124)

# விவசாயக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 24

யு.என்.டி.பி. மற்றும் கேலிஸ் நடத்தும் விவசாயக் கண்காட்சி யும் இலவச சேவை முகாமும் 3 நாள்கள் இடம்பெறவுள்ளன. இன்று தெல்லிப்பழை கமநல சேவைகள் திணைக்களத்தில் முற்பகல் 9.30 மணி தொடக் கம் 1.30 மணிவரை கண்காட் சியும் நாளை வடக்கு பளை வீமன்காமம் கிராம செயலகத் தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும் மறு நாள் பலாலி கிழக்கு பலநோக்கு மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 வரையும் சேவை முகா இடம்பெறும்.

## பெருந்திருவிழா

புலோலி,ஜூலை 24

வடமராட்சி புலோலி உபயகதிர்காம முரு கன் ஆலயத்தின் வரு டாந்தப் பெருந்திரு விழா கடந்த 13 ஆம் திகதிவெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவங் கள் நடைபெற்று வரு கின்றன.

எதிர்வரும்27ஆம்திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (124)

* * *

காரைநகர், ஜூலை 24

யாழ்ப்பாணம், காரை நகர் அரசடிக்காடு கதிர் வேலாயுதசுவாமி கோயில் வருடாந்த தேர்த்திருவிழா எதிர் வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பெருந்திரு விழா கடந்த 13 ஆம் திகதிவெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

தீர்த்தத் திருவிழா 28 ஆம்திகதி சனிக்கிழமை இடம்பெறும் அன்று மாலை 5மணிக்கு ஆலய முன்றலில் தீமி திப்பு நிகழ்வு இடம்பெற உள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (250)

* * *

வடமராட்சி, புலோலி வடக்கு மருதடி குரும ணல் அருள்மிகு கந்த சாமி முருகன் ஆலயத் தின் வருடாந்த பெருந் திருவிழாகடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவங் கள் நடைபெற்று வரு கின்றன. தொடர்ந்து எதிர்வரும் 27ஆம்திகதி வெள்ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்குதேர்த் திருவிழாவும், மறு நாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (124)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

யாழ்ப்பாணம், முத்துத்தம்பி மகாவித்தி யாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்ட பத்தில் பிற்பகல் 1 மணிக்கு அதி பர் ஆர். பசுபதீஸ்வரன்தலைமையில்இடம்பெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பா ணம், கல்வி வலயப் பணிப்பாளர் எப். எக்ஸ்.அன்ரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள தாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# விபத்து

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி யும், நாவலர் வீதியும் சந்திக்கும் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டி சேதமடைந்துள்ளது. உந்துருளி வீதிக்கு குறுக்காக வந்தமையினால் முச்சக்கர வண்டி சாரதி நிலைகுலைந்த மையாலே விபத்துச் சம்பவித்தா கத் தெரிவிக்கப்படுகின்றது. எவ ருக்கும் காயங்கள் ஏற்படவில் லை. (5,114)

# யாகப்பர் ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை, ஜூலை 24

யாழ்ப்பாணம், பலாலி தெற்கு வயாவிளான் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா நண்டபெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் நாளை புதன்கிழமை காலை 7.30மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச் சொரூப பவனியும் இடம்பெறும்.

இப்பகுதியில் முழுமையான மீள்குடியேற்றம் இடம் பெற்றமையால் யாத்திரிகர்களின் வசதி கருதி யாழ்ப் பாணம் பருத்தித்துறை பகுதிகளில் இருந்து இலவச போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள் ளதாக பங்குத் தந்தை அருட்பணி சி.ஜே.ஜெயக்கு மார் அடிகள் தெரிவித்துள்ளார்.

இன்று மாலை 4.30மணிக்கு யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் முன்பாக இருந்து பய ணிக்கும் பேருந்து கோப்பாய் புனித மரியாள் ஆல யம் அச்சுவேலி ஊடாக ஆலயத்தைச் சென்றடை யும். அதேவேளை பருத்தித்துறை புனித அந்தோ னியார் ஆலயத்திலிருந்து இன்று மாலை 4.30மணிக்குப் பயணிக்கும் பேரூந்து சாரையடி ஊடாக ஆலயத்தைச் சென்றடையும். அதே போன்று நாளை காலை 6.30 மணிக்கும் குறித்த ஒழுங்கில் பேருந்துச் சேவை இடம்பெறும். (135)

# சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாண வர்களின் சிறுவர் சந்தை நேற்று கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் அதிபர் திருமதி லலி தமலர் முகுந்தனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (9)



## மகிந்த...

மன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் இந்தச் சந்திப்புத் திடீரென நிகழ்ந்துள்ளது.

இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தால், சீன இராணுவத்தின் 91ஆவது சம்மேளன நிகழ்வு கொழும்பு சங்கிரிலா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்கு வருகை தந்தபோதே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. அங்கு அரசமைப்பு வரைவுக்கான நகல், நிபுணர் குழுவால் முன்வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மகிந்த அணியினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் அணியினரும், நாடாளுமன்றத்தில் சர்ச்சையைக் கிளப்பியிருந்தனர்.

திருட்டுத்தனமான புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே சம்பந்தனுக்கும், மகிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில், மகிந்தவுடன் சம்பந்தன் பேச்சு நடத்துவார் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்த மாத ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தார். எனினும் இதுவரையில் அந்தச் சந்திப்பு நடைபெறாத நிலையில் நேற்றைய சந்திப்புத் திடீரென நடந்துள்து. சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்த உத்தியோகபூர்வமான தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. எனினும் இந்தச் சந்திப்பில் புதிய அரசமைப்புக்கு மகிந்தவின் ஆதரவை சம்பந்தன் கோரினார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## டெனீஸின்...

மேன்முறையீட்டு நீதிமன்றம்.

தன்னைப் பதவியில் இருந்து நீக்கியமைக்கு எதிராக டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கை விசாரித்த நீதிமன்று அமைச்சரைப் பதவி நீக்கிய முறைமை தவறு என்றும் அவர் தனது அமைச்சுப் பதவியில் தொடரலாம் என்றும் இடைக்காலக் கட்டளை பிறப்பித்தது.

இந்த இடைக்காலக் கட்டளையை எதிர்த்து முதலமைச்சர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்குக்குத் தேவையான ஆவணங்களின் மூலப் பிரதிகளை இணைக்குமாறு கட்டளையிட்டது நீதிமன்றம்.

எனினும் முதலமைச்சர் தரப்பு இன்னமும் தமது ஆட்சேபனையை முழுத் தாக்கல் செய்யவில்லை. இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் தரப்போ மேன்முறையீட்டு நீதிமன்று வழங்கிய இடைக்காலக் கட்டளை தொடர்பில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில், டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று ஏற்கனவே வழங்கிய இடைக்காலக் கட்டளையை அடுத்த மாதம் 9ஆம் திகதி வரையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நீடித்துள்ளது.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் கடந்த 9ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் சார்பில் அவரது சட்டத்தரணி லக்ஸ்மன் ஜெயக்குமார் முன்னிலையானார். இடைக்காலத் தீர்ப்பை நீடிக்கக் கூடாது என்றும், உயர்நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மன்றில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் முதலமைச்சர் தரப்புச் சட்டத்தரணிகளிடம் ஆட்சேபனைகளை 23ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்வதற்கு மன்று அவகாசம் வழங்கியிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வடக்கு முதலமைச்சர் தரப்பு ஆட்சேபனை சமர்பிக்க இரண்டு வார அவகாசத்தை கடந்த அமர்வில் கோரியிருந்தது. இரண்டு வார கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ள நிலையில், முதலமைச்சர் தரப்பினால் ஆட்பேசனைக்கான சான்றாதாரங்கள் இணைக்கப்படவில்லை. (உ-5)

## நாடாளுமன்றுக்குள்...

ளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

நாடாளுமன்ற அமர்வுகளில் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மா மற்றும் எண்ணெய் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகளை வழங்குவதற்குப் பதிலாகவே பழங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு, விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளை அண்மித்த இடங்களில், மா மற்றும் எண்ணெய் கொண்டு தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்படுவதாகவும், இதனைத் தடுப்பதற்காக பதப்படுத்தப்பட்ட பழங்களைப் பாடசாலைக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்துவது சிறந்ததெனவும் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், பாடசாலை மாணவர்களுக்கு முன்னுதாரணமாக நாடாளுமன்ற மற்றும் அமைச்சரவையில் இதனை முதலில் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழம், மாம்பழம், தோடம்பழம், அன்னாசி, பலாப்பழம் உள்ளிட்ட பழங்களைப் பதப்படுத்தி நாடாளுமன்ற மற்றும் அமைச்சரவை சந்திப்புகளின்போது, வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும், அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (உ-21)

## கறுப்பு...

யாழ்ப்பாணம்.ஜூலை 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலையின் 35 ஆவது ஆண்டு நிறைவு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பல்கலைகழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றன.

நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக பல்கலைக்கழக மாணவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற இந்தக் கலவரத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. (ரி4,7)

## செம்மணியில்...

செம்மணி வீதியில் நீர்த்தாங்கி அமைக்கும் பணிக்காக நிலம் தோண்டப்பட்டபோது மண்டை ஓடு, மற்றும் எழும்பு எச்சங்கள் இனங்காணப்பட்டன. சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதையடுத்து அந்த இடத்தில் மட்டும் கட்டுமானப் பணி நிறுத்தப்பட்டது.

யாழ். நீதிவான் மன்ற நீதிவான் எஸ்.சதீஸ்கரன் சம்பவஇடத்திற்குச் சென்று நிலமையை நேரில் ஆராய்ந்தார். சட்ட வைத்திய அதிகாரியைக் கொண்டு சோதனைகளை நடத்துமாறு பணித்தார்.

சட்ட மருத்துவக் குழு கடந்த ஞாயிற்றுக் கிழமை சம்பவ இடத்திற்கு வருகை தந்தது. எனினும் பொலிஸ் உயர் அதிகாரி வருகை தராத காரணத்தால் அன்றைய தினம் அகழ்வுப் பணி நடக்கவில்லை. இன்று செவ்வாய்க் கிழமை தொடங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-21,8)

## வடக்கு...

களத்துக்கு மாவட்ட நீதிமன்று இரண்டுவார கால அவகாசம் வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மருந்தகங்கள் நான்கின் மீது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ரி. பூங்கோதையின் கட்டளைக்கு அமைவாக மாவட்ட உணவு மருந்தகப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பதிவுகள் ஏதுமின்றி இயங்கின என்ற குற்றச்சாட்டு மருந்தக உரிமையாளர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. அந்த வழக்கின் இரண்டாம் கட்ட விசாரணை நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மன்று சுகாதாரத் திணைக்களத்துக்கு கால அவகாசம் வழங்கியது.

கடந்த ஜூன் மாதம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் முல்லைத்தீவு மாவட்ட மருந்தகங்களில் சேதத்னை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். இதன்போது அங்குள்ள நான்கு மருந்தகங்கள் அனுமதிகள் இன்றி இயங்குகின்றன என்ற குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார். அதன்படி முறையான அனுமதி பெறாமல் இயங்குவதால் அந்த நான்கு மருந்தகங்களையும் மூடுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் ஜூன் மாதம் 18 ஆம் திகதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜூன் 21ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. மருந்தக உரிமையாளர்கள் ஜூலை 18ஆம் திகதியன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மன்று கடிதம் அனுப்பியது. 18ஆம் திகதியன்று உரிமையாளர்கள் முன்னிலையாகி நியாயமான கோரிக்கையை முன்வைத்தனர்.

பிராந்திய பணிப்பாளரால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு அமைவாக மருந்துகள் வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டதன் பின்னரே மருந்தகங்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது என்று அவர்கள் மன்றில் சுட்டிக்காட்டினர். அன்றைய முல்லைத்தீவு மாவட்ட உணவு மருந்துகள் பரிசோதகரும் மன்றில் முற்பட்டார். அவரிடம் நீதிபதி வினவினார். முழுமையான விவரம் மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடமே உண்டு அவரே மன்றில் தெரிவிக்க வேண்டும் என்று உணவு மருந்துகள் பரிசோதகர் தெரிவித்தார். நேற்று வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. பிராந்தி சுகாதாரப் பணிப்பாளரை மன்றில் முன்னிலையாகுமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

நேற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின் குமார் முன்னிலையில் வழக்கு விசார ணைக்காக மருந்தகங்களின் உரிமையாளர்கள் சார்பாகச் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் 12 சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

கடந்த காலங்களில் குறித்த மருந்தக உரிமையாளர்கள் பல தடவைகள் மருந்தகங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தபோதும் அதற்கான அனுமதியோ அல்லது பதிலோ பிராந்திய சுகாதாரப் பணிமனையால் வழங்கப்படவில்லை என்று சட்டத்தரணிகள் மன்றில் சுட்டிக்காட்டினர். இதுதொடர்பில் நீதிபதி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரை வினவினார். வழக்கைத் தொடர்ந்து நடத்த விருப்பமா அல்லது வாபஸ் வாங்குவதா என்பது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்குமாறு நீதிபதி சுகாதாரப் பணிப்பாளருக்கு கட்டளையிட்டார். வழக்கு வழக்கு எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-21,ரி3)

## உத்தியோகபூர்வ...

இல்லத்தை வாடகைக்குப் பெற்றுத் தருமாறு மேயர் ஆர்னோல்ட் கடந்த மாதம் சபையிடம் கோரியிருந்தார். சபைக் கூட்டத்தில் இது விவாதிக்கப்பட்டு மேயரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கமைய சுண்டுக்குழிப் பகுதியில் மேயரின் பயன்பாட்டுக்கென ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வாடகை வீட்டுக்கான ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்காக மாநகர சபை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கவனத்திற்கு இந்த விடயத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொண்டு சென்றிருந்தார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், மாநகர மேயர் ஒருவருக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்குவது தொடர்பில் சட்ட ஏற்பாடு கிடையாது எனத் தெரிவித்து அதற்கு அனுமதி மறுத்துள்ளார்.

மாநகர சபையின் அடுத்த அமர்வில் இந்த விடயம் சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-105)

## பெற்ற...

வரை திருப்பி வழங்காதமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்ய எண்ணியுள்ளதாக வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இணைத் தலைவர்களில் ஒருவராக இருக்கின்றார்.

தனது குற்றச்சாட்டுப் பற்றி டெனீஸ் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் பேரவையின் தொடக்கத்தில் எழுக தமிழ் நிகழ்வு ஏற்பாட்டிற்காக கடனாக ரூபா 2 லட்சம் தந்துதவுமாறும் குறுகிய கால இடைவெளியில் அதனை மீளத் தருவதாகவும் கூறினார்கள். புலம்பெயர் தேச உறவுகளின் உதவிப் பணம் கிடைக்க காலதாமதமாகின்றமையினால் இந்த உதவியைச் செய்யுமாறு கேட்டனர். பேரவையின் உறுப்பினர் ஒருவர் ஊடாக என்னிடமிருந்து கடனைப் பெற்றனர். என்னிடம் கையில் பணம் இருக்காத காரணத்தால் எனது நண்பன் ஒருவரிடம் இருந்து 2 லட்சம் பணத்தை பெற்றுக்கொடுத்தேன். இரண்டு வருட காலமாக பணத்தை திரும்ப கேட்கிறேன். ஆனால் தருகிறார்கள் இல்லை. தருகிறேன் தருகிறேன் என்று கூறி அண்மையில் ஒரு லட்சம் ரூபா தந்தனர். மிகுதி ஒரு லட்சம் ரூபாவினை திரும்பி தரவில்லை .

இப்போது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்தால் அதற்குப் பதில் இல்லை இவ்வாறு அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரும் மருத்துவ நிபுணருமான லக்சுமனிடம் தெரிவித்தேன். அவர் உரியவர்களுக்குத் தகவல்களை வழங்கிப் பணத்தை பெற்றுத் தருவதாகக் கூறினார். ஆனாலும் எஞ்சிய தொகையான ஒரு லட்சம் ரூபா இன்று வரை கிடைக்கவே இல்லை. பணம் வழங்கும் போதும் அதில் அரைவாசியைத் திரும்பித் தரும் போதும் வங்கி ஊடாகவே கொடுக்கல் வாங்கல் நடைபெற்றது. இது தவிர வேறு ஆதாரங்களும் உள்ளதன் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்யவுள்ளேன். இதற்காக தற்போது சட்ட உதவியை நாடி உள்ளேன். அதன் பிரகாரம் இதனுடன் தொடர்பு பட்டவர்களுக்குச் சட்டத்தரணி ஊடாகக் கடிதம் அனுப்பிவைக்கப்படவுள்ளது என்றார்.

இவ்வாறு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை இணைத் தலைவர்களில் ஒருவரான மருத்துவர் லக்ஸ்மனிடம் உதயன் தொடர்பு கொண்ட கேட்டது. இது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி தொலைபேசியை அவசரமாகத் துண்டித்தார் அவர். (உ-7,,105)

## அமர்வுக்கு...

கர சபையின் 4ஆவது அமர்வு கடந்த மாதம் 26ஆம் திகதியும் அதன் தொடர்ச்சி 29ஆம் திகதியும் யாழ்ப்பாணம் மாநகர சபையில் இடம்பெற்றது. இருப்பினும் குறித்த இரு நாள்களும் சபைக்குச் சமூகமளிக்காத இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரின் ஒப்பம் வரவுப் பதிவேட்டில் இடப்பட்டுள்ளது.

இந்தக் கள்ள ஒப்பம் தொடர்பில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்திற்குக்கொண்டு செல்லப்பட்டதன் அடிப்படையில் பிராந்திய ஆணையாளர் தற்போது மாநகர ஆணையாளரிடம் இது தொடர்பில் விளக்கம் கோரியுள்ளார். (உ-105)

## செம்மணி...

செய்யும் பணிகளிலும் பன்னாட்டு நிபுணர்கள் குழுவை அனுமதிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா.

"இலங்கை இராணுவத்தால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களை அம்பலப்படுத்துவதற்கு, அவற்றை ஆதாரத்துடன் உலக நாடுகள் அறிவதற்கு தற்போது வடக்கு மாகாணத்தில் மீட்கப்படும் மனித எலும்புக் கூடுகளும் ஒரு சாட்சி. எனவே அவற்றைப் பகுப்பாய்வு செய்து போர்க் குற்றத்தை நிரூபிக்க பன்னாட்டு நிபுணர் குழுவை அரசு அனுமதிக்க வேண்டும்" என்றார் அவர்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் முடிவில் ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான செம்மணியில் கடந்த சில நாள்களுக்கு முன்னதாக நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மனித எலும்புக் கூடு கண்டறியப்பட்டது. தண்ணீர்த் தாங்கி அமைப்பதற்காக அங்கு குழி தோண்டியபோது இந்த எலும்புக்கூடு கண்டறியப்பட்டது.

வடக்கு மாகனத்தின் பல பிரதேசங்களிலும் அண்மைய நாள்களாக மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு வருகின்றன. இந்த நாட்டில் எந்தளவுக்கு மனிதப் படுகொலை இடம்பெற்றுள்ளது என்ற உண்மைகள் இப்போது மெல்லமெல்ல வெளிவரத் தொடக்கி விட்டன. எனவே அரசு இந்த விடயத்தில் நேர்மையாகச் செயற்பட வேண்டும். அதற்கு இங்கு உடனடியாக வெளிநாட்டு நிபுணர் குழுவைப் பகுப்பாய்வுக்காக அனுமதிக்க வேண்டும். போரின்போதும் அதற்கு முன்னைய காலத்திலும் எத்தனையோ தமிழர்கள் காணாமல் ஆக்கப்படுள்ளனர், கைது செய்யப்பட்டு காணமல் போயுள்ளனர். அவ்வாறானவர்களும் இறந்திருக்கலாம் எனக் கூறபட்டுவரும் நிலையில் மீட்கப்படும் மனித எலும்புக் கூடுகள் யாருடையது என்பது துல்லியமாகக் கண்டறியப்பட வேண்டும். அத்துடன் இந்த எலும்புக் கூடுகள் மீட்கப்படுவதையும் அது யாருடையது என்பதையும் நாமும் உலகமும் அறிய வேண்டும். இலங்கையில் போர்க் குற்றம் நடந்தது என்பதற்கு இதுவும் ஒரு சாட்சியாகும். பன்னாட்டு நிபுணர்கள் ஆய்வு செய்து உண்மையைக் கூறுவதன் மூலமே போர்க் காலத்திலும் அதற்கு முன்னரும் இலங்கை இராணுவத்தினர் எந்தளவுக்கு போர்க்குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நிரூபிக்க முடியும். எனவே இதனை நாம் முறையாக அணுக வேண்டும் -என்றார். (உ-21,8)

## கூட்டரசில் இணைய மறுத்ததால் என்னைப் பழிவாங்குகின்றனர்

### முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் நீதிமன்றில் தெரிவித்தார்



கொழும்பு, ஜூலை 24
கூட்டரசில் இணையுமாறுதனக்குக்கிடைத்த அழைப்பைமறுத்ததன் காரணமாக, தன்னைப் பழி வாங்கும் நோக்கிலேயே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தனக்கு எதிராகவழக்குதாக்கல் செய்துள்ளது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ கொழும்பு நீதிவான் மன்றில் தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு அவருடைய வருடாந்த சொத்துக்கள் மற்றும்வருமானம்தொடர்பானவிவரங்களைவழங்காத குற்றத்துக்காக, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவுக்கு எதிராக நீதிமன்றில்வழக்குத் தொடுத்தது.

அந்த வழக்கு கொழும்பு தலைமை நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2015 ஆம் ஆண்டு கூட்டரசு நியமிக்கப்பட்ட பின்னர் அமைச்சர்பதவியையும்பெற்றுக்கொண்டுஅரசில்இணையுமாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தனக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்று எதிரிக் கூண்டில் இருந்தவாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

அந்த அழைப்பை மறுத்ததன் காரணமாகவே அன்று தொடக்கம்என்னைப்பழிவாங்க ஆரம்பித்துள்ளனர். இதனால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பல்வேறு வழக்குகளைத்தனக்குஎதிராகதொடர்ந்துள்ளதுஎன்றுஅவர்மேலும் தெரிவித்தார்.

2010ஆம்ஆண்டுவருடாந்தசொத்துக்கள்மற்றும்வருமானம்தொடர்பானவிவரங்களைமுன்னாள்அரசதலைவரிடம்ஒப்படைக்கநடவடிக்கைஎடுப்பதாகவும்அதனால்தன் மீது தொடரப்பட்டுள்ள வழக்கு அடிப்படையற்றது என்றும் தன்னை விடுதலை செய்யுமாறும் அவர் மன்றில் கோரினார்

குறித்த வழக்கை ஓகஸ்ட் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு தலைமை நீதிவான் ரங்க திஸாநாயக்க கூறினார். வழக்கு அன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4)

## தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பன்னாடுகளிடம் தாரைவார்ப்பு

### ஜே.வி.பி. கடுமையாகச் சாடுகிறது



கொழும்பு, ஜூலை 24
**நாடு தொடர்பான தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் கூட்டரசு தற்போதுபன்னாட்டுத்தூதர்களிடம்வழங்கியுள்ளது. அரசதலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில்தலைமையிலான இந்தச் செயற்பாடுநாட்டின்சுயாதீனத்தைக்கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க கடுமையாகச் சாடியுள்ளார்.**

அநுராதபுரம்கரம்பாவேபிரதேசத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றமக்கள் சந்திப்பில்உரையாற்றுகையில்அவர் இவ்வாறு சாடினார். அதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் நிலைமை தற்போது எவ்வாறு உள்ளது என்பதை நான் கூறுகின்றேன். பொருளாதார மைய நிலையங்கள், முதலீடுகள், கேந்திர நிலையங்கள் அனைத்தும் வெளிநாடுகளின் கைகளில் உள்ளன.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் பொருளாதார மைய நிலையம். சீனாவிடம் உள்ளது. மத்தள வானூர்தி நிலையம் இந்தியாவுக்குவழங்கப்படவுள்ளது. எந்தவொரு நாடும் இன்னொரு நாட்டுக்கு கடல் அல்லது ஆகாய மார்க்கமாக உள்நுழைய முடியும். அவ்வாறு இருக்கையில் துறைமுகத்தைச் சீனாவுக்கு வழங்கி விட்டு வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்குவழங்குகின்றார்கள். இதுவா நாட்டின் சுயாதீனத்தன்மை?

**பருப்புப் போட அவசியமில்லை**

1987ஆம்ஆண்டுபோன்றநிலைமை மீண்டும் ஏற்பட்டால் இந்தியா ஆகாய மார்க்கமாக வந்து பருப்புப் போட வேண்டிய அவசியமில்லை. மத்தள வானூர்தி நிலையத்தின் ஊடாக நேரடியாகவே வந்து இறங்கிவிட முடியும். ஆகவே நாட்டின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாகியுள்ளது.

அண்மையில் தேசிய கணக்காய்வுச் சட்டத்தைநிறைவேற்றினார்கள். அது பன்னாட்டு நாணய நிதியத்தின் தேவைக்காகவே நிறை வேற்றப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஒருபுறமிருக்கையில் கூட்டு அரசிலுள்ள அரசதலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் பிரச்சினை ஏற்பட்டபோது வெளிநாட்டுத்தூதர்களைநோக்கியே ரணில் விரைகின்றார். பிரச்சினையைத் தீர்த்து வைப்பவர் அமெரிக்கத் தூதராகஇருக்கின்றார். எமதுநாட்டின் பொருளாதார, அரசியல், தீர்மானங்களைச் சுயாதீனமாக எடுக்க முடியாத நிலைஏற்பட்டுள்ளீது - என்றார். (4)

## காட்டுயானை பார்த்த வேலையால் கால்வாய்க்குள் புரண்டது பாரவூர்தி

கொழும்பு, ஜூலை 24
தெற்கில் தலாவவிலுள்ள குமரெலிய என்னும் இடத்தில் காட்டுயானையொன்றின்அட்டகாசம்அதிகரித்துள்ளதாகப் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பிட்ட அந்தப் பகுதியில் பார ஊர்தியொன்றைச் செலுத்திவந்த சாரதி வீதியில் யானையொன்று நிற்பதை அவதானித்துத் தனது வாகனத்தை நிறுத்திவிட்டு சற்று ஒதுங்கிஇருந்துள்ளார். பாரவூர்திக்குஅருகேவந்தயானை அந்தப் பாரவூர்தியை அருகிலிருந்த கால்வாயில் தள்ளிவிட்டுள்ளது. வாகனம்மட்டுமேபாதிக்கப்பட்டுள்ளது. சாரதி தப்பிக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## பொலிஸாரின் தண்டப் புத்தகத்தை கிழித்தெறிந்து தப்பியோடிய முன்னாள் இராணுவ அதிகாரி கைது

கொழும்பு, ஜூலை 24
போக்குவரத்துக்கடமையிலிருந்தபொலிஸாரின்போக்குவரத்துவிதிமீறல் தண்டப் புத்தகத்தைப் பறித்துக் கிழித்தெறிந்து விட்டுத் தப்பிச் சென்றார், என்ற குற்றச்சாட்டில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம்நேற்றுமுன்தினம்இடம்பெற்றதுஎன்றுபொலிஸார்தெரிவித்தனர். குறித்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி தனது குடும்பத்தினருடன் காரில் தெற்கு அதிவேக வீதியின் வெலிபன்ன நுழைவாயில் வழியாக நுழைய முற்பட்டார். போக்குவரத்துப்பொலிஸார்குறித்தகாரைநிறுத்திபரிசோதனை மேற்கொண்டனர்.

சாரதியானஓய்வுபெற்றஇராணுவஅதிகாரியின்சாரதிஅனுமதிப்பத்திரத்தைப் பொலிஸார் கேட்டபோது, திடீரென கடமையிலிருந்த பொலிஸாரின் கையிலிருந்த தண்டம் விதிக்க எழுதும் புத்தகத்தைப் பறித்துக் கிழித்தெறிந்து விட்டுக் காரில் தப்பி வேகமாகச் சென்றுள்ளார்.

இதனையடுத்து தெற்கு அதிவேக வீதியின் பின்னதுவ பகுதியில் வைத்துக் காரைமடக்கிப்பிடித்தவெலிபன்னபொலிஸார்குற்றத்துடன்தொடர்புடைய சந்தேக நபரைக் கைதுசெய்தனர். அவர் மதுகம நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

அரச வாகன முறைகேட்டுக்காக

## சு.கவின் அமைப்பாளருக்கு 12 வருட சிறைத்தண்டனை

கொழும்பு, ஜூலை 24
வலப்பனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருக்கு 12 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டு அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்ற குற்றத்துக்காகவே அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் வலப்பனை தேர்தல் தொகுதிக்கன சிறிலங்காசுதந்திரக்கட்சியின்அமைப்பாளராகச்செயற்பட்டுவருகின்றார். (4)



## விபத்தில் சாரதி காயம்

வாகன விபத்தில் ஒருவர் பலத்த காய்ங்களுக்குள்ளாகி கொட்டகலை பிரதேச மருத்துவமனையில்சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார்தெரிவித்தனர்.

சம்பவம் கட்டன் நுவரெலியா முதன்மை வீதியில் திம்புளைப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லொக்கீல் சந்தியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

ஒன்றின் பின் ஒன்றாகப் பயணித்த வான் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியன லொக்கீல் மோதி விபத்துக்குள்ளாகின. முச்சக்கர வண்டிச் சாரதி பலத்த காயமடைந்தார். பத்தனை பொலிஸார் விசாரணை செய்கின்றனர். (4)

## சினிமாப் பாட்டுப் பாடியவரை துரத்திக் கடித்தன நாய்கள்!

### அவற்றின் உரிமையாளர்கள் சிக்கலில் மாட்டியுள்ளனர்

தென்மராட்சி, ஜூலை 24
மதுபோதையில் சினிமாப் பாடல்களைப் பாடியவாறு வீதியில் சென்ற குடும்பத் தலைவரை மூன்று நாய்கள் துரத்திக் கடித்துக் குதறியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம்தென்மராட்சிப்பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

நாய்களால் கடியுண்டவர் (வயது - 58) பலத்தகாயங்களுடன் சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுஒருபுறமிருக்கஅந்தநாய்களின்உரிமையாளர்கள்சிக்கலில்மாட்டியுள்ளனர். பொதுமக்கள்நடமாடும்பகுதியில்கடிநாய்களைக் கட்டி வளர்க்காமல் வைத்திருந்தனர் என்றும் அதனால்தான் வழிப்போக்கரை நாய்கள் கடித்துக் குதறின என்றும் அவர்கள்மீது பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (4.9)

நல்லூர் பிரதேச செயலகத்தில்

## நேர்முகப் பரீட்சையில் தோற்றாதோர் வரவும்

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவை மேற்கொண்டு நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றத் தவறிய வேலையற்றபட்டதாரிகளுக்குமீண்டும்ஒருசந்தர்ப்பம்வழங்கப் படவுள்ளது.

இதற்காக நாளை புதன்கிழமையன்று காலை 8.30-9.30வரைநல்லூர்பிரதேச செயலகத்தில்நேர்முகப்பரீட்சையொன்று நடத்தப்படவுள்ளது. எனவே பதிவை மேற்கொண்ட இதுவரை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத வேலையற்றபட்டதாரிகள் உரிய ஆவணங்களுடன் குறித்த நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என்றுபிரதேசசெயலர்தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்குப்பயிற்சிவழங்குதல் - II ஆம் கட்டத்தில், நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவைமேற்கொண்டவர்களுக்கானநேர்முகப்பரீட்சை கடந்த 16ம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நல்லூர் பிரதேசசெயலகத்தில் இடம்பெற்றது என்று செயலர் மேலும்தெரிவித்தார். (4)

கேலிச்சித்திரம்




# மகிந்தவுக்கு அநுர சவால்



கொழும்பு, ஜூலை 24
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, சீனாவிடமிருந்து 7.6மில்லியன் டொலர்கள் பெற்றுக்கொண்டார் என்பதை உறுதிப்படுத்த நாம் தயாராகவே உள்ளோம். அதுபற்றிமகிந்தவுக்குநாம் சவால் விடுக்கிறோம். அதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

இவ்வாறுமக்கள்விடுதலைமுன்னணியின்தலைவர்அநுரகுமாரதிசாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றநிகழ்வுஒன்றில்உரையாற்றும்போதுஅவர் இவ்வாறுசவால்விடுத்தார்.

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச அம்பாந்தோட்டைத் துறைமுக விடயத்தில் நிதி பெற்றமை தொடர்பான நியூயோர்க் ரைம்ஸ் செய்தி பற்றி நாடாளுமன்றில்கடந்தவாரம்விவாதம்இடம்பெற்றது. அதில் கலந்து கொள்ளாது விட்டால் பரவாயில்லை.

அந்த விடயம் சம்பந்தமாக வெளியில் எங்காவது அவருடன் விவாதத்துக்கு வரத் தயாராகவே இருக்கின்றோம்.

அவர்சீனாவிடமிருந்து 7.6மில்லியன் டொலர்கள் பெற்றுக்கொண்டார் என்பதைநாம்உறுதிப்படுத்துவதற்குத்தயாராகவே உள்ளோம். அவருக்கு நாம் சவால் விடுக்கிறோம். அவர் ஏற்றுக்கொள்வாரா?7.6மில்லியன்பெற்றமை பிரச்சினையல்ல, நாட்டின்பொருளாதாரம் பன்னாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. நுரைச்சோலையில் இந்தியா முதலீடுகளைச் செய்வதற்கு முன்வந்தபோதுஅதனைஇடைமறித்து சீனாவுக்கு வழங்கப்பட்டது.

இந்தியா கோபமடைந்த பின்னர் சம்பூரை வழங்குவதாக இந்தியாவுக்குக் கூறப்பட்டது. இவ்வாறுதான் நிலைமைகள்உள்ளன-என்றார். (4,31)

# எரிபொருள் தாங்கி தயாரிப்பு 40 வீதம் முழுமை

கொழும்பு, ஜூலை24
புதிய எரிபொருள் தாங்கியைத் தயாரிக்கும் பணிகளில் 40 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது. தவிர மேலும் இரு தாங்கிகளைத் தயாரிப்பதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளதாகவும் கூட்டுத்தாபனத்தின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார். (4)

## தேர்தலை மையப்படுத்தாது

# புதிய அரசமைப்பை உருவாக்க சகல தரப்பினரும் இணையுங்கள்

## அறிவுறுத்துகிறார் ஜயம்பதி விக்கிரமரட்ன



**கொழும்பு, ஜூலை 24**
**தேர்தலை மையமாக வைத்து அதனை முன்னிலைப்படுத்திய செயற்பாடுகளை நகர்த்துவதை அனைவரும் தவிர்த்து, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அனைவரும் இணைந்து செயற்படவேண்டும்.**

இவ்வாறு அரசதலைவர் சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார்.

கேகாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்னில்உரையாற்றுகையில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

2015 ஜனவரி எட்டாம் திகதி 2015ஆம் ஆண்டு மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று மக்களுக்குவாக்குறுதிஅளித்தேநாம் ஆட்சிக்கு வந்தோம். மூன்று ஆண்டுகளாகின்றன. முதல் இரண்டுவருடங்களும்சில விடயங்களில்ஆர்வம்காட்டப்பட்டது. குறிப்பாகப் புதிய அரசமைப்பு உருவாக்கம்தொடர்பில்நடவடிக்கைகள் எடுப்பட்டன. இறுதியாக நடைபெற்ற அரசதலைவர் தேர்தலே இறுதி நிறைவேற்று அதிகார அரசதலைவர் தேர்தல் என்றுகூறப்பட்டது.

ஆனால்தற்போதுஅரசதலைவர் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதுதொடர்பில்பேசப்படுகின்றது. ராஜபக்ச தரப்பினர் அது தொடர்பில் துள்ளிக்குதிப்பார்களாயின் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும்அது பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். அரசதலைவர்வேட்பாளர்யார்என்பதுதொடர்பான தேடுதல்கள் ஆரம்பமாகியுள்ளன. இது மிகவும் கவலைக்குரியவிடயம்.

19ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இரண்டு அதிகார மையங்கள் தோற்றம்பெற்றுள்ளன. இதனால் தற்போது அதிகாரப் போட்டியே நடைபெறுகின்றது. தற்போது தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவேன் என்று அரசதலைவர் கூறுகின்றார். அதில் உடன்படாத நிலைமையைத் தலைமை அமைச்சர் கொண்டிருக்கின்றார். அமைச்சரவையின்தலைவராகஅரசதலைவர் இருக்கின்றார். இவ்வாறான நிலைமைகள்தான் உள்ளன.

ஆகவேதான், தேர்தலை மையமாக வைத்து அதனை முன்னிலைப்படுத்திய செயற்பாடுகளை முன்னெடுப்பதை அனைவருமே தவிர்த்துப் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு அனைவரும்இணைந்துசெயற்படவேண்டும் - என்றார். (4,31)

# சிங்கப்பூர் – இலங்கை ஒப்பந்தப்படி இலங்கையில் முதலிடவே முடியாது

## கூட்டு எதிரணியின் பந்துல எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 24
சிங்கப்பூர் இலங்கை சுதந்திர உடன்படிக்கை மூலமாக 16மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு கிடைத்துள்ளதாக அமைச்சர்மலிக்சமரவிக்கிரமகூறியுள்ளார். ஆனால்இது முற்றிலும்உண்மைக்குபுறம்பானது. இவ்வாறான முதலீட்டைக் கொண்டுவரமுடியாது என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கொண்டுவர முடியாது என்பதற்கான சகலகாரணங்களையும்தெளிவுபடுத்திய ஆவணத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன்என்றும்அவர்தெரிவித்தார்.

கூட்டு எதிரணியின் பொருளாதார ஆய்வுப் பிரிவின் ஊடக சந்திப்பு கடந்த சனிக்கிழமை பொரளையில் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் மலிக் சமரவிக்கிரம 16மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு கிடைத்துள்ளது என்று கூறியுள்ளார். அதுவேடிக்கையாகஉள்ளது. இதனை அவர் உறுதிப்படுத்துவாரா? அவ்வாறு உறுதிப்படுத்த முடியும் என்றால் 1989ஆம் ஆண்டு தொடக்கம் நாடாளுமன்ற அங்கத்தவராகஇருக்கும்நான்எனதுநாடாளுமன்றப் பதவியிலிருந்து ஒரு வாரத்துக்குள் விலகுவதற்கான கடிதத்தை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடத்தில் கையளிக்கின்றேன்.

அது மட்டுமன்றி நான் எஞ்சிய காலப்பகுதியில் பன்னாட்டுவர்த்தகம் மூலோபாய அபிவிருத்தி அமைச்சின் பணியகத்தில் உதவியாளராக இணைந்துகொள்வதற்குத் தயாராகவுள்ளேன். இந்தக் காலப்பகுதியில் அவரால் 16மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றால், நாங்கள் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று அதன் இரண்டு மடங்கைக் கொண்டுவருவதற்குஎம்மால்முடியும்என்ற நம்பிக்கைஎனக்குள்ளது- என்றார். (4,31)

# தேசிய பாதுகாப்பை, பொருளாதாரத்தை சீரழித்தே கிராமிய அபிவிருத்தித் திட்டம்

## கோத்தபாய பொருமுகிறார்

கொழும்பு, ஜூலை 24
தேசியபாதுகாப்பை, பொருளாதாரத்தைச் சீரழித்துமுழுநாட்டையும்இருளில்தள்ளிவிட்டு, தற்போது கிராமங்களை அபிவிருத்திஅடையவைக்கின்றோம்என்றுகூறி 'கம்பெரலிய'(கிராமஅபிவிருத்தித்திட்டம்) என்றதிட்டத்தைநடைமுறைப்படுத்தமுற்படுகின்றார்கள். கிராமங்களில் தற்போது பாரம்பரிய பண்பாடுகள்தான் எஞ்சியுள்ளன. அவைதான் எமது பாரம்பரியங்களைப் பறைசாற்றி நிற்கின்றன.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

நுவரெலியாவில் கடந்த சனிக்கிழமை 'வெளிச்சம்' என்ற நிகழ்வு இடம்பெற்றது. அதில்உரையாற்றும்போதுஅவர்மேலும் தெரிவித்ததாவது:

கிராமங்களிலுள்ள பாரம்பரிய பண்பாடுகளைச் சீரழிப்பதற்கே தற்போது கம்பெரலியவைக் கொண்டு வருகின்றார்கள்.

மகிந்தராஜபக்சபோர்நிறைவடைந்தசூழலில் குறுகிய காலத்தில் உலகமே வியக்கும் வகையில் அபிவிருத்தியை முன்னெடுத்தார்.

அவர்பெரிய அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதைப் பார்த்த பன்னாட்டுச் சமூகத்துக்கு அபிவிருத்தியை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. 70களில் இருந்து அபிவிருத்திஎன்றுபேசிக்கொண்டிருந்தாலும் அவற்றையெல்லம் செயற்பாட்டு ரீதியாக நடைமுறைப்படுத்தியவர் மகிந்த ராஜபக்ச.

இலங்கையில் இரண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையம், துறைமுகம் என அனைத்தையும்சாதாரணவறுமையான மாவட்டங்களை நோக்கிக் கொண்டு சென்று அமைத்தார்.

துறைமுகத்துக்கான கடனை நாம் மீளச் செலுத்தியிருப்போம். அதற்கான திட்டங்கள் எம்மிடம் இருந்தன. ஜே.ஆர் ஜெயவர்த்தன காலத்திலிருந்து இரண்டாவது பன்னாட்டுவானூர்திநிலையம் குறித்துப் பேசப்பட்டது. ஆனால்யாராலும்அதனைச் செயற்படுத்தியிருக்க முடியவில்லை.

மகிந்த ராஜபக்ச சொற்பகாலத்தில் அமைத்த விடயங்கள் உள்ளிட்ட முதலீடுகளைப்பயன்படுத்திபயன்களைப்பெறுவதற்குதற்போதையஆட்சியாளர்களிடத்தில் சக்தி இல்லை.

இதன்காரணத்தால்தான் வெளிநாட்டவர்களுக்கு அவற்றை விற்கின்றார்கள். தொலைநோக்கற்ற ஆட்சியொன்றே தற்போதைய ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்படுகின்றது- என்றார். (4,31)

## கொள்கைகள் மற்றும் ஆளுமை ஒன்றாகப் பயணித்தாலே மதிப்பு

*அரச தலைவர்தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 24

சமூகத்தில் ஒருவருக்குக் கிடைக்கும் அங்கீகாரம் மற்றும் மதிப்பளிப்புக்கு அவரது கொள்கைகளும் ஆளுமைப் பண்புகளும் ஒரே வழியில் பயணிக்க வேண்டியது அவசியம். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற பேராயர் அதி உயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையின் ஆயர்பதவியில் 50 ஆண்டுகள் நிறைவுவிழா நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டுமாநாட்டுமண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முன்னாள் பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை சமூகத்தில் உயர்ந்த மதிப்பையும், அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அவரது கொள்கையும் ஆளுமைப் பண்புகளும் ஒரே வழியில் பயணித்தமையே காரணமாகும் என்று அரச தலைவர் குறிப்பிட்டார்.

சில அரசியல்வாதிகளின் கொள்கைகள் அவர்களது ஆளுமைப் பண்புகளில் வெளிப்படாத காரணத்தால் அரசியல் துறையில் ஏற்பட்டிருக்கும் மோசமான நிலை குறித்து தெளிவுபடுத்திய அரச தலைவர், மக்களோடு மக்களாகவாழ்கின்றஉண்மையான மனிதர்கள் எப்போதும் அடுத்தவர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களாக இருப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

இன, மத பேதங்களின்றி அனைத்து மக்களுக்காகவும் பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ்ஆண்டகைசமய மற்றும் சமூக ரீதியாக மேற்கொண்டுவரும்பணிகளையும் அரச தலைவர் பாராட்டினார்.

அமரபுரமகாநிக்காயவின் மகா நாயக்க தேரர் சங்கைக்குரிய கொட்டுகொட தம்மாவாசநாயக்கதேரர், கோட்டே ஸ்ரீ கல்யானி சாமக்ரீ தர்ம மகாசங்க சபையின் மகா நாயக்க தேரர் கலாநிதி சங்கைக்குரிய இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரும், பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்க, வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் . பியரே வென்டொட், சபாநாயகர் கரு ஜயசூரிய, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில்கலந்துகொண்டனர். (ரி2)

# தேர்தல் எப்படி நடந்தாலும் வெல்லப்போவது மகிந்தவே

*அடித்துக் கூறுகிறார் ரம்புக்வெல*

**கொழும்பு, ஜூலை 24**

**மாகாணசபைத் தேர்தலை பழைய முறைமையில்நடத்துவதையேநாங்கள்விரும்புகின்றோம். எந்தமுறைமையில் தேர்தல்நடத்தப்பட்டாலும் எமக்கு வெற்றி நிச்சயம். ஆனால் பழைய முறைமையே சிறந்தது. இவ்வாறு மகிந்த அணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**



புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைமையானது பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்துகின்றது. அந்தக் குழப்பங்கள் மாகாணசபைத் தேர்தலிலும் இடம்பெறக் கூடாது.

தற்போது சிறுபான்மைக் கட்சிகளும்புதியமுறைமையை எதிர்த்துள்ளமையை கவனத்தில்கொள்ளவேண்டும். மாகாண சபைத் தேர்தலை எதிர்வரும்டிசெம்பர்23அல்லது ஜனவரி 5 ஆம் திகதி நடத்துவதற்கு கடந்த வெள்ளிக்கிழமைநாடாளுமன்றத்தில் கூடிய கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது குறித்து ஆராய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயேகெஹெலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையிலாவது விரைவில்நடத்தவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். தேர்தலை விரைவில் நடத்துங்கள் என்றே நாங்கள் கோரி வருகின்றோம். மாகாணசபைத்தேர்தலை பழைய முறைமையில் நடத்துவதே சிறந்தது என்று நாங்கள் நம்புகின்றோம்.

புதியமுறைமையில்நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பல குழப்பங்களை ஏற்படுத்திவிட்டன. அந்தக் குழப்பங்கள் மாகாண சபைத் தேர்தலிலும் தொடர்வதற்கு இடமளிக்க முடியாது. அது மட்டுமன்றி புதிய முறைமையில் தேர்தலைநடத்துவதற்கான சட்டவரைபுக்கு ஆதரவளித்த சிறுபான்மைக் கட்சிகள் இன்று புதிய முறைமை வேண்டாம்என்றும்பழைய முறைமையேசிறந்ததுஎன்றும் கூறிவருகின்றன.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அண்மையில்நாடாளுமன்றத்தில்புதிய முறைமையின் பாதகநிலைமை குறித்து விரிவாக உரையாற்றியிருந்தார். எனவே பழைய முறைமையிலேயே மாகாணசபைத்தேர்தலைநடத்துவதேசரியானதாகஇருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். எப்படியாவது மாகாணசபைத்தேர்தலைவிரைவாகநடத்தவேண்டும். ஏற்கனவே சில மாகாணசபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படாமல் உள்ளன. அந்த நிலமை நீடிக்கக் கூடாது.

விரைவில் பழையமுறைமையில்தேர்தலைநடத்துவதற்கானதீர்மானத்தைஅரசு எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் சிறுபான்மைக் கட்சிகள் முன்வைக்கின்ற கரிசனைகள் குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டியதுஅவசியம்என்றார். (ரி2)

## மைதானத்தை விடுத்து பெவிலியனே அகற்றப்படும்

கொழும்பு, ஜூலை 24

காலி பன்னாட்டு கிரிக்கெட் மைதானம் அகற்றப்பட மாட்டாது. ஆனால் மைதானத்தில் உள்ள பெவிலியன் அகற்றப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்தாவது,

யுனெஸ்கோ நிறுவனத்தின் தலைவர் ரீனா புகுவா இலங்கைக்கு வருகை தந்தபோது காலி பன்னாட்டு கிரிக்கெட் மைதானம் குறித்து விவாதித்திருந்தோம். எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால், பெவிலியனில் பிரச்சினை உள்ளது தொடர்பில் அப்போது சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, காலி பன்னாட்டு கிரிக்கெட் மைதானம் அகற்றப்பட மாட்டாது பெவிலியன் மட்டுமே அகற்றப்படும் -என்றார். (ரி2)

# இலங்கைக்குச்சீனா நிதிஅன்பளிப்பு

கொழும்பு, ஜூலை 24

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவுக்கு, சீனஅரசதலைவர்ஷிஜின்பிங், சுமார் 4ஆயிரத்து 800 கோடி ரூபாவை (2 பில்லியன் யுவான் அல்லது 295 மில்லியன் டொலர்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

நாடளாவியரீதியாகமேற்கொள்ளப்படும், வீடமைப்புத்திட்டத்துக்குஇந்தநிதியைவழங்குவதற்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளார்.

அதன்படி, ஏதாவது திட்டத்தை தெரிவு செய்து செலவிடுவதற்கு சீன அரச தலைவர் இந்த நிதியை வழங்கியுள்ளார்.

பொலன்னறுவையில், நேற்றுமுன்தினம் நடந்த, சீனாவின் உதவியுடன்அமைக்கப்படும் மருத்துவம்மனைக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் உரையாற்றிய போதே இலங்கை அரச தலைவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மருத்துவமனைத் திட்ட தொடக்க நிகழ்வு குறித்த பேச்சுக்களுக்காக இரண்டு வாரங்களுக்கு முன்னதாக, எனது பணியகத்துக்கு வந்த சீனத்தூதுவர் செங்ஷியுவான், சீனஅதிபரின் இந்த நிதி நன்கொடை பற்றித் தெரியப்படுத்தினார். இந்த நிதியைப் பயன்படுத்துவதற்கான திட்ட அறிக்கையை ஒரு வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறும்சீனா கேட்டுக்கொண்டது. இதன்படி, முழு நிதியையும், நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், வீடுகளை அமைக்கப் பயன்படுத்த முடிவு செய்துள்ளேன்.

இதற்கான திட்ட அறிக்கை சீனாவிடம் இந்த வாரம் சமர்ப்பிக்கப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மில்லியன் ரூபா செலவிடப்படும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பரப்புரைக்கு சீனா 7.6 மில்லியன் டொலரை வழங்கியதாகக் குற்றச்சாட்டுகள் தீவிரமடைந்துள்ள தருணத்தில் சீனாவின் இந்த நிதி நன்கொடை அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு

*அரச மருத்துவ சங்கம் தீர்மானம்*

கொழும்பு, ஜூலை 24

நாடளாவியரீதியில்பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்க அரசமருத்துவஅதிகாரிகள்சங்கம்தீர்மானித்துள்ளது. சிங்கப்பூருடன் மேற்கொள்ளப்படவுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைக் கண்டித்தேபணிப்புறக்கணிப்புமேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகநேற்றுஇடம்பெற்றஊடகசந்திப்பில்தெரிவிக்கப்பட்டது. சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கிடையில் செய்துகொள்ளப்படவுள்ள சுதந்திர வர்த்தக உடன் படிக்கையில் 10 குறைகளை முன்வைத்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ரி-2)

# சு.க. பொதுச் செயலர் பதவிக்கு நான் தயார்

*தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு*

சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியைஎனக்குப்பெற்றுக்கொடுத்தால் அதனைப்பொறுப்பேற்பதற்குநான்தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறு தெரிவித்துள்ளார் சுதந்திரக் கட்சியின் மாற்று அணி முக்கியஸ்தர் தயாசிறி ஜயசேகர.

தற்போதைய இக்கட்டான இந்த சூழலில் சுதந்திரக்கட்சியின் செயலர் பதவியைப் பொறுப்பேற்றுக்கட்சியை கட்டியெழுப்பி மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவருவதற்குநான்என்னை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்பொதுச்செயலர்பதவிநாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு வழங்கப்படவுள்ளதாக வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் குறித்து வினவியபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர்தெரிவித்ததாவது,

சிறிலங்காசுதந்திரக்கட்சியின்பொதுச்செயலர் பதவியைப் பொறுப்பேற்குமாறு எனக்கு இதுவரை யாரும் அறிவிக்கவில்லை. அவ்வாறுஎந்தவொருகோரிக்கையும்விடுக்கப்படவுமில்லை. ஆனால் சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் பதவியைஎனக்குவழங்குவதற்குகட்சியின் தலைமை தீர்மானிக்குமாயின் அந்தப் பதவியைப்பொறுப்பேற்றுகட்சியைமுன்னேற்ற நான் தயாராக இருக்கின்றேன். தற்போதைய இந்த இக்கட்டான சூழலில் சுதந்திரக்கட்சியை மீண்டும் பழைய நிலைக்குக்கொண்டுவந்துமுன்னேற்றப் பாதையில்வழிநடத்தசெயலர்பதவியை பொறுப்பேற்க நான் தயாராக இருக்கின்றேன். எனக்கு சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலர் பதவியைப் பெற்றுத்தரவுள்ளதாக யாரும் இதுவரை அறிவிக்கவில்லை. எனினும்அவ்வாறுஒருசந்தர்ப்பம் கிடைத்தால் அதனைப் பயன்படுத்துவதற்கு நான் தயார்-என்றார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்குஎதிரானநம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக்கட்சியின்16 பேர் அரசிலிருந்து வெளியேறி சுயாதீன அணியாக செயல்படுகின்றனர். அந்த16 பேரின் அணியில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவைத் தவிர ஏனையோர் மகிந்த ராஜபக்சதலைமையிலானமகிந்தஅணியுடன் இணைந்து செயல்படுகின்றனர்.

மகிந்தஅணியில்அங்கத்துவம்வகிக்கத் தான்தயாரில்லைஎனதயாசிறிஜயசேகர கூறிவருகின்றார். இந்த நிலையிலேயே எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திரக்கட்சி மாநாட்டின் போது தயாசிறி ஜயசேகர கட்சியின் பொதுச்செயலராக நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.இந்தசூழலிலேயே தனக்கு இந்த பொறுப்புவழங்கப்பட்டால் அதனை ஏற்று கட்சியை மீண்டும் வெற்றிகரமான பாதைக்கு கொண்டுவர தயாராகஇருப்பதாகத் தயாசிறிஜயசேகர அறிவித்திருக்கின்றார். (ரி2)




அனலையம்பதி - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு

# பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திர (ஐயனார்) தேவஸ்தான

# வருடாந்த மஹோற்சவ பெருந்திருவிழா சிறப்பிதழ் - 2018

**கொடியேற்றம்**
18.07.2018
புதன்கிழமை

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம் விண்ணோர்க்காதியே யோலம் செண்டார்
கையனே யோலம் எங்கள் கடவுளே யோலம் மெய்யர்
மெய்யனே யோலம் தொல்சீர் வீரனே யோலம் மோலம்

**தேர்த்திருவிழா**
26.07.2018
வியாழக்கிழமை

## விழாக்கால நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 24.07.2018 | செவ்வாய் | 7 ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம் மாலை வேட்டைத் திருவிழா |
| 25.07.2018 | புதன் | 8 ஆம் திருவிழா பகல் 108 சங்காபிஷேகம். சந்தன அலங்காரம். மாலை சப்பைரத உற்சவம் (சப்பறத் திருவிழா) |
| 26.07.2018 | வியாழன் | 9 ஆம் திருவிழா பகல் தேர்த்திருவிழா பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம். வீதியுலா. பச்சை சாத்துதல் மஹா அபிஷேகம். (108 சங்காபிஷேகம்) பஞ்சமுக அர்ச்சனை |
| 27.07.2018 | வெள்ளி | 10 ஆம் திருவிழா தீர்த்தத்திருவிழா காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும். யாக கும்ப அபிஷேகமும் நடைபெறும். மாலை துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்). சண்டேஸ்வரர் உற்சவம். ஆச்சாரியார் உற்சவம் நடைபெறும். |
| 28.07.2018 | சனி | 11 ஆம் திருவிழா பகல் 1008 சங்காபிஷேகம். மாலை திருக்கல்யாண உற்சவம் |
| 29.07.2018 | ஞாயிறு | பகல் பிராயச்சித்த அபிஷேகம். மாலை வைரவர் பொங்கல் |

**11 தினங்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.**
**நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளவும்.**

"அனைவரும் வருக ஐயன் அருள் பெறுக"
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

**அனலைதீவு - 05** (CS/18075)(11)

**பரிபாலன சபையினர்,**
**ஐயனார் ஆலயம்.**

நீங்கள் சாதாரண தரப்பரீட்சையில் தோற்றி,

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA

**(O/L) 5 S**

பெறுபேற்றினைப் பெற்றவரா?......

மருத்துவத்துறையில் நீங்களும் ஒரு
தாதியாவதற்கான (Nurse) அரிய சந்தர்ப்பம்



Hotline : 071 71 40000
071 077 0770

சாதாரண தரப்பரீட்சையில் 5S பெறுபேற்றுடன் 30 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் அனைவரும் விண்ணப்பிக்கமுடியும்.

TVEC நிறுவனத்தினால் NVQ - 04 தர சான்றிதழ் வழங்கப்படும்.

மாதாந்தம் 25,000/- அடிப்படை சம்பளத்துடன்
உறுதியான தொழில் வாய்ப்பு

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால்
உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ்
எங்களினால் வழங்கப்படும்**


அரச அங்கீகாரம் பெற்ற தாதிய பாடசாலை

**அய்வா தாதியர் பாடசாலை**

323, கஸ்தூரியா வீதி,
யாழ்ப்பாணம்
071 8722350, 071 8722352.

36/1, 38/1 இரண்டாம் குறுக்கு வீதி,
வவுனியா
071 8722351

## மரண அறிவித்தல்



# கார்த்திகேசு கதிர்காமலிங்கம்

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளை. கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கதிர்காமலிங்கம் கடந்த (22.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தில்லைவனம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலநாயகியின் பாசமிகு கணவரும் லோகதர்சன் (கொலண்ட்). நிசாந்தினி (கொழும்பு). மகிந்தன், ரிசிக்காந். கௌசாலினி. நிறோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுவர்ணகலா (கொலண்ட்). கோகனராஜ் (கொழும்பு). துவாரகா. யசோதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பாணுஜன். ரவுசன். அக்ஷயன். ஹரிவர்சன். பிரகதீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் தர்மலிங்கம். பரமலிங்கம். சண்முகலிங்கம். பஞ்சகௌரி. பேரின்பநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2018) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.'

**இல. 17, கலைவாணி வீதி,**
**கலட்டிமுந்தல் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.** (CS 18343/15/18)

**தகவல்: குடும்பத்தினர்.**
**0778421235**

# சிறுவர் மருத்துவமனை அமைக்க நெதர்லாந்து நிறுவனம் ரூ.5 கோடி

## பெறுவதற்கான பேச்சு நடக்கிறது என்று போதனாவின் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர் மருத்துவமனை அமைக்க 5 கோடி (50மில்லியன்) ரூபா தேவையாகவுள்ளது. அந்த நிதி நெதர்லாந்து நாட்டு நிறுவனம் ஒன்றிடம் இருந்து பெறப்படவுள்ளது. கொழும்பு சுகாதார அமைச்சின் ஊடாக அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தில்சுகாதாரத்துறை சார்ந்த விடயம் பேசப்பட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில்சிறுவர்மருத்துவமனைஅமைக்க50மில்லியன் (5 கோடி) ரூபா தேவையாகவுள்ளது. மருத்துவமனைக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டு விட்டது. இந்த மருத்துவமனையை அமைப்பதற்குநெதர்லாந்துநாட்டு நிறுவனம் ஒன்றிடம் கடன்பெறுவது தொடர்பாகக் கொழும்பு சுகாதார அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இது தொடர்பான சகல விடயங்களும் கொழும்பு சுகாதார அமைச்சின்ஊடாகஅந்தநாட்டுநிறுவனத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றார்.

வடக்கு மாகாணத்துக்குரியதான இந்தச் சிறுவர் மருத்துவமனை இணுவிலில்சுமார்4ஏக்கர்காணியில் அமையவுள்ளது.

அங்கு தற்போது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (4,8)

# எம்.பிக்களின் செயற்றிட்டங்களை அரச அதிகாரிகள் மாற்றக்கூடாது

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 24

நாடாளுமன்ற உறுப்பினர்கள், தத்தமது பகுதிகளில் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை அதிகாரிகள் தன்னிச்சையாக மாற்ற முடியாது, மாற்றக்கூடாது என்று யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணமாவட்டத்தின்ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில்நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தான்சங்கானையில்உள்ள விளையாட்டு மைதானம் ஒன்றின்அபிவிருத்திக்கென10லட்சம் ரூபாஒதுக்கியிருந்தேன். ஆனால் அபிவிருத்திப்பணிகள் இடம்பெற முன்னர் சுற்று மதிலைக் கட்டுமாறுகூறப்பட்டுள்ளதாகஎனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏன் மைதான அபிவிருத்திக்கு அங்குள்ள அதிகாரிகள்தடையாகவுள்ளனர் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதில் அளித்த சங்கானைப் பிரதேச செயலர், குறித்த விளையாட்டு மைதானத்துக்கு மண்போட்டுச்சீரமைக்கநாடாளுமனற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். எனினும் அந்தப் பகுதி தண்ணீர் வழிந்தோடக்கூடிய பிரதேசம். அதனாலேயே அதிகாரிகள் சுற்று மதிலைக் கட்டுங்கள்என்றுகூறியுள்ளனர் என்றார்.

இதன்போது கருத்தை முன்வைத்த நாடாளுமனற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி செய்யமுயற்சிக்கும்போதுஅதிகாரிகள்தாம்நினைத்தவாறு அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க முடியாது. அவ்வாறு அபிவிருத்திப் பணிகளில் சிக்கல்கள் இருந்தால் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரை அழைத்துக் கலந்துரையாடி அவருக்குத் தெரியப்படுத்தவேண்டும்.அதனைவிடுத்து அதிகாரிகள் தாம் நினைத்தபடி செயற்படமுடியாது-என்றார். (4,8)

# சிம் அட்டையில் ஆரம்பித்த பெரும்ஆபத்து விபரீதமாக மாறமுன்னர் தப்பினார் பெண்

## அவரும் 4 குடும்பத் தலைவர்களும் கைது; யாழில் இப்படியும் ஒரு நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 24

'சிம்' விற்பனையில் ஈடுபட்ட இளைஞர்கள் 4 பேரும் 'சிம்' அட்டையை வாங்கிய இளம்பெண்ணும் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணநகர்ப்பகுதியில்நேற்றுமுன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையைச்சேர்ந்த4 இளைஞர்கள் சிம் அட்டைகளை விற்பனை செய்து வந்துள்ளனர்.

கோப்பாய்பொலிஸ்பிரிவுக்குஉட்பட்டஇளம்பெண்ணுக்குக்கொடுக்கப்பட்ட சிம் அட்டையில் உள்ள அலைபேசி இலக்கத்தை எடுத்துக்கொண்டே சிம் அட்டையை ஒருவர் இளம்பெண்ணுக்குக் கொடுத்துள்ளார். பின்னர் அந்த இலக்கத்துக்கு இளைஞர் ஒருவர் தொடர்புகொண்டு, காதலிப்பதாகக் கூறியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக இருவருக்கும் ஏற்பட்ட நெருக்கத்தின் பின்னர், அந்தஇளைஞர்இளம்பெண்ணைச் சந்திப்பதற்கு வருமாறு அழைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம்சந்திப்பதற்காக இருவரும்யாழ்ப்பாணநகருக்குச் சென்றுள்ளனர்.

இருவரும் இணைந்து யாழ்ப்பாண நகரிலுள்ள விடுதி ஒன்றுக்குச்சென்றுவிடுதியில்தங்கியிருந்துள்ளனர்.

காதலிப்பதாகக் கூறிய இளைஞனின் நண்பர்கள் மூவர் நகரப் பகுதியில் உள்ள மதுபான சாலையில் மதுபானம் வாங்கிக் கொண்டு, உணவு பார்சல்களும் வாங்கிக்கொண்டு விடுதிக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

நகரில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபொலிஸார், மூன்று இளைஞர்களின் நடத்தையில் சந்தேகப்பட்டு அவர்களை விசாரணை செய்துள்ளனர். அதன் போதே இளம்பெண்ணை விடுதிக்குஅழைத்துவந்ததாகப்பொலிஸாருக்குக் கூறியுள்ளனர். அதன்படி விடுதிக்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் 4 இளைஞர்களையும் கைதுசெய்தனர்.

விற்பனைசெய்தசிம்இலக்கத்தின் ஊடாகத்தொடர்புகொண்டு, இளம்பெண்ணைக் காதலிப்பதாகக் கூறிதகாதஉறவுகொள்வதற்காக விடுதிக்கு அழைத்துச் சென்றனர் என்றும் 4 பேர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இளம்பெண்யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட 4 இளைஞர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையின்போது, 4 பேரும் திருகோணமலையில் திருமணம் முடித்துள்ளனர். அவர்களுக்குப் பிள்ளைகள் உள்ளனர் என்பதும் தெரியவந்தது. அவர்களின் குடும்பத்தினரை யாழ்ப்பாணப்பொலிஸ் நிலையத்துக்குவருமாறும்பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

அவ்வாறே இளம்பெண்ணின் பெற்றோரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்துள்ளனர்.

விசாரணையின் பிரகாரம், ஒன்றுக்குமேற்பட்ட-4இளைஞர்களுடன்சென்றார்என்றுகுற்றஞ்சாட்டி இளம்பெண் கைது செய்யப்பட்டார். பொலிஸ் விசாரணையின் பின்னர் அவர்கள் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,106)

# தேசிய வாசிப்பு மாதம் ஒக்ரோபர் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

எதிர்வரும்ஒக்ரோபர்மாதம்தேசியநூலகமாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை இவ்வாறு அறிவித்துள்ளது.

நாட்டில்செயற்படும்பொது நூலகங்களில்தேசியவாசிப்பு மாதத்தையொட்டியசெயற்றிட்டங்களைமேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

நடுவண் கல்வி அமைச்சின் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினர் பொதுமக்களுக்கும் நூலகங்களுக்குமிடையில் நல்லுறவைப் பேணும் வகையில் தேசிய நூலக மாதத்தை அறிவித்துள்ளனர்.

அந்த மாதத்தில் முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் வாசகர்களிடம்இதுபற்றியவிழிப்புணர்வைஏற்படுத்தும்செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஒக்ரோபர் மாதங்களில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்செயற்றிட்டங்களைமேற்கொள்வதுடன்முன்பள்ளிச் சிறார்கள், பாடசாலைமாணவர்கள் மற்றும்வாசகர்களிடையே பல்வேறு நிகழ்வுகளையும் போட்டிகளையும் நடத்தி மக்களிடையே விழிப்பு ணர்வை ஏற்படுத்துமாறு சபையின் தலைவர் சட்டத்தரணிபி.எம்.தீபக்சந்திரரத்ன உள்ளூராட்சிசபைகளுக்கு அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் நடத்தும் பொது நூலகங்களில் தேசிய நூலக மாதத்தில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களுக்கமைய சிறந்த நூலகங்கள் மற்றும் சிறந்த நூலகர்கள் தெரிவு வருடாந்தம் நடத்தப்பட்டு விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்படவுள்ளனர். உள்ளூராட்சிச்சபைகள்நடத்தும்பொதுநூலகங்கள் தேசிய வாசிப்பு மாதத்தில் பல்வேறு செயற்றிட்டங்களையும் போட்டிகளையும் நடத்தி போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு இறுதிநாள்நிகழ்வில் பரிசில்கள்வழங்கிமதிப்பளிப்பதும்குறிப்பிடத்தக்கது. (4-9)

# ரூ.200 மில்லியன் நிதி தொடர்பில் ஒருங்கிணைப்பில் பேசமுடியாது

யாழ்ப்பாணம், ஜூலை 24

பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா200மில்லியன்ரூபாநிதியில்தலைமை அமைச்சரின் அமைச்சு செயற்படுத்தும் கிராம அபிவிருத்திக்கான வேலைத் திட்டம் தொடர்[illegible]மாவட்ட மற்றும்பிரதேச செயலகங்களி[illegible] ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள்தீர்மானிக்கமுடியாதுஎன்றுதிறைசேரியின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின்330பிரதேசசெயலாளர்பிரிவிலும் தலா 200 மில்லியன் ரூபாவுக்கான 12வகையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியும். கிராமமேம்பாட்டுத்திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதுபற்றிய கலந்துரையாடல் கடந்தமாதம் 28ஆம் திகதி திறைசேரியில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு இடம்பெற்ற கலந்துரையாடலின் தீர்மானம் தற்போது மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிதிக்குரிய திட்டங்களை முன்னெடுக்கும்போது பிரதேச செயலகம், மாவட்டச் செயலாளர், ஆளும்கட்சிஅமைச்சர்கள்இருவர் மற்றும் மாவட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன்மட்டும்பேசிதீர்மானித்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

இந்தத் திட்டங்கள் தொடர்பில் மாவட்ட மற்றும்பிரதேசஒருங்கிணைப்புக்குழுக்களால் மேற்பார்வை செய்யப்படமாட்டாது. குறித்த நிதி அமைச்சு மற்றும் மாவட்டச் செயலகத்துக்கு மட்டுமே உரித்தானது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம்இவ்வாறுதீர்மானம்செய்யப்பட்டதை அறிந்திருக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள்மற்றும்மாகாணசபைஉறுப்பினர்கள் குறித்த நிதி தொடர்பில் தமது திட்ட முன்மொழிவுகளுக்காகஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில்கேள்வி எழுப்பப்படுகின்றனர் என்றும்தெரிவிக்கப்படுகிறது. (4,105)

# காணிகளை விடுவிக்குமாறுகோரி முள்ளிக் காட்டில் அவல வாழ்க்கை

## தறப்பால்களின் கீழ் வருடங்கள் கழிகின்றன கூட்டரசு இழுத்தடித்து ஏமாற்றுவதாக விசனம்

**மன்னார், ஜூலை 24**
**மன்னார், முள்ளிக்குளத்திலுள்ள தமது வீடுகளில் இராணுவத்தினர் தத்தமது குடும்பங்களுடன் குடியிருக்கின்றனர். அதனால் நாங்கள் வீடுகளின்றி குளக் கரைகளிலும் காடுகளிலும் குடிசைகள் அமைத்துத் தங்கி இருக்கிறோம். இராணுவத்தினர் வெளியேறும்வரை தாம் நகரமாட்டோம் என்று முள்ளிக்குளத்தில் காடுகளில், குடில்களில் தங்கியிருக்கும் மக்கள் தெரிவித்தனர்.**



மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளத்தில் பொதுமக்கள் அதிரடியாகக் குடியேறினர். சுமார் 40 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்தக்காடுகளில்குளங்களில்குடில்அமைத்து அதாவது காடுகளுக்கு இடையில் தறப்பால்கள் கட்டி அதில் குடும்பங்களாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் பரஞ்சோதி, உபதவிசாளர் புவனம்மற்றும்உறுப்பினர்கள்கடந்தசனிக்கிழமைசென்றுஅவர்களுடன்கலந்துரையாடினர்.

முள்ளிக்குளத்தில் வசித்துவந்த பொதுமக்களைஇராணுவத்தினர்2007ஆம்ஆண்டு வெளியேற்றினர். கடந்தவருடம் முள்ளிக்குளம் மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவத்தினரை அகற்றி வீடுகள், காணிகளை ஒப்படைக்கிறோம் என்று கடற்படை அதிகாரிகள் கூறியிருந்தனர். அதனால்தாம் போராட்டத்தைக் கைவிட்டோம்.

ஆனால்இன்றுவரை அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. போர் நிறைவடைந்து பல வருடங்களாகியும் தாங்கள் இன்னும் ஏதிலிகளாகவே வாழ்கிறோம் என்று அங்குள்ள மக்கள் கூறிக் கவலை தெரிவிக்கின்றனர்.

"எமது ஊர் கடல் வளம் மிகுந்தது. நாங்கள் கட்டிய வீடுகளும் அப்படியே இருக்கும் பொழுது எதற்காக நாம் தெருக்களில் வாழ வேண்டும்? எமது பெரும் போராட்டத்தின் பின் எமது காணிகளைப் பார்வையிடவும் கோவில்களில்வழிபாடுகள்செய்யவும்அனுமதிகிடைத்தது. ஆனால்எமதுவயல்நிலங்களிலும் வீட்டு வளவுகளிலும் பெரிய மரங்கள் வளர்ந்து ஊர் முழுவதும் பற்றைக்காடுகளாகிவிட்டன.எஞ்சியவற்றில்இராணுவத்தினர் குடியி ருக்கின்றனர். எமது அந்தக் காணிகளில் நாங்கள் எப்போது குடியமர்வது?

நாம்அவற்றைஎப்பொழுதுசீராக்கி, எப்பொழுது எம் இயல்புவாழ்க்கையை வாழ்வது? அதனால்தான் இராணுவத்தினர் குடியிருக்கும் எமது வீடுகளின் அருகில் உள்ள பற்றைக் காடுகளில் குடில் அமைத்து வாழ்கின்றோம். இந்தப் போராட்டத்தில் எமது உயிர்போனாலும்எமதுமண்ணில்போகட்டும்" என்று அங்கு கொட்டில்களில் குடியிருக்கும்பொதுமக்கள்உறுதியாகக்கூறுகின்றனர்.

"பொய்யான வாக்குறுதிகளை நம்பி எமது போராட்டத்தைக் கைவிட்டு ஏமாந்துவிட்டோம். இந்தமுறைஅப்படியல்ல. எமதுமக்களுக்குநீதிநிலையானதீர்வுகிடைக்கும்வரை போராடுவோம். மக்களுக்கு உடனடித் தேவைகளாகத்தூய்மையானகுடிதண்ணீர் மற்றும்உணவுக்குத்தட்டுப்பாடுநிலவுகிறது. காட்டுயானைகள், விசஜந்துகளின்அச்சுறுத்தலுக்கிடையிலும் சொந்த மண்ணுக்காக மக்கள்செய்யும்இவ்வாறானதியாகங்களைச் சம்பந்தப்பட்டவர்கள்புரிந்துகொள்ளவேண்டும்" என்று அங்குள்ள பங்குத் தந்தை லியோன்வலியுறுத்தினார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்ததாவது:

"தற்பொழுதுகொழும்புஅரசியல்சூழல்தமிழ் மக்களுக்குப் பொருத்தமானதாக இல்லை, மிக ஆபத்தான சூழ்நிலை வரக்கூடிய நிலை தான்இருக்கின்றது. வடக்கிலும்இதேநிலைப் பாடுதான்.


**ஏமாற்றியுள்ளனர்**

குறித்த பகுதியை விடுவிப்பது குறித்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், கடற்படைத் தளபதிபோன்றவர்கள்இணங்கியிருந்தனர். அதன்படி நானும் வாக்குறுதி கொடுத்திருந்தேன். போராட்டம்கைவிடப்பட்டது. ஆனால் அவர்கள் கூறியதுபோல் நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. ஏமாற்றியுள்ளனர்.

**மீள்குடியேற்ற அமைச்சு இலங்கையில் உள்ளதா?**

மீள்குடியேற்ற அமைச்சில் மிகப்பெரும் குற்றம் உள்ளது. இராணுவம் இந்தக் காணிகளை விடுவித்தாலும் பொதுமக்கள் குடியமரும்விதத்தில்அந்தஇடங்களைத்தயார்படுத்துவது மீள்குடியேற்ற அமைச்சின் கடமை. இங்கு 55 பேருக்குத் தற்காலிக வீடுகள் வழங்கப்படும்என்றுமீள்குடியேற்றஅமைச்சர் சுவாமிநாதன் என்னிடம் உறுதியளித்திருந்தார். இன்றுவரை எதுவும் செய்யவில்லை. மீள்குடியேற்ற அமைச்சு இலங்கையில் உள்ளதா என்றும் தெரியவில்லை. மீள்குடியேற்ற அமைச்சின் வேலைகளைத் தற்பொழுது வேறு அமைச்சுகள்தான் இங்கு செய்துகொண்டிருக்கின்றன. மீள்குடியேற்ற அமைச்சு என்ன செய்கிறது என்று தெரியவில்லை.

வடக்கில்தற்காலிககொட்டில்போடுவதற்கும் மீள் குடியேற்ற அமைச்சுக்குப் பணமும் இல்லை அதிகாரமும் இல்லை. பலமுறை மீள்குடியேற்ற அமைச்சரைச் சந்தித்து முள்ளிக்குள மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கும்பொழுதுதனது அமைச்சில்பணம் இல்லை என்று கூறிவிடுகின்றார்.



இதேநேரம்நீண்டகாலம்இடம்பெயர்ந்தவர்கள் என்று சொல்லி குறிப்பிட்ட தொகைப் பணத்தை முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் என்று தனியாக ரிசாட் பதியுதீனின் அமைச்சில் பணம்வைப்பிலிடப்பட்டுள்ளது. நாடாளுமன்ற அமர்வில் பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சரைக் கடந்த வாரம் சந்தித்தேன். முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினையை அப்படியே விட்டு விட்டீர்கள் இந்தப் பிரச்சினையை முடித்து வையுங்கள்,என்று கோரினேன்.

எதிர்வரும் ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்கு இடையில் முள்ளிக்குளத்துக்கு வருகிறேன் என்று அவர் கூறியுள்ளார்-என்றார். (4,213)

---

# கமநலசேவைகள் நிலைய உடனடித்தேவைகள்எவை?

*பிரதி அமைச்சர் அங்கஜன் ஆராய்வு*

கிளிநொச்சி, ஜூலை 24
யாழ்ப்பாண மாவட்ட கமநலசேவைகள் நிலையங்களில் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவசாயபிரதிஅமைச்சர்இ.அங்கஜன்கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது.

விவசாயப் பிரதி அமைச்சராகப் பதவியேற்றபின்னர்முதல்முறையாகமாவட்ட கமநலஅபிவிருத்தித்திணைக்களத்துக்குக் கடந்த சனிக்கிழமை சென்றிருந்தார். அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

துறைசார்நிபுணர்களின்வெற்றிடம், ஆளணிவளம் குறித்தும் அதிகாரிகள் அங்கஜனுக்குச் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்றுயாழ்ப்பாணமாவட்டவிவசாயகமக்காரஅமைப்புக்களின்தலைவர் மற்றும்செயலாளர்களுடனும்அங்கஜன் கலந்துரையாடினார். மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள சபா மண்டபத்தில் கமநலஆணையாளர்தலைமையில்சில நாள்களுக்குமுன்னர்இதுஇடம்பெற்றது.

அதில் விவசாயிகளின் தற்போதைய நிலைகுறித்தும்எதிர்நோக்குகின்றபிரைச்சினைகள் குறித்தும் அவற்றை எப்படித் தீர்க்கலாம் என்றும் கலந்துரையாடப்பட்டது. விவசாயிகள்தமதுபிரச்சினைகளை அனுபவ ரீதியாக எடுத்துக் கூறினர்.

முதற்தடைவையாகத் தமிழ் விவசாய அமைச்சருடன் இலகுவான முறையில் சிறந்த புரிதல்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக விவசாயிகள் தெரிவித்தனர் என்று அங்கயனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,6)

---

ஒட்டுசுட்டான் – மாங்குளம் வீதியில்

# துரத்தினாலும் நகராமல் அச்சுறுத்தும் யானைகள்

முல்லைத்தீவு, ஜூலை 24
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், மாங்குளம் வீதியில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துப் பயணிகளை அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

போருக்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டுயானைகள் அதிகரித்துள்ளன. அவற்றால்அங்குள்ளபல பிரதேசங்களின் மக்கள் பெரும் இடர்பாடுகளைஎதிர்கொண்டுள்ளனர். இது குறித்துவனஜீவராசிகள்திணைக்கள், அரசியல்வாதிகள் எனப் பலருக்கும் முறையிடப்பட்டிருந்தது. உரிய நடவடிக்கை இன்னும் இல்லை. பகலில் வீதியோரத்தில் யானைகள் நடமாடுகின்றன. யானைகள் கிராமத்துக்குள் புகுந்து வீடுகளையும், பயிர்களையும் நாசமாக்கிவருகின்றன. அதனால்தமக்கும் தீங்கு விளைவிக்கும் என்று பயணிக்கும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த யானைகள் தென்பகுதியில் இருந்து கொண்டுவந்து விடப்பட்டுள்ளன என்றும் அதற்கான ஆதாரங்கள் உள்ளன என்றும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் கூறிவருகின்றனர். தற்போதுள்ள தொகையில் முல்லையில் முன்னர் யானைகள் இருக்கவில்லை என்றும் கூறுகின்றனர். காட்டு யானைகளைத் துரத்தினால் சென்றுவிடும். தற்போதுள்ள யானைகளைத் துரத்தினாலும் செல்லமறுக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தயானைகள்கொண்டுவந்துவிடப்பட்டமையைஅண்மையில்பொதுமக்கள் வடக்கு மாகாண முதலமைச்சரிடமும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனவே அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என்று கோருகின்றனர். (4,214)



---

# தேசிய மட்ட தனியிசையில் அருணோதயாவுக்குத் தங்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணம்,அளவெட்டிஅருணோதயாக்கல்லூரிமாணவன்குமாரதாசக்குருக்கள்விஷ்வசுந்தரசர்மாதேசியமட்ட தமிழ்த்தினப்போட்டியில்தனியிசை பிரிவு 3 இல் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவர் அருணோதயாக் கல்லூரி ஆசிரியை திருமதி யசோதா சிறிகுமாரனின் மாணவன். குறித்த போட்டி கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது என்று அருணோதயாக்கல்லூரி அதிபர் என்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4)

# விக்கியும் விஜயகலாவும் நாட்டுக்குப் பெரும் ஆபத்து



கொழும்பு, ஜூலை 24

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்மற்றும்முன்னாள்இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தெரிவிக்கும்கருத்துகளால், நாட்டுக்குப்பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு கண்டி அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கதேரர் ஆணமடுவே தம்மதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், கண்டி அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போருக்குப் பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், அரசு அசமந்தப்போக்குடன் செயல்படுகின்றது.

இது தொடர்பில், அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும், தமிழர் தரப்பிலிருந்துதங்களிடம்கோரிக்கை முன்வைக்கப்பட்டதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக்கோரிக்கையை ஏற்று, நாமும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து, தமிழ் மக்களின் சில பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்திருந்தோம் என்று, அனுநாயக்க தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சமஷ்டி ஆட்சிமுறை, மாகாண சுயாட்சி மற்றும் வட மாகாணத்துக்கானபொலிஸ்மற்றும்காணி அதிகாரங்களை வழங்க வேண்டுமென்கிற கோரிக்கைகளும் தமிழர்கள் தரப்பிலிருந்து முன்வைக்கப்படுகின்றன. இலங்கையானது, ஒற்றையாட்சி நாடு என்பதால், இவ்வாறான கோரிக்கைகள், ஒற்றையாட்சி முறைமைக்குப் பாதகத்தை ஏற்படுத்தும். ஆகவே, இந்தக் கோரிக்கைளுக்கு நாம் ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை. இதுதொடர்பில், உரிய தரப்பினருக்கு நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம்என்றுதேரர்மேலும்குறிப்பிட்டுள்ளார். (ரி2)

## பௌத்த கோட்பாடுகளை தெளிவுபடுத்தல் அவசியம்

### அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 24

வர்த்தக மயமாகியுள்ள சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு பௌத்த கோட்பாடுகள் பற்றி மக்களைத்தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்களும் கருத்தாய்வுகளும் மிக முக்கியமாகும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை அமரபுர மகா நிக்காயவின் அமரபுர அரிய வங்ஷ சத்தம்ம யுக்திக பிரிவின் மகா சங்கசம்மேளனம் நேற்று முன்தினம் வரலாற்று சிறப்புமிக்க பொலன்னறுவை புத்தி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில்கலந்துகொண்டு, கருத்துத்தெரிவிக்கும்போதேஅரச தலைவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பேதங்களின்றி இவ்வாறான பௌத்த போதனை நிகழ்வுகளைநடாத்துதல்காலத்திற்கேற்றவைஎனஅரசதலைவர் இதன்போது குறிப்பிட்டார்.

தான் சகல சந்தர்ப்பங்களிலும் மதிப்புக்குரிய மகா சங்கத்தினரின் போதனைகளையும் ஆலோசனைகளையும் மதித்துநடக்கும்அரசதலைவனாவேன்எனக குறிப்பிட்ட அரச தலைவர், சிறந்த ஒழுக்கப்பண்புமிக்க தேசத்தை உருவாக்குவதற்கு சமயத் தலைவர்களின் போதனைகளையும் ஆலோசனைகளையும் நடைமுறைப்படுத்தும் கடப்பாட்டைதமதுஅரசுகொண்டுள்ளதாகத்தெரிவித்தார்.

நாட்டிலுள்ளதூபிகள், விகாரைகளைஅபிவிருத்திசெய்யவும் அவற்றுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அரசு விரிவான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

தேரர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காகவும் மகா சங்கத்தினரின் ஆலோசனைக்கு அமைய செயல்படுத்தப்பட்டுள்ளபௌத்தபுனருத்தாபனநிதியத்தின் ஊடாக இதுவரை ரூபா 150 கோடிக்கும் அதிகமான நிதி அச்செயல்பாடுகளுக்காக செலவிடப்பட்டுள்ளதாக அரச தலைவர் குறிப்பிட்டார். சம்புத்த சாசனத்தின் மேன்மைக்காகமேற்கொள்ளப்படும்சேவைகளைப்போன்றேஇலங்கையின் அபிமானத்தைப் பாதுகாப்பதற்காகவும் அரச தலைவர் என்ற வகையில் செயல்படும் விதத்தை மகா சங்கத்தினர் பாராட்டி ஆசீர்வாதம் வழங்கினர்.

இலங்கைஅமரபுரமகாநிகாயவின்அமரபுரஅரியவங்ஷ சத்தம்மயுக்திகபிரிவின்கருத்தாய்வுத்திட்டம்இதன்போது அரசதலைவரிடம்கையளிக்கப்பட்டது.

பேராசிரியர் வண. நவகமுவே ரேவத்த நாயக்க தேரர் மற்றும் நாலப்பிட்டியே சரணஜோதி தேரரினால் எழுதப்பட்ட இரு நூல்களும் இதன்போது அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டன.

அகில இலங்கை அமரபுர மகா சங்க சபையின் தலைவர் இலங்கை சூலகந்தி பிரிவின் மகா நாயக்கர் அதிவண. கந்துனே அஸ்ஸஜி நாயக்க தேரர், அகில இலங்கை மகா சங்கசபையின்பூஜ்யபாதபல்லேகந்தேரத்தனசாரநாயக்க தேரர், பொலன்னறுவைபுராணஇசிபத்தனாராமரஜமகா விகாராதிபதி வடக்கு, வடமத்திய, கிழக்கு பிரதேச உடகம தம்மானந்தநாயக்கதேரர்உள்ளிட்டமகாசங்கத்தினரும் பொலன்னறுவை நகரபிதா சானக்க சிதத் ரணசிங்ஹ, மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். என்றுள்ளது. (ரி2)

### ஈரானுக்கு

## தேயிலையைக் கொடுத்து எரிபொருள் பெற யோசனை

கொழும்பு, ஜூலை 24

ஈரானிலிருந்து இலங்கை கொள்வனவுசெய்யும்எரிபொருள்களுக்குப் பதிலாக, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை பண்டமாற்று ரீதியில் ஏற்றுமதி செய்வது தொடர்பில், அரசு கவனம் செலுத்தியுள்ளது. இதுதொடர்பானயோசனையை, இலங்கைத்தேயிலைச்சபை முன்வைத்துள்ளது.

ஈரானின் அணுசக்தி வேலைத் திட்டங்களுக்கு எதிராக, ஐக்கிய நாடுகளால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் காரணமாக, அந்த நாட்டுடன் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது

இலங்கையில்உற்பத்திசெய்யப்படும்தேயிலையின்பெரும்பகுதியை, மத்திய கிழக்கு நாடுகளே இறக்குமதி செய்து வருகின்றன.

இவ்வாறானதொருநிலையில், ஈரான், இலங்கைத்தேயிலைக்கு, அதிக விலையைச் செலுத்துவதாக, இலங்கைத் தேயிலைச் சபையின் ஆணையாளர் ஜே.கே. எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதனால், இலங்கைஇறக்குமதிசெய்யும்எரிபொருள்பெறுமதிக்கேற்ப, இலங்கைத் தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில், அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எனினும் இது, இன்னும் யோசனையாகவே மாத்திரம் உள்ள நிலையில், அந்தயோசனையை, இலங்கைமத்தியவங்கிக்குஅனுப்பி, அனுமதி கோரப்பட்டுள்ளதாக, இலங்கைத் தேயிலைச் சபை, மேலும் குறிப்பிட்டுள்ளது. (ரி2)

### 6 மாதங்களில்

## 252 கொலைகள்

### கூறுகிறார் ருவான் குணசேகர



கொழும்பு, ஜூலை 24

2018ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 252 கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

விடயம்தொடர்பில்அவர்தெரிவித்ததாவது,

குடும்பப் பிரச்சினைகள், தகாத உறவுகள், பாதாள உலகச்செயல்பாடுகள் மற்றும் பழிவாங்குதல், கொள்ளைச்சம்பவங்கள்போன்ற காரணிகளின்அடிப்படையில்இந்தக்கொலைகள்பதிவாகியுள்ளன.

கடந்தஆண்டில்452படுகொலைகள்இடம்பெற்றுள்ளன. ஒப்பீட்டளவில் இந்த ஆண்டில் கொலைகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்தஆண்டில்3ஆயிரத்து, 368 கொள்ளைச்சம்பவங்கள்பதிவாகியுள்ளது. இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப் பகுதியில் ஆயிரத்து, 503 கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டில் ஆயிரத்து 732 பெண் பாலியல் துர்நடத்தைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளது- என்றார். (ரி2)

## மைத்திரி பங்கேற்ற நிகழ்வில் ஒலித்த சீனாவின் தேசிய கீதம்

கொழும்பு, ஜூலை 24

இலங்கையில், இடம்பெற்ற அரச நிகழ்வு ஒன்றில் சீனாவின் தேசியக் கீதம் முதலில் பாடப்பட்டது குறித்து சர்ச்சைகள் எழுந்துள்ளன.

அரச நிகழ்வுகளில் முதலில் இலங்கையின் தேசிய கீதம் பாடப்படுவது வழக்கம். அதன் பின்னரே, ஏனைய நாட்டின் தேசிய கீதம் பாடப்படும்.

எனினும், கடந்த சனிக்கிழமை பொலன்னறுவையில், நடந்த நிகழ்வு ஒன்றில் இந்த நடைமுறைக்கு மாறான வகையில், முதலில் சீனாவின் தேசிய கீதம் பாடப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற நிகழ்விலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சீனாவின் உதவியுடன், அமைக்கப்படவுள்ள 200 படுக்கைகளைக் கொண்ட சிறுநீரக நோய் சிகிச்சைக்கானசிறப்புமருத்துவமனைக்குஅடிக்கல் நடும் நிகழ் விலேயே சீனாவின் தேசிய கீதத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. (ரி2)





கோடைகால விழாக் கொண்டாட்டங்கள் ஜப்பானில் தற்போது கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காகித விளக்குகள் இந்தக் கொண்டாட்டங்களின் முக்கிய அம்சமாக உள்ளன. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்த ஒளிப்படத்தை வெளியிட்டது. (ம)

## ஈரானில் நிலநடுக்கம்

தெக்ரோன், ஜூலை 24

ஈரானில் நேற்று மூன்று தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈரான் நாட்டின் தென்பகுதியில் உள்ள ஹோர்மோஸ்கான் மாகாணத்தில் நேற்று மூன்று தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டது. 4.7, 5.7, 5.9 அலகுகளாக இந்த நிலநடுக்கங்கள் பதிவாகின. ஆங்காங்கே கட்டட வெடிப்புக்கள் ஏற்பட்டன. 25 பேர் காயமடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)




## ஈரானுட...
## போர் மு...

### அமெரிக்...



தெக்ரோன், ஜூலை 24

"ஈரானுடன் அமெரிக்க மோதினால், அது அனைத்துப் போருக்கும் ஊற்றாகவும் தாய்ப் போராகவும் அமையும்" என்று எச்சரித்தார் ஈரான் அதிபர் ரவுகானி.

ஈரானுடன் தான் கொண்டிருந்த அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிய அமெரிக்கா ஈரான் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதிக்கவும், அந்த நாட்டைத் தனிமைப்படுத்தவும் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதன்படி ஈரானிடம் இருந்து கச்சா இறக்குமதியை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா உலக நாடுகளை வலியுறுத்தி வருகிறது. அவ்வாறு தமது ஏற்றுமதியை அமெ

## நவாஸ் செரீப்புக்கு எதிராக பாகிஸ்தான் உளவுத்துறை


### தலைமை நீதிபதி குற்றச்சாட்டு


இஸ்லாமபாத், ஜூலை 24

"பாகிஸ்தானின் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் செரிப்பும், அவரது மகள் மரியமும் சிறையில் இருந்து வெளியே வரக்கூடாது என்பதில் பாகிஸ்தான் உளவுத்துறை உறுதியாக உள்ளது" என்று அந்த நாட்டின் உச்ச நீதிமன்ற நீதிபதியொருவர் குற்றம் சுமத்தினார்.

பனாமா ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் செரீப்புக்கு 10 ஆண்டுகளும், அவரது மகள் மரியத்துக்கு 7 ஆண்டுகளும், மருமகன் முகமது சப்தாருக்கு ஓர் ஆண்டும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட அனைவரும் இஸ்லாமாபாத்தில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் ராவல்பிண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அந்த நாட்டின் தலைமை நீதிபதி சித்திக் கலந்துகொண்டு பேசினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பாகிஸ்தான் நீதித்துறை மற்றும் ஊடகங்களை உளவுத்துறை தன்வசப்படுத்த நினைக்கிறது. குறிப்பாக நீதித்துறை சுதந்திரமாக செயற்படக் கூடாது எனக் கருதுகிறது. ஊடகங்கள் உண்மையை எடுத்துக் கூற தடை விதிக்கிறது. பல வழக்குகளில் நேர்மையான தீர்ப்பு வழங்கக்கூடாது. தாங்கள் விரும்பியபடிதான் தீர்ப்பளிக்க வேண்டும் என அச்சுறுத்துகிறது. நவாஸும் அவரது மகளும் சிறையில் இருந்து வெளிவரக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளது" என்று சித்திக் மேலும் தெரிவித்தார். (ம)





## கனடாவில் காட்டுத் தீ

றொறன்டோ, ஜூலை 24

கனடாவில் சுமார் 7 இடங்களில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் காட்டுத்தீ பரவி வருகிறது. அங்கு சுமார் 7 இடங்களில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

சுமார் 2 ஆயிரம் பேர் தத்தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம)

## போர் நிறுத்த ஒப்பந்த... தீவிரமாகச் செயற்படுத்...

### தென்கொரியாவை வலியுறுத்திய வட...

பியாங்யாங், ஜூலை 24

போர் நிறுத்த ஒப்பந்தத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தென்கொரியாவை வடகொரியா வலியுறுத்தியது.



கடந்த ஆறு தசாப்தங்களாகப் பகைநாடுகளாக இருந்த வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் இருவரும் அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பை அடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட்டன. குறிப்பாக, இரண்டு நாடுகளின் எல்லைப் பிரச்சினையால் பிளவுபட்டுள்ள குடும்பங்களை மீண்டும் ஒன்றிணைத்தல், எல்லையில் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துதல், எச்சரிக்கை ஒலிபெருக்கிகளை அகற்றுதல், போர்ப் பயிற்சிகளையும், அணுவாயுதச் சோதனைகளையும் நிறுத்துதல் ஆகிய ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகின. இந்த ஒப்பந்தங்களில் காத்திரமானவை என்று பாராட்டப்பட்ட போதிலும் இன்னமும் அவை முழுமையாகச் செயற்படுத்தப்படவில்லை. ...

தத்தை முழுமையாக நடைமுறை...
தென்கொரியாவை வலியுறுத்திய...
நிறுத்த ஒப்பந்தத்தை நிறைவேற்...
தென்கொரியாவுக்கும் உள்ளது. அ...
தென்கொரியா செயற்பட வேண்டு...
அயலுறவுத்துறை மேலும் தெரி...

## ஹமாஸ் இஸ்ரேல் போ...

டெல்அவிவ், ஜூலை 24

இஸ்ரேல் படைகளுக்கும் ஹமாஸ் ஆயுதக் குழுவுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.


பலஸ்தீனத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனது பிடியில் வைத்துள்ளது இஸ்ரேல். இஸ்ரேலின் பிடிக்குள் உள்ள பலஸ்தீனப் பகுதிகளை மீட்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அமைப்புத்தான் ஹமாஸ். காசா எல்லையில் முகாமிட்டுள்ள ஹமாஸ் அமைப்பு அவ்வப்போது இஸ்ரேலுக்கு எதிராக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துவதும் பின்னர் இஸ்ரேல் அதற்குப் பதிலடி கொடுப்பதும் காலாகாலமாக நடைபெற்று வருவதுதான். காசா பகுதியில் இஸ்ரேலுக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்களை ஹமாஸ் அமைப்பே ஒழுங்கமைக்கிறது.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவிக்கப்பட்ட பின்னர் காசா எல்லையில் ஹமாஸ்-இஸ்ரேல் இடையிலான மோதல் உச்சம் தொட்டிருந்தது. இரு தரப்புக்களும் நேரடித் தாக்குதல்களிலும் ஈடுபட்டு வந்தன. ...

எதிராக இராணு...
கள் மேலும் இறு...
இஸ்ரேலின் அ...
யாகு எச்சரித்...
றிருக்க எவரும் ...
ணம் இந்த இர...
ளும் தமக்கிடை...
ஒப்பந்தத்தில் ...
ளன. கடந்த சில ...
முன்னரும் இர...
இவ்வாறானதொ...
ஒப்பந்தத்தில் ...
போதிலும் பின்ன...
டமை குறிப்பிடத்...

# டன் மோதினால் அது
# ழனையாக அமையும்

## ிக்காவை எச்சரித்தார் ரவுகானி



ரிக்கா கட்டுப்படுத்த நினைத்தால் மத்திய கிழக்கில் இருந்து எந்த வொரு நாடும் கச்சா ஏற்றுமதி செய் வதைத் தடுப்பதுடன் ஜலசந்திப் பகுதி முடக்கப்படும் என்றும் ஈரான் தெரிவித்திருந்தது. இவ்வாறாக நாளுக்கு நாள் அமெரிக்காவுக்கும் ஈரானுடக்கும் இடையிலான போர் தீவிரம டைந்துவரும் நிலையில் "ஈரானுடன் அமெரிக்கா மோதி னால் அது அனைத்துப் போருக்கு மான தாய்ப்போராக அமையும்" என்று தெரிவித்தார் ஈரானுடன் அதிபர் ரவுகானி. அத்துடன் ஈரானை அமெரிக்கா மோதுவதென்பது, "சிங் கத்தின் வாலைப் பிடித்து சீண்டு வ தற்குச் சமமானது" என்றும் ரவுகானி மேலும் குறிப்பிட்டார். (ம)

# தத்தை
# த்தவும்

## டகொரியா



லை. இவ்வாறிருக்க ஒப்பந் றைப்படுத்த வேண்டும் என்று த்தியது வடகொரியா. "போர் வேற்ற வேண்டிய பொறுப்பு து. அதைக் கருத்தில்கொண்டு வண்டும்" என்று வடகொரிய தெரிவித்துள்ளது. (ம)



# பயணங்களில் பயமில்லை!

பாரிஸ், ஜூலை 24

பிரான்ஸைச் சேர்ந்த கார் தயாரிப்பாளர் சிட்ரோயன், புதுமை யான கண்ணாடியை உருவாக்கியிருக்கிறார். இந்தக் கண்ணா டியை அணிந்துகொண்டால், பயணங்களில் ஏற்படும் தலைவலி, வாந்தி போன்ற உடல் உபாதைகளில் இருந்து விடுபடலாம்.

வழக்கமான கண்ணாடிகளில் இரண்டு கண்ணாடிகள் பொருத் தப்பட்டிருக்கும்.

இதில் நான்கு கண்ணாடிகள் இருக்கின்றன. கண்ணாடிகளைச் சுற்றி, பிளாஸ்டிக் குழாய்களில் நீல வண்ணத் திரவம் நிரப்பப்பட்டிருக்கிறது.

பயணம் ஆரம்பித்தவுடன் இந்தக் கண்ணாடியை 10 நிமிடங்கள் அணிந்துகொண்டால் போதும். உடல் பயணத்துக்கு ஏற்றால் போல் தன்னைத் தயார் செய்துகொள்ளும். அதற்குப் பிறகு படிக் கலாம், திரைப்படம் பார்க்கலாம். எந்தப் பிரச்சினையும் ஏற்படா தாம். (ம)

# போர் நிறுத்த ஒப்பந்தம்

ந்தன. ஹமாஸுக்கு ாணுவ நடவடிக்கை இறுக்கப்படும் என்று ் அதிபர் நெத்தன் த்திருந்தார். இவ்வா ரும் எதிர்பாரா வண் இரண்டு தரப்புக்க டையே போர் நிறுத்த ல் கைச்சாத்திட்டுள் சில வாரங்களுக்கு இரண்டு தரப்பும் ாதொரு போர்நிறுத்த தில் கைச்சாத்திட்ட பின்னர் அது மீறப்பட் யிடத்தக்கது. (ம)





# 'பார்பிக்யூ' உணவும் நைஜீரியக் காடும்

நாம் உண்ணும் உணவுக்கும் நைஜீரியாவில் வெட்டப்படும் மரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்றால் நம்ப முடி கிறதா?. நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்கிறது அறிவியல். அதற்கான எண் ணற்ற ஆதாரங்களையும் அடுக்குகிறது. காடுகள் அதிவேகமாக அழிக்கப்படும் நாடுகளில் ஒன்றாக நைஜீரியா இருக்கி றது. 'பார்பிக்யூ' உணவுகளால்தான் இந்தக் காடழிப்பு நிகழ்கிறது. குறிப்பாக பிரிட்டனில் நுகரப்படும் பார்பிக்யூ உண வுகளால் என்கிறார்கள் அறிவியலா ளர்கள்.

பார்பிக்யூ உணவு சமைக்க அதிகளவி லான கரி தேவை. இந்த கரி தேவைக் காகதான் காடுகள் அழிக்கப்படுகின் றன. இதை குறுகிய எண்ணவோட்டத் தில் புரிந்து கொண்டால் சாதாரணமா கத் தெரியலாம். ஆனால், உண்மை நிலவரம் அசாதரணமானதாக இருக்கி றது. கடந்த ஆண்டு பிரிட்டன் மட்டும் 90 ஆயிரம் தொன் கரியை இறக்குமதி செய்திருக்கிறது. அதெல்லாம் சரி, இதை எப்படி நைஜீரியா மரங்களின் கரி என்று சொல்கிறீர்கள்? என்ற சந்தேகத்திற்கான விடையை சொல்கிறது 'பிபிசி' மேற் கொண்ட ஆய்வு.



### ஆய்வு சொல்லும் கதை

பிபிசி பல சூப்பர் மார்க்கெட்டுகளில் கரி பைகளை (Charcoal Bags) வாங்கியது. அதனை ஜேர்மனியில் உள்ள ஓர் ஆய் வகத்திற்கு அனுப்பியது. மரங்கள் தொடர்பான ஆய்வகமான துணின் நிறுவனத்தில் ஆய்வாளர் வோல்கர் ஹாக் இந்த ஆய்வினை மேற்கொண் டார். அவர், "நாங்கள் ஆய்வு செய்த மரத்துண்டுகள் வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டல காடுகளைச் சேர்ந்தவை" என்கிறார்.

அழிந்து வரும் பல உயிரினங்களுக்கு புகலிடமாக வெப்ப மண்டல காடுகள் திகழ்கின்றன. பருவநிலை மாற்றத்தை எதிர்க்கொள்ள வேண்டுமானால் இந்த வெப்ப மண்டல காடுகளைக் காக்க வேண்டும். சந்தையில் விற்பனையில் இருக்கும் கரி பைகளில், அவை எந்த பகுதியிலிருந்து வெட்டப்பட்ட மரங்கள் என்ற குறிப்புகள் எதுவும் இல்லை. ஆனால், பெரும்பாலான பைகள் எப். எஸ்.சி லோகோவை தாங்கி நிற்கின் றன. எப்.எஸ்.சி என்பது 'பொரஸ்ட் ஸ்டி வெர்ட் கவுன்சில்' என்பதைக் குறிக்கும்.

இந்த நிறுவனமானது உலகளவில் மர சாமான் களுக்கு சான்றிதழ் தரும் மிகப்பெரிய நிறுவனம்.

அந்த நிறுவனத்தின் தலைவர் கிம் சார்ஸ்டென் சென், "பிரிட்டன் சந் தைக்கு வெப்ப மண்டல காடுகளின் மரக்கரி வருகி றது என்பதில் எந்த சந்தே கமும் இல்லை. ஆனால், அந்த மர கரிகள் பைக ளில் நிச்சயம் எங்கள் நிறு வனத்தின் இலச்சினை இருக்காது. ஆனால், அதே நேரம் நாங்கள் சான்றி தழ் அளித்தவற்றில் எந்த பிரச்சனையும் இல்லை என்றும் சொல்லிவிட முடி யாது" என்கிறார்.

### அஞ்சத்தக்க வகையில்

கடந்த ஆண்டு நைஜீரியாவும், பராகு வேவும் பத்தாயிரம் தொன்கள் அள வுற்கு மரக்கரியை ஏற்றுமதி செய்துள் ளன. நைஜீரியன் பாதுகாப்பு சங்கத்தை சேர்ந்த ஸ் ரீபன், "அஞ்சத்தக்க வகை யில் நைஜீரியக் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன" என்கிறார். மேற்கு நைஜீ ரியாவில் இருக்கும் க்வாரா மாகாணம் தான் கரி உற்பத்திக்கான முக்கியமான மையம். ஐ.நா அமைப்பு, "உலகளவில் இந்த கரி தேவை வரும் தசாப்தங்களில் அதிக அளவில் அதிகரிக்கும்" என்று கணிக்கிறது. இந்தக் கணிப்பில் உள்ள அப்பட்டமான உண்மை, அடுத்தடுத்த தசாப்தங்களில் நைஜீரியக் காடுகள் வகைதொகை இல்லால் அழிக்கப்பட வுள்ளன என்பதே.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கறுப்பு ஜூலையை மறந்துவிடவேண்டாம்!

ஈழத்தமிழர்களின்வரலாற்றில் 35 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய நாள் பயங்கரம் நிறைந்த ஒருநாள். தமது எதிர்காலம் குறித்த கேள்வியை, நிச்சயமற்றதன்மையை தமிழர்கள் உணர்ந்த நாள்கள் அவை. வடக்கு கிழக்குதான் ஈழத் தமிழர்களின் தாயகபூமி என்பதை கொழும்பு அரசே மறைமுகமாக ஏற்றுக்கொண்டு செயற்படுத்திக் காட்டிய நாள்கள். இலங்கையைப் புரட்டிப்போட்ட வரலாற்றின் கறுப்பு நாள். 'கறுப்பு ஜூலை' என்று நினைவுகூரப்படும் அந்த நாளின் 35ஆவது ஆண்டு தினம் இன்று.

பொதுவாகக் கறுப்பு ஜூலை நினைவு தினம் ஜூலை மாதம் 23ஆம் திகதியாகக் கொள்ளப்பட்டாலும் 24ஆம் திகதி இரவு முதலே தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளும், கொலைவெறித்தாண்டவமும்கட்டவிழ்த்துவிடப்பட்டன. அதுமூன்று நான்கு நாள்களுக்குத் தொடர்ந்தது. எப்போதும் போலவே இந்த வன்முறைகளிலும் கொல்லப்பட்ட தமிழர்கள் தொடர்பாகவும் சேதமாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாகவும் எந்தவிதமான உத்தியோகபூர்வ தகவல்களும் அரசு வசம் இல்லை. ஆனால் 3 ஆயிரம் வரையான தமிழர்கள் இந்த மூன்று நாள்களில் கொல்லப்பட்டார்கள் என்றும் 8 ஆயிரம் வீடுகளும் 5 ஆயிரம் கடைகளும் அடித்து நொருக்கப்பட்டுச் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன என்றும், உத்தியோகப்பூர்வமற்ற தகவல்கள் உண்டு. கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில்மட்டும்ஒருலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் முகாம்களிலும் வெகு சிலர், சிங்கள நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்தார்கள்.

இந்த வன்முறையின் மையமாகவும் பெருமளவில் கவனத்தை ஈர்த்ததாகவும் கொழும்பும் அதனை அண்டிய பகுதிகளுமே இருந்தன என்றாலும், நாட்டின் பல பகுதிகளிலும் தமிழர்கள் பொருளாதார ரீதியில் ஆழ வேரூன்றி இருந்த இடங்களில் எல்லாம் திட்டமிட்டு அவர்களுக்கு எதிரான இந்த இன வன்முறை, இன அழிப்பு முன்னெடுக்கப்பட்டது. அன்று தங்களுடைய வர்த்தகத்தையும் சொத்துக்களையும் கைவிட்டு வந்தவர்களில் பலர் இன்றுவரை அந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லவும் இல்லை. தமது வியாபாரத்தை, வர்த்தகத்தைத் திரும்பப் பெறவும் இல்லை. பல தனிச் சிங்களப் பகுதிகளில் வர்த்தகத்தை தம் வசம் வைத்திருந்த தமிழர்களுக்குத் திரும்பிச் செல்லும் வாய்ப்பு எப்போதும் கிடைக்கவே இல்லை. அதற்கான இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ஜூலை 23ஆம் நாள் இராணுவ வாகனம் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்த நடத்திய தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பு ஆட்சியாளர்களின் ஆசியுடன் திட்டமிட்டு இந்த வன்முறை, இனக் கலவரம், இன அழிப்புப் போர் தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்டது. ஆட்சியில் இருந்த ஜே.ஆர்.ஜெவர்த்தனநாடாளுமன்றத்திலும்பொதுவெளியிலும் "போர்என்றால் போர் அமைதி என்றால் அமைதி" என்று தமிழர்களைப் பார்த்துச் சவால்விட்டார். அவரது அமைச்சர்களும் அரசியல் சகபாடிகளும் பின்னணியில் இருந்து ஊக்கம் கொடுத்து காடையர்களையும் முரட்டுக் கும்பலையும் வைத்து, தமிழர்களுக்கு எதிரானஈனச்செயல்அனைத்தையும்அரங்கேற்றினர். முதன்மை எதிர்க் கட்சியாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட ஏனைய கட்சிகளும் அமைதிகாத்து அரசின் இனவெறிச் செயற்பாட்டை ஆதரித்தன.

இலங்கையின் வரலாற்றையும் தமிழர்களின் அரசியல் செல்நெறியையும்தலைகீழாகப்புரட்டிப்போட்டது இந்தச்சம்பவம். தமிழ் இளைஞர்கள் தொடங்கியிருந்த ஆயுத வன்முறைப் போராட்டத்திற்கு எண்ணெய் ஊற்றித் தீ வைப்பதாக இது அமைந்தது. அடுத்து வந்த 30 ஆண்டுகாலத்துக்கு அதன் வெம்மை முழு நாட்டையும் சுட்டெரித்தது.

இப்படிப்பட்ட கறுப்பு ஜூலையின் நினைவலைகளை அடுத்தடுத்ததலைமுறைகளிடம்கடத்துவதற்கானஎந்தமுயற்சிகளும் இல்லை என்பது பெரும் கவலை. ஊடகங்களைத் தவிர்த்து மக்களிடம் இதனை எடுத்துச் செல்வதற்கான பொதுவெளி முயற்சிகள் எவையும் இல்லை. தேவைப்படும் நேரங்களில் எல்லாம் தமது அரசியலுக்கு இதனைப் பயன்படுத்திக்கொள்ளும் தமிழ் அரசியல்வாதிகளும்கூட 'கறுப்பு ஜூலை'யின் நினைவு நிகழ்வுகளைப் பெருமெடுப்பில் நடத்துவதற்கு எந்த ஏற்பாடும் செய்வதில்லை. இலங்கையில் நடந்தது தமிழ் இனப்படுகொலையே என்று வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியபோதும், அதற்கான முக்கிய, நெருங்கிய சான்றாக இருக்கும் 'கறுப்பு ஜூலை'யை நினைவுகூர்வதற்கான பொது நிகழ்வு எதனையும் அது ஏற்படுத்தவில்லை என்பது வரலாற்றுத் துன்பியல்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாமல் நினைவேந்தப்படவேண்டியது கறுப்பு ஜூலையும் தான். எனவே இனியும் காலந்தாழ்த்தாது கறுப்பு ஜூலையை நினைவேந்த ஒரு பொது நிகழ்வு பொது வெளியில் பொது நிர்வாகத்தின் கீழ் ஏற்படுத்தப்படவேண்டும்.



# பன்னாட்டுப் பெண்கள் மாநாடு சொல்லும் செய்திதான் என்ன?

(கடந்த 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பன்னாட்டுப் பெண்கள் மாநாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது)




ப்ரியமதா பயஸ்

யாழ்ப்பாணத்தில் முதற்றடவையாக பன்னாட்டு பெண்கள் ஆராய்ச்சி மாநாடு இந்த வருடம் இடம்பெற்றமை உலகப் பெண்களுக்கே மிகப் பெரிய பேறாக குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயமாக அமைந்ததெனலாம்.

யாழ்மாவட்ட அரச சார்பற்ற இணையத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ரி.தேவானந்த் தலைமையில் இந்த மாநாடு,சிறப்புற இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. காலத்தின் தேவை அறிந்து, இடத்தையும், கருப்பொருளையும், தெரிவு செய்தமை ஏற்பாட்டாளர்களின் பெண்கள் மற்றும் பெண்ணியம் தொடர்பான பெரும் கரிசனையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இரண்டு நாள்கள் முழுநாள் கருத்தமர்வாக இடம்பெற்ற இந்த மாநாட்டில் 83 ஆய்வாளர்களின் பங்களிப்பில் 52 ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளைச் சமர்ப்பித்திருந்தனர்.



நிகழ்வுக்கான வரவேற்பையும், வரவேற்புரையையும், மாலைநேர தலைமை தாங்கலையும் நிகழ்வின் முக்கிய பங்காற்றிய இலங்கை மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் வழங்கியிருந்தார்.

### பயனளிக்கத்தக்க சமூக நிலைப்பாடு தொடர்பான ஆய்வுரைகள் முன்வைக்கப்பட்டன

இந்த மாநாட்டில் உரையாற்றிய அறிஞர்களும், ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்த ஆய்வாளர்களும் ஒட்டுமொத்த உலகப்பெண்கள் பற்றிப் பேசாதமை வருத்தத்துக்கு உரிய ஒன்றுதான். ஆனாலும் அவரவர் தமது சமூக நிலைப்பாடு சார்ந்து மிகத் துல்லியமான ஆய்வுகளையும், பூரண விளக்கங்களையும் முன்வைத்திருந்தார்கள்.

வரலாற்றில்முதற்றடவையாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பன்னாட்டுப் பெண்கள் மாநாட்டில் இடம்பெற்ற ஆய்வுகளும், கருத்துரைகளும், கருத்தரங்கில் பங்குபற்றிய பெண்ணிய செயற்பாட்டாளர்களையும், ஆர்வலர்களையும் தெளிவடையவும் அடுத்த படிநிலைக்கு இட்டுச்செல்லவும் வழிகோலி உள்ளது.

உலக அளவில் ஒவ்வொரு நிமிடத்துக்கும் ஒவ்வொரு பெண்ணும் ஏதோ ஒரு வகையில் அவள் சார்ந்த சமூகத்தால் பாதிப்பை எதிர் கொள்கின்றாள் என்பது மிக துல்லியமான உண்மை. அந்த துன்பங்கள்தான் எவை? அவை எப்படியாக பெண்களைத் தாக்குகின்றன என்பது தொடர்பில் எல்லாப் பெண்களுக்கும் விளங்கவைக்க வேண்டிய தேவை ஒவ்வொரு அரசுக்கும் இருக்கின்றது.

### யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் முன்வைத்த பயனுள்ள கருத்துக்கள்

அதை உணர்ந்தவராக முதல் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலர் திருமதி சுகுணவதி தெய்வேந்திரம் பெண்கள் தொடர்பான முக்கிய விடயங்களை முன்வைத்தார் இவை யாழ். மாவட்ட பெண்கள்தொடர்பாக என்றில்லாமல் ஒட்டுமொத்த பெண் இனத்தவர்களுக்கும் வேண்டப்பட்ட கருத்துக்களமாகவே அமைந்திருந்தது. யாழ்மாவட்டத்தில் மட்டும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுவதாககுறிப்பிட்ட அவர், மாற்றுவலுவுடைய, கணவன்மார்களை கொண்ட குடும்பங்கள், காணாமல் போன கணவன்மார்களைக்கொண்ட குடும்பங்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்தலைமைத்துவம் கொண்ட குடும்பங்கள், என ஒவ்வொரு வழியிலும் வாழ்க்கையில் தலைமை தாங்கவேண்டிய கட்டாயத்தில் உள்ள வெவ்வேறு தரப்பினரை பட்டியலிட்டார். நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறியீட்டில் பெண்களது பங்கு 2030 ஆம் ஆண்டளவில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பெண்களுக்கான வகிபங்கு கடடாயம் பூரணப்படுத்தப்படவேண்டும், போரால் பாதிக்கப்பட்ட பெண்களைவலுவூட்ட முடியவில்லை. கிராமியப்பெண்கள் சரியான முறையில் வலுவூட்டிடப்படவில்லை. 2030ஆம் ஆண்டிலாவது எமது நாட்டுப்பெண்கள் வலுவடைய வேண்டும், கட்டுக்கோப்பான சமூகத்தை பெண்களே உருவாக்குகின்றனர், 1980ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர் குறித்த காரணங்களால் சமூகப் பெண்களின் பார்வையில் பெரும் இடைவெளி தோன்றியுள்ளது. 75 வீதமான பலதார திருமணங்கள் தற்போது அதிகரித்திருப்பதற்கான காரணங்கள் என்ன? இன்றைய இளையோரின் நிலை சமுதாய மாற்றம், மகிழ்ச்சியான குடும்பத்தை ஏற்படுத்த என்ன செய்யவேண்டும்? தற்போது தலைவிரித்தாடும் நுண்கடன் திட்டத்தில் பெரிய இடர்களை எதிர்நோக்கும் பெண்கள், சிறந்த தலைமைத்துவம் இன்மையால் அந்த சவாலை எதிர்கொள்ள முடியாதுள்ளனர், சிறந்த தலைமைத்துவம் உள்ள பெண்களால் இதை முறியடிக்க முடியும் என்றும், மேலதிக மாவட்டச் செயலர் தெரிவித்தார், இதுதொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தாலும், அதில் முழுமையாக வெற்றியடைய முடியவில்லை. அதற்குப் பெண்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைக்காமை பற்றி அவர் வருத்தம் தெரிவித்தார், தற்போது இளையோர் தடுமாறுவதற்கான காரணம், சமூகத்தில் பெண்கள் தமக்கான வகிபாவத்தை சரியாக பயன்படுத்தாமையே என அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்தியாவில் இருந்து வருகைதந்த ஆய்வாளர்கள்

**போருக்குப்பின் இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த பெண்களே இலக்கியம் சார்ந்த பெண் புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர் .பெண்கள் மொழிமூலமாக மாற்றத்தை முன்வைத்துள்ளனர். மாநாட்டில் நடத்தப்பட்ட ஆய்வுகளும் உரைகளும் சிறப்பான பெண்ணியத்தை கட்டியெழுப்ப முனைந்த பேரறிவாளர்களின் ஆக்கபூர்வ சிந்தனை களாகவே அமைந்திருந்தன.**



மற்றும் .சிறப்பு விருந்தினர்களில் எதிராஜ் பல்கலைக் கழக விரிவுரையாளர் அரங்கமல்லிகா தனது சிறப்பு உரையில், உலக நாடுகளில் நடந்திருக்கும் போரும், போருக்கு பின்னரான அரசியலும் சொல்வது பெண்கள் எல்லா நேரங்களிலும் கண்காணிக்கப்படுகின்றனர் என்பதைத்தான். அதிகாரம் என்பது ஆதிக்கம் சார்ந்தது எனவும், அதிகாரம் என்பது எதிர்வினையாற்றக்கூடிய தாகவும் இருக்க வேண்டும், இது பெண்கள் விடயத்தில் முக்கிய வகிபாவத்தை பெறவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார் .

**பெண்கள் மீதான தவறான செயற்பாடுகள் தொடர்வதாகக் குற்றச்சாட்டு**

உலக அரங்கில் பெண் குழந்தைகள் கடத்தப்படுவதும், காணாமற்போவதும் ஏன் என்ற கேள்வி எழுகின்றது

பெண்கள் பற்றி ஏராளம் பேசினாலும், பெண்கள் ஒடுக்கப்படுவதும், கடத்தப்படுவதும் , துர்நடத்தைக்கு உட்படுத்தப்படுவதும் இன்றுவரை நிறுத்தப்படவில்லை.



பொருளாதாரத்தை பெண்கள் கையில் எடுக்க வங்கிக்கடன்கள் அவர்களுக்கு உதவுகிறது .அவர்கள் அதனைப் பயன்படுத்த வேண்டும் .

பெண்கள் தத்தம் உடல்சார்ந்த விடயங்களில் கரிசனை கொள்ள வேண்டும். உடல்சார்ந்து பார்க்கும்போது பெண்கள் தம் உடல் ஆரோக்கியத்தைப் பேணத் தயாராக இல்லை, கருவைச் சுமக்கும் பெண்கள் கூட, தத்தமது உடல் ஆரோக்கியத்தை பேணுவதில்லை. பொதுவில் நாளாந்த வாழ்க்கையில் பெண்களில் 65 வீதமானோர் அதிகம் பசியோடு வாழ்வதாக உலகவங்கி நடத்திய ஆய்வு கூறுகின்றது, என்றார் .

இலங்கையில் பெண்கள் போர்க்காலத்தில் போரிட்டார்கள் படைப்பிரிவுகளின் தலைவிகளாகவும் இருந்தார்கள் அதனால், கலாசார மாற்றம், சமூகமாற்றம் என்பவை நிகழ்ந்துள்ளன. இருந்தாலும் பெண்கள் பெரிய அளவில் வளர்ந்துள்ளார்களா?, என்றால் "இல்லை" என்றே சொல்லவேண்டும் .1992 ஆம் ஆண்டே கிராமப்புறப் பெண்கள் வாழ்வியலில் குடும்பங்க ளுக்குத் தலைமை தாங்கலாம் என்பதற்கு இந்தியா அனுமதி வழங்கி இருக்கின்றது .

இப்போதும் காப்பாற்றப்படவேண்டியவர்களாக பெண்கள் இருக்கின்றார்கள். தாய்மை நிறைந்த பெண்கள் கட்டாயம் காப்பாற்றப்படவேண்டியவர்கள் .

இந்தியாவைப்பொறுத்த வரையில் தலித் பெண்கள் வாழ்க்கையில் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்பதை உலகம் தெரிந்துகொள்ளல் அவசியம்.

போருக்குப்பின் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த பெண்களே இலக்கியம் சார்ந்த பெண் புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர் .பெண்கள் தத்தமது மொழிமூலமாக மாற்றத்தை முன்வைத்துள்ளனர், எனவும் அவர் கூறினார் .

மாநாட்டில் நடத்தப்பட்ட ஆய்வுகளும், உரைகளும் சிறப்பான பெண்ணியத்தைக் கட்டியெழுப்ப முனைந்த பேரறிவாளர்களின் ஆக்கபூர்வ சிந்தனைகளாகவே அமைந்திருந்தன.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர். விக்கினேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், பெண்கள் கல்வியிலும் , சமூக வாழ்வியலில், பொருளாதாரத்திலும் முழுமை பெறவேண்டியுள்ளது .பெண்கள் அரசியல், சமூக ,பொருளாதாரத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும், பெண்கள் குடும்பத்தில் வகிக்கும் தலைமைத்துவம், நாடளாவிய ரீதியில் வெளிப்படுத்தப்பட வேண்டும் .பெண்கள் செய்யும் வேலைகள் நாட்டை வளப்படுத்தும் என பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்தார் .

யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நிகழ்வில் உரையாற்றும்போது முக்கிய புள்ளிவிபரம் ஒன்றை வெளியிட்டார் 80வீதமான பெண்கள் தமது பயணங்களின்போது துன்புறுத்தப்படுகின்றனர் என்ற செய்தியே அது. இதனைப் பெண்களே முறி யடிக்க வேண்டும். பெண்கள் தமது பாதுகாப்பிலும் , பயணங்களிலும் தம்மை, தமது வகிபாவத்தை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதை இது சுட்டிக்காட்டு கின்றது .

"இலங்கையில் ஒழுக்கமான பாதுகாப்பான பணியிட சூழல் உருவாக்கப்படவேண்டும் எனவும் .மதுபான சாலைகளை மூடுவதற்கு எவரும் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை என்பதையும் மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார் ,பல்கலைக்கழகத்தில் 65 வீதமான பெண்கள் கல்விகற்றும், பெண்கள் மத்தியில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை என்றார் அவர்.

நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகள், குறிப்பிட்ட அளவு முடிவுகளை வெளிப்படுத்தவில்லை. இதனை ஒரு குறையாக கருதாது ஆய்வுகள் சார்ந்த கருத்துக்களை நாம் எமது பார்வைக்கு எடுத்துக்கொண்டால் , முதல் ஆய்வுக்கட்டுரையாக மருத்துவ பீட மாணவன் வேதநாயகம் அன்டனி சரோன் பெண்களின் மார்பக புற்றுநோய் தொடர்பில் தாதிகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றைச் சமர்ப்பித்திருந்தார் . நீரிழிவு நோயை ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்தல், இரண்டாம் நிலைக்கு இட்டுச் செல்லாமல் பாதுகாத்தல் தொடர்பான ஆய்வறிக்கையை வினித்ரா ஜெயபிரகாஷ் வழங்கியிருந்தார்.

பெண் தாதியர் பணியில் வேலைத் தரத்தை பாதிக்கும் காரணிகள் என்பது தொடர்பாக ஶ்ரீபாலி நந்தகுமார ஆய்வறிக்கையொன்றை வாசித்தார்.

தரம் 8 மற்றும் 9இல் கல்வி பயிலும் பெண்களுக்கு இடையில் நோய்த்தாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய காரணிகள் தொடர்பில் யாழ் கல்வி வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை ஜே.எ.ரி .ரி .என் .ஜெயதிஸ்ஸ என்பவரால் வாசிக்கப்பட்டது.

வாழ்க்கைத் தரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய காரணிகள், முதிய பெண்களின் வாழ்வியலில் செலுத்தும் தாக்கம் தொடர்பாக நல்லூரில் உள்ள முதிர் வயதுடையோரை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கை கே.தனுஜன் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதேபோல மலையக பெருந்தோட்ட ப் பெண்களின் சுகாதாரமும் அதன் சவால்களும் என்ற ஆய்வும் புளோரிடா சிமியோன் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டது.

**மலைநாட்டு பெண்களது வாழ்வியல் சிரமநிலை வெளிக்கொணரப்பட வாய்ப்பு**

அதேபோல மாநாட்டின் தலைப்புக்கு ஏற்ப வாழ்க்கையை தொலைத்த ஊர் தலைமுறையினர். போரின் பின்னரான பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வியல், என்ற தலைப்பில் சரோஜா சிவச்சந்திரனும் ,வடக்கில் மாற்றுப்பாலினத்தாரின் உரிமைகள் தொடர்பாக எஸ்.ஏ.சந்தோஷ் என்பவரும்,பெண்களுக்கெதிரான பால்நிலை வன்முறை; ஓர் பார்வை என்ற தலைப்பில் .புளோரிடா சிமியோன் என்பவரும், 'பிந்தைய போர்ச் சூழலில் இயலாமை கொண்ட பெண்கள் அதிகாரம்' என்ற ஆய்வறிக்கையாக இந்திய ஆய்வாளர் ஆர் .எம் .தமிழ்ச்செல்வன் என்பவரும்,

'ஈழப்போரில் பாதிக்கப்பட்ட பெண்களும் கருணைப்பால உதவித்திட்டமும்' என்ற தலைப்பில் வலன்ரீனா இளங்கோவன் என்பவரும், முன்னாள் பெண்போராளிகளின் சமூக பொருத்தப்பாடு தொடர்பில் ஜே.கீர்த்தனாவும் , 'சமூகமயமாக்கல் - பெண் போராளிகள் எதிர்கொள்ளும் சிக்கல்'கள் என்ற தலைப்பில் சிந்துஜா லிங்கசாமியும் , 'பெருந்தோட்டத் துறையில் பெண்கள்' என்ற ஆய்வறிக்கையை சரஸ்வதி சிவகுருவும்,

'பெண் தலைமைத்துவம் பிரச்ச னைகளும் சவால்களும்' போன்ற பெண்கள் தொடர்பான கருத்தியல்களைக்கொண்ட தலையங்கங்களில் துறை சார்ந்தவர்களும் ,அதுதொடர்பான துறையில் பல்கலையில் கல்வி பயிலும் மாணவர்களும் ,பல்கலை விரிவுரையாளர்களாலும் ஆய்வுகள் செய்யப்பட்ட மதிப்பீட்டு முடிவுகள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன .

இந்திய அண்ணா பல்கலைக்கழகத்தில் இருந்து ஆய்வுரையை சமர்ப்பித்தவர்களில் 'மலம் அகற்றிச் சுத்தம்செய்யும் தொழில் புரியும் தலித் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் சவால்களும்' தொடர்பான ஆய்வறிக்கையை சுசீந்திரா பழனிச்சாமி சமர்ப்பித்திருந்தார்.

இந்த ஆய்வுகளின் மூலம் ஓரளவுக்கு உலக நாடுகளிலும், அண்டை நாடுகளில் இருக்கும் பெண்களும், நம் நாட்டு பெண்களும் எதிர்கொள்ளும் சவால்கள், சிக்கல் கள் தொடர்பில் வெளிக்கொணர பெண்ணியமும் பெண் அமைப்புக்களும் இன்னமும் கடுமையாக உழைக்க வேண்டி உள்ளது என்பதை இந்த மாநாடு தெளிவுபடுத்தியுள்ளது .

இலங்கையின் தலைமை அமைச்சரது மனைவி முதல் நாளின் இரண்டாவது அமர்வில் ஆற்றிய உரை, இலங்கை அரசு, பெண்கள் தொடர்பான கரிசனை என்ற பதத்துக்குள் சற்றும் உள் நுழையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியது. பெண்களின் அரசியல் வலுவூட்டிடல் என்பது இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என்பதை திருமதி ரணில் விக்கிரம சிங்க தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

அதேபோல் பெண்களின் வலுவாக்கம், எல்லாப்பகுதிக்கும் ஊடுருவாக்க நிலைக்கு இட்டுச்செல்லப்பட வேண்டும் எனவும் அவர் விளக்கமளித்தார். வடமாகாணத்தில் போரின் பின் பெண்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்திருப்பதை திருமதி விக்கிரமசிங்க தெளிவுபடுத்தினார். இது எமது நாட்டின் அரசுக்குச் சென்று சேரவேண்டிய மிக முக்கியமான செய்தியாக இருக்கின்றது. வடக்கைப் பொறுத்தவரை, பெண்களின் கணவர்மார் காணாமல் போனமை தொடர்பில் அரசு அதி சிரத்தை கொள்ளாமல் இருப்பதை அவர் சுட்டிக்காட்டியதாக நாம் எடுத்தும் கொள்ளலாம் . அதேபோல வடக்கு-கிழக்கு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளின் பெண்களுக்கு அரச ,அரச சார்பற்ற நிறுவங்கள் கூட பெண்களுக்கான போதிய உதவிகளையோ வலுவூட்டல்களையோ அரசு வழங்கவில்லை என்ற உண்மையையே அவர் சுட்டிக்காட்டி இருந்தார் .

அவரது முக்கிய கருத்தாக, பெண்கள் கூட்டாக இணைந்து பணியாற்றி இவற்றைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதாக அமைகிறது.ஒட்டுமொத்தமாக பெண்கள் என்போர், நாட்டுக்கான பங்களிப்பின் மிக முக்கிய காரணிகளில் மிக முக்கியமான அங்கம் என்பதை இந்த மாநாடு எடுத்துக் கூறியது .

ஆயினும் கூறப்பட்ட கருத்துக்கள், கருத்தளவில் மாத்திரம் என்றில்லாமல், அந்த நிகழ்வுக்கு வருகைதந்த அனைவரும் அவற்றை சமூக கீழ்மட்டப் பெண்கள் வரை முக்கிய விடயமாக கருதிக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும் என்பதே தேவையாகவும் அவசிய கடமையாகவும் இருந்தது.அதனைவிட உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் இருந்தும் வருகை தந்த அறிஞர்கள் ஈழப்பெண்களின் நடைமுறை வாழ்வியல் சிக்கல்களை நன்கு புரிந்துகொண்டு அவற்றை தம் அடுத்தகட்ட ஆய்வுகளுக்கு மாற்றியமைத்து பெண்களுக்கான வலுவூட்டலுக்கு ஆவன செய்வார்கள் என நம்புவோம் .

குறிப்பாக இலங்கையில் மலையக பெண்கள் தொடர்பான பிரச்சனைகள் முதன் முதலாக வெளி நாட்டு சமூகத்தின் மத்தியில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. மலையகப் பெண்களின் தொழில்முறை மற்றும் ஊதியம், தொடர்பான பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வுக்கு இந்த பெண்கள் மாநாடு வழிவகுக்கும் என நம்புவோம் .

## மாத இறுதியில்
# 'மோகினி'

இரு வேடங்களில் திரிஷா நடித்துள்ள திகில் படமான 'மோகினி' எதிர்வரும் வரும் 27ஆம் திகதி வெளியாகவுள்ளது. மாதேஷ் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப்படம் வெற்றிபெறுமா என்று மிகவும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார் திரிஷா. ஆனாலும், இதற்கு முன் வெளியான அவருடைய 'நாயகி' படம் பெரிதாக வெற்றிபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.






## வார்த்தைகள்தான் எம்மை வாழ வைக்கும்!






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவினரிடம் கருத்துவேறுபாடு உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**இடபம்:** அன்பால் அனைவரையும் அரவணைப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணக்கடனில் ஒருபகுதி அடைபடும்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழிலில் இடையூறுகளைச் சரிசெய்ய முயல்வீர்கள். இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு உயரும்.

**சிங்கம்:** இயன்ற அளவில் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கன்னி:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மனைவி விரும்பிய ஆடம்பர பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**துலாம்:** சூழ்நிலை அறிந்து பேசுவது நல்லது. தொழிலில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். அரச வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**விருச்சிகம்:** நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். நண்பரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கும்பம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில்,வியாபாரத்தில் நவீன மாற்றங்களைச் செய்வீர்கள். வருமானம் திருப்தியளிக்கும்.

**மீனம்:** பேச்சில் நிதானம் கடைபிடிப்பது நல்லது. தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்படும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.







## சிறார்களுக்கான தேடியந்திரம்!

கூகுள் முன்னணித் தேடியந்திரமாக விளங்கினாலும், சிறார்கள் இணையத்தில் உலாவும்போது பயன்படுத்தப் பாதுகாப்பான தேடியந்திரம் தேவை. அந்தவகையில், சிறார்களுக்கான தேடியந்திரமாக, 'கிட்டி' (KIDY) தேடியந்திரம் புதிதாக இணைந்துள்ளது. சிறார்களுக்குப் பொருத்தமில்லாத உள்ளடக்கம் இந்தத் தேடியந்திரத்தில் குறிச்சொற்கள் மூலம் முடக்கப்படுகின்றன. மேலும் பல வகையான பாதுகாப்பு அம்சங்களும் அளிக்கப்படுகின்றன. கூகுள் தேடியந்திரம் அளிக்கும் தேடல் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தத் தேடியந்திரமும் செயற்படுகிறது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 3 | | 2 | | | 4 |
| | | | | | | | 8 | |
| | 3 | | 8 | 5 | 9 | | | |
| 7 | | | | | | | | 3 |
| 9 | 8 | | 4 | | 3 | | 2 | 7 |
| 6 | | | | | | | | 1 |
| | | | 1 | 7 | 5 | | | |
| | 7 | | | | | | | |
| | | | 6 | | 8 | | 1 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 4 | 5 | 6 | 9 | 7 | 8 | 1 |
| 8 | 7 | 6 | 3 | 1 | 4 | 9 | 2 | 5 |
| 9 | 5 | 1 | 7 | 2 | 8 | 4 | 6 | 3 |
| 4 | 1 | 7 | 6 | 9 | 3 | 2 | 5 | 8 |
| 6 | 9 | 3 | 8 | 5 | 2 | 1 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 4 | 7 | 1 | 3 | 9 | 6 |
| 7 | 3 | 8 | 9 | 4 | 6 | 5 | 1 | 2 |
| 5 | 6 | 2 | 1 | 3 | 7 | 8 | 4 | 9 |
| 1 | 4 | 9 | 2 | 8 | 5 | 6 | 3 | 7 |

## பொறுமை

பொறுமை வேகத்தைக் குறைப்பதன் மூலம் முன்னேற்றத்தை கொண்டுவருகின்றது.
பொறுமை எம்மை குளிர்ச்சியாகவும் அமைதியாகவும் வைத்திருக்கின்றது.
பொறுமையானது ஒரு மரதன் ஓட்டப்பந்[illegible] போன்று எம்முடைய வேகத்தைக்கட்டு[illegible]னத்துடன் எம்முடைய சக்தியை கடை[illegible] வைத்துக்கொள்வதற்கான அவசியத்தை[illegible] கொள்வதற்கு உதவி செய்கின்றது.
இது இயற்கையாகவே பொறுமையை கொண்டுவ[illegible]வதால், நாம் மேற்கொள்கின்ற அனைத்து காரியங்களிலும் நாம் வெற்றியடைவதை நாம் காண்கின்றோம்.



## காணி விற்பனைக்கு

குப்பிழான் தெற்கில்
10 பரப்புக்காணி வீட்டுடன்
விற்பனைக்கு உண்டு.

(CS/ 18468)(11)

**076 641 3104, 077 414 5824**

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் ஸ்ரூடியோ ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
(ஆண்கள் மட்டும்) (CS/ 18469)(11)

**077 930 7412**

## வேலையாள்கள் தேவை

**உணவகம் ஒன்றுக்கு
பொதி செய்பவர்
உணவு பரிமாறுபவர் தேவை
(இருபாலாரும் விரும்பத்தக்கது)**

(CS/18471)(11)

**077 465 2860**

## கல்வி

**வெளிவந்துவிட்டது - 2018 தமிழ்**
**A/L - 12,13** புதிய பாடத்திட்டம் பரீட்சைக்கான வினாவிடைகள் கொண்டது.
**ஆசிரியர் - இ.க.சிவஞானசுந்தரம் M.A**
சகல புத்தகசாலைகளில்.

**011 236 0239** (ACO/284)(11)

## தேவை

**சுன்னாகத்தில் உள்ள
பிரபல உணவகத்துக்கு** சகல
வேல்லைகளும் தெரிந்த
உதவியாளர்கள் தேவை.

**021 224 1555** (CS/ 18465)(11)

## பெயர்மாற்றம்

இல.75, வன்னியசிங்கம் வீதி, தாவடியை வதிவிடமாகக் கொண்ட S.சிற்றம்பலம், தேசிய அடையாள அட்டை இல. 492454605V ஆகிய நான் **சிற்றம்பலம் ஆகதர்சன்** ஆகிய எனது மகனின் பெயரை இன்று முதல் **சிற்றம்பலம் ஏகதர்சன்** என மாற்றி அமைக்கின்றேன் எனவும் இனி மேல் இவர் சகல ஆவணங்களிலும் தனது புதிய பெயரையே பயன்படுத்துவார் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/ 18467)(11) **தகப்பனார் ச.சிற்றம்பலம்**


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 . 06 . 1952



மறைவு
28 . 07 . 2015

## அமரர் வைரவிப்பிள்ளை விஜயரட்ணம்

*திதி:- 24.07.2018*

ஈரமாய் கசியும் நெஞ்சோரத்தில்
பாரமாய் கனக்கும் பாசம் நீங்கள்
வேர் உறுஞ்சும் நீர்த் துளியாய்
மார்புக்கூட்டினுக்குள் நீங்கள் - எமை
சீர் சிறக்க வாழ வைத்தீர்
தேர்வலமாய் எம் முன்னே
தோன்றிய தெய்வமன்றோ நீர்
எமக்கு வாழ்வு தந்த - உம்
தாள்களுக்குத் தலைவணங்கி
அஞ்சலிக்கின்றோம்

**சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.**

**குடும்பத்தினர்.**

(CS/18285)(11,17)

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 02 . 1963



இறப்பு
20 . 07 . 2018

## பழனிவேல் சத்தியசீலன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பழனிவேல் சத்தியசீலன் 20.07.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனிவேல் - அன்புமலர் (பூமாலை) தம்பதிகளின் அன்பு மகனும், றஷினியின் (கௌரி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் இராயேஸ்வரி (ராணி) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், உமாகாந் (விஜய்- விஜய் சவுண்ஸ் உரிமையாளர்), தர்சிகா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஸ்யந்தி, நந்தகுமார் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், குணசீலனின் (அமெரிக்கா) அன்புச் சகோதரரும், விஜயகுமாரி, சாந்தினி (ஜேர்மனி), கௌசலாதேவி (கனடா), காலஞ்சென்ற கவிதா மற்றும் சசிகலா, சிவகாந்தன் (கனடா), தீபா (அமெரிக்கா), சியாமளா (அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும், சங்கவி, ராகவன், அஸ்வின், சிரோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிந்மய பாரதி ஒழுங்கை,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.**

(CS/18454)(11)

**தகவல்:
குடும்பத்தினர்.
077 280 5264**


## இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது **500/=** மட்டும்.
கூடுதல் கொள்வனவுகளுக்கு விசேட விலைக் கழிவுகள் உண்டு.

**தொடர்பு - 077 8689 500**
U.S.A பாம் குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.


## மரண அறிவித்தல்கள்

## அருட்சகோதரி தியடோசினா மிராண்டா (தி.சி)



போளவத்தை வாய்க்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்சிலுவை துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி தியடோசினா மிராண்டா 22.07.2018 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (24.07.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கடற்கரை வீதியில் அமைந்துள்ள திருச்சிலுவை துறவற சபை சிற்றாலயத்தில் திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


**திருச்சிலுவை கன்னியர் மடம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/18470) (11)

**தகவல்:
அருட்சகோதரி கிளோயா சுவானி
(மாகாண தலைவி)**

## மரண அறிவித்தல்

## திருமதி பேரின்பநாயகி கதிரவேலு



இருபாலையைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேரின்பநாயகி கதிரவேலு நேற்று (23.07.2018) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - அருமை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - இலட்சுமி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சீதேவிப்பிள்ளை, குருநாதன் ஆகியோரின் சகோதரியும் இந்திராதேவி, தயாபதி, முருகானந்தன், குமரன் (சுவிஸ்), சோதி (இத்தாலி), ரேவதி (கொழும்பு), சிவசக்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அன்னலிங்கம், இரத்தினவடிவேல் (ஓய்வுநிலை மின்சாரசபை பொறியியலாளர்), யோகாம்பிகை, சுமதி (சுவிஸ்), தங்கராணி (இத்தாலி), சுவேந்திரன்) (தனுஷ்கா லைற்றிங் சிஸ்ரம்), மனோகரன் (லண்டன்), சிவபாக்கியம் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் தினேஸ்குமார் (லண்டன்), றதீஸ்குமார் (ஆசிரியர் - வசாவிளான் மகா வித்தியாலயம்), முகேஸ்குமார் (லண்டன்), மயூரன், மஜீவன் (லண்டன்), மயூரி (பொறியியலாளர்), அனுஷன் (பிரான்ஸ்), அமீரா, அனீபா (குடும்பநல உத்தியோகத்தர்), சுகன்ஜா (சுவிஸ்), சுஜீவன் (சுவிஸ்), சுவேதா (இத்தாலி), தனுஷ்கா (ஆஸ்திரேலியா), பானுஷாந் (கொழும்பு), சுவர்ணன் (லண்டன்), ஹரிஷா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கட்டுப்பட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 598 3915**

**தகவல்: க.முருகானந்தன்
(மகன் - கட்டட ஒப்பந்தகாரர்)**

## யோசேப்பு அருள்தாஸ் (செல்ரன்)



*மலர்வு 14.10.1981*
*உதிர்வு 21.07.2018*

யாழ்ப்பாணம் தாளையடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Chelles Gournay ஐ வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப்பு அருள்தாஸ் (21.07.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற மத்தியாஸ் யோசேப்பு மற்றும் செபமாலையம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வரப்பிரகாசம் அன்ரனி மற்றும் மேரிதிரேசா (இந்தியா) தம்பதிகளின் அன்பு மருமகனும் டிலானியின் பாசமிகு கணவரும் மெலீனா, சாஷா ஆகியோரின் அன்புத்தந்தையும் மேரிகிறாசியா (இத்தாலி), அமலஉற்பவம் (ஈச்சமோட்டை), தேவதாஸ் (சுவிஸ்), மேரிதிரேசா (மானிப்பாய்), ஞானசோதி (லண்டன்), மேரியூட் (தாளையடி), அமலதாஸ் (லண்டன்), யேசுதாஸ் (தபால் ஊழியர், தாளையடி) ஆகியோரின் அன்புச்சகோதரரும் அன்ரன் எல்மோ (இத்தாலி) காலஞ்சென்ற அரியரட்ணம் (மெக்கானிக் சின்னண்ணை) மற்றும் சுமித்திரா (சுவிஸ்), எலியாஸ் (மானிப்பாய்), அந்தோனிப்பிள்ளை (லண்டன்), சுஜி (லண்டன்), ஜோன்சன் (பிரான்ஸ்), பாமினி (தாளையடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிஅஞ்சலி நாளை (25.07.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாளையடி அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**யோசேப்பு செபமாலையம்மா - இலங்கை — +94770747129
அன்ரன் எல்மோ (கிறாசியா) - இத்தாலி — +393313833232
தேவதாஸ் - சுவிட்சர்லாந்து — +41754153461
சந்துரு - பிரான்ஸ் — +33769648348**

**தகவல்:
குடும்பத்தினர்**

(CS 18342/15/17)


# பெறுகைக்கான அழைப்பு (IFB-6) மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின்திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்ற வருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடியவிலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. இது தேசிய போட்டிவிலைக் கேள்வி முறையாக இருந்தாலும் வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்விகோரல் அறிவித்தலில் குறிப்பிட்டCIDA தரத்துக்கு கேள்விகள் கிடைக்காதுவிடின் அல்லது கிடைக்கப் பெற்றகேள்விகள் தகுதியற்ற தாயின் அதற்கு மேற்பட்ட CIDA தரம் கருத்திலெடுக்கப்படும்
4. நிர்மாண ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய ஒப்பந்தக்காரர். நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திஅதிகாரசபையில் (CIDA); அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணத்தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் மோசடியில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களின் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்டசெயலக பெறுகை அலகில் கேள்விபத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் ஒருவேலைக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும் தொடர்புகொள்ளவேண்டியதொலைபேசி இலக்கங்கள் : 021 221 4633 / 021 222 2233 , 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674 www.jaffna.dist.gov.lk
6. அக்கறையுள்ளகேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாதகட்டணமாகிய ( Non refundable fee )அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதொகையினைமாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் செலுத்திபற்றுச்சீட்டைசமர்ப்பிக்குமிடத்து 25.07.2018தொடக்கம் 08.08.2018வரைமு.ப 9.00 மணியிலிருந்துபி.ப 02.00மணிவரைஅலுவலகநேரங்களில் கேள்விப் பத்திரங்களைபெற்றுக் கொள்ளலாம்.
7. அட்டவணையில்குறிப்பிடப்பட்டுள்ளகேள்வித்தொகைகளுக்கானகேள்விப்பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்விகளுடன் இணைக்கப்பட்டுதவிசாளர்.திணைக்களப் பெறுகைக்குழு.மாவட்டச் செயலகம்.யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 09.08.2018 பி.ப 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வி இலக்கத்தினையும் (Bid ID). வேலைவிபரத்தினையும் (Description of work ) குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்என்பதுடன் தாமதமாககிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்விசெல்லுபடிக்காலம் (Bid Validity) கேள்வி இறுதித் திகதியிலிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களும். கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid Security)கேள்வி திறத்தல் திகதியிலிருந்து 120 நாட்களும் ஆகும்.
9. முற்கேள்விக் கூட்டம் (PrebidMeeting) 02.08..2018 மு.ப 10.00 மணிக்கு மாவட்டசெயலகத்தில் நடைபெறும்.
10. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.
11. அட்டவணைகீழ்வருமாறு:

| Bid ID. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Contract Period (Days) | Grade of (ICTAD) CIDA, Speciality *(Clause – 3)* | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| JF/PROC/Pre-school//05/24/2018. | Construction of **Kalaimakal Pre School at Chulipuram,** Chankanai DS Division | 2.76 | 75 | C8 or Above Building | 30,000 | 07.12.2018 | 1,500 |
| JF/PROC/Fish/05/25/2018 | Improvement of **Dry Fish Processing Centre at Analaitivu,**Kayts DS Division | 3.33 | 75 | C8 or Above Building | 35,000 | 07.12.2018 | 1,750 |
| JF/PROC/Fish/05/26/2018 | Construction of **Dry Fish Yard Development work** at Kurunagar,Jaffna town DS Division | 5.83 | 90 | C7 or Above Building | 60,000 | 07.12.2018 | 2,250 |
| JF/PROC/Road/05/27/2018 | Re-Construction of **NavaladiVairavar Road** at Manipay. | 3.55 | 75 | C8 or Above Road | 40,000 | 07.12.2018 | 1,750 |
| JF/PROC/Road/05/28/2018 | Re-Construction of **2nd lane Navali Road** at Manipay | 2.56 | 75 | C8 or Above Road | 30,000 | 07.12.2018 | 1,500 |
| JF/PROC/Palmyrah /05/29/2018 | Construction of **Palmyrah Production & Sales Centre** at SamarapakaKaraveddy | 3.80 | 75 | C8 or Above Building | 40,000 | 07.12.2018 | 2,000 |
| JF/PROC/Irrigation /05/30/2018 | Improvement of **Periyadaippu Scheme Construction** of Three bay Gated Regulator Cum Spill Way in KarainagarDS Division. | 2.13 | 75 | C8 or Above Irrigation | 25,000 | 07.12.2018 | 1,500 |
| JF/PROC/Powerloom /05/31/2018 | Reconstruction of **KollankaladdyPowerloom Building** at Thellippalai DS Division | 1.99 | 60 | C8 or Above Building | 20,000 | 07.12.2018 | 1,000 |
| JF/PROC/Road /05/32/2018 | Re-Construction of **Kappanai Road** at Atchuvely | 2.88 | 75 | C8 or Above Road | 30,000 | 07.12.2018 | 1,500 |
| JF/PROC/Mill /05/33/2018 | Construction of **Palmyrah based Production Complex Centre** at Chanthirapuram, Chavakachcheri, DS Division | 2.94 | 75 | C8 or Above Building | 30,000 | 07.12.2018 | 1,500 |
| JF/PROC/NA-ADM /05/33/2018 | Construction of **Administative Block Stage - ii** at Nallur Divisional Secretariat. | 15.40 | 105 | C6or C5or Above Building | 160,000 | 07.12.2018 | 5,500 |
| JF/PROC/Road /05/34/2018 | Re – Construction of **MayliddyVaruththalaivillan Joint Road**Thellippalai DS Division | 10.68 | 90 | C6or C5or Above Road | 110,000 | 07.12.2018 | 3,500 |
| JF/PROC/Hosp/05/07/2018 | **Balance Work No-06Psychiatric ward Building at Base Hospital** at Thellipalai | 10.34 | 105 | C6 or C5 or Above Building | 105,000 | 07.12.2018 | 3,500 |
| JF/PROC/Inter /05/34/2018 | Construction of **Interlock Paving work**at Divisional Secretriat- Jaffna | 1.17 | 60 | C8 or Above Building | 15,000 | 07.12.2018 | 1,000 |
| JF/PROC/Irrigation /05/30/2018 | Renovation of **Koththalavala Channel (stage-i )**Sandilipay DS Division | 17.00 | 90 | C6 or C5 or Above Irrigation | 175,000 | 07.12.2018 | 6,500 |

**நா.வேதநாயகன், அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

இரா. நிஷாந்தன்



# வியத்தகு இயற்கை!

நாம் வாழும் இந்த பூமியானது பஞ்ச பூதங்களின் சேர்க்கைகளால் ஆனது. நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் பஞ்ச பூதங்கள் துணை கொண்டு மனிதன் பூமியில் தன் வாழ்க்கையினை முன்னேடுக்கின்றான். சொல்லப் போனால் பஞ்ச பூதங்கள் இயற்கையில் கொடைத் தன்மைகளாகும். அத்தகு பஞ்ச பூதங்கள் மனித வாழ்க்கையில் நீக்க முடியாத அளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றன. இயற்கையின்றி மனிதன் தன் வாழ்க்கையினை முன்னெடுக்க முடியாது என்பதே உண்மை.
இத்தகு பஞ்ச பூதங்கள் இயற்கையில் இழையோடும் தன்மைகள் இரசிக்கத்தக்கன. அவை எம் மனதிற்கு வியப்பினை அளிப்பவை. மேலும் உள்ளத்தை உவகை கொள்ளச் செய்பவை. அதனாலே மனிதன் இயற்கையோடு ஒன்றித்து காலம் காலமாக வாழ்ந்து வருகின்றான். ஆனால் இன்று இயற்கையின் அளவில்லாத எழிலை, அதன் மேன்மையை, அதன் சிறப்பினை நாம் கண்ணுறுவதும். அதனை இரசித்து, மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்ற நிலை மிகமிகக் குறைவே.

**காலைக் காட்சியில் சங்கமிப்போம்**

நாள் ஒன்றின் தொடக்கம் சூரிய உதயத்துடன் ஆரம்பிக்கின்றது. கிழக்கு வானம் வெளுத்து கதிரவன் தன் திருமுகத்தை மெல்ல மெல்ல வெளிக்காட்டி தன் ஆயிரம் திருக்கரங்களால் உலகிற்கு ஒளி கொடுக்க கிழக்கு வானிலே தோன்றிடுவான். பகலவனைக் கண்ட இருளானது ஓடிச் சென்று மறைந்திடும். பனித் துளிகளும் உடன் மறைந்திடும். குளத்தினில் காணப்படும் தாமரைகள் மலர்ந்திடும். இவ்வாறு சூரியன் வருகை கண்டு நிகழும் நிகழ்வுகளை கண்ணுறலாம். அவை இயற்கையின் அழியாத அழகினைக் காட்டி நிற்கின்ற அற்புதமான பொழுதாகும். அவசரமான இந்தக் காலத்திலே காலைக் காட்சியை அதன் வசீகரத்தை நாம் கண்டு இரசிப்பதும், மகிழ்ச்சியுறுவதும் மிக மிகக் குறைவே.

**மனதை வருடிடும் மாலைப் பொழுது**

ஒரு நாளில் காலைப் பொழுது எப்படியோ அந்த நாளின் மாலைப் பொழுதும் அப்படியே. இயற்கையில் அழகிய காட்சிகள் மாலைப் பொழுதிலும் அரங்கேறிடும். குறிப்பாக நாம் இயற்கையோடு ஒன்றித்து மகிழ்ந்திருப்பதற்கு ஏற்ற பொழுது இந்த மாலைப் பொழுதேயாகும். உலகிற்கு ஒளி கொடுத்திட சுற்றித் திரிந்த சூரியன் தன் களைப்பினைப் போக்கிட மேற்குத் திசையில் மறைந்து கொள்வான். காலையில் இரைதேடச் சென்ற பறவைகள் வரிசையாக கூட்டமாக சிறகடித்துப் பறந்து தம் இருப்பிடம் செல்லும் காட்சியும், காற்றினில் அசைந்தாடும் நெல் வயல் கதிர்களும், ஆரவாரத்தோடு அலை வீசிடும் கடலும், ஒய்யாரமாக வளர்ந்து காற்றினில் தலை அசைத்திடும் மரங்களும் என மாலைப் பொழுது இயற்கையின் அழகினை எம் மனதில் பதியச் செய்கின்றது. அத்தோடு எம் மனதையும் கொள்ளை கொள்கின்றது.



**நிலாவின் ஒளியில் கூடி மகிழ்வோம்**

இயற்கையில் அழகிய சிருங்காரம் அரங்கேறும் பொழுது இரவுப் பொழுது என்றால் மிகையில்லை. இரவில் வானம் பார்ப்பதற்கு அழகாய் காட்சியளிக்கும். இரவு வானில் வெளிப்படுபவை அனைத்தும் நாம் இரசித்து மகிழ்வதற்குத் துணை புரிகின்றன. பரந்து விரிந்த வானிலே கோலத்தில் இடப்பட்ட புள்ளிகள் போல நட்சத்திரங்கள் நிறைந்திருக்க அவற்றின் நடுவே சந்திரன் தோன்றும் அழகிய காட்சி இரவு வானில் அழகினை ஊட்டுகின்றது. பொதுவாக நிலா என்றால் எல்லோர்க்கும் கொள்ளைப் பிரியம். அதன் வெண்மையும், அதன் குளிர்ச்சியைத் தரும் ஒளிக்கதிர்களும் எல்லோரும் அதன் மீது விருப்பம் கொள்ளக் காரணமாகின்றது. பால் வார்க்கும் நிலவாக மண்ணுலகம் முழுவதும் ஒளி வெள்ளத்தில் காட்சியளிக்க துணையாகின்றது. நிலாவின் ஒளியில் நாம் எதையெல்லாம் செய்கின்றோம் என ஒரு பட்டியலே இடலாம். குழந்தைகளுக்கு அன்னையர் உணவு ஊட்டுவதற்கு நிலாவைக் காட்டுகின்றனர். அதையே நிலாச்சோறு என்கின்றோம். மேலும், அந்தக் குழந்தைகள் தம்முடன் உரிமை கொண்டு நிலாவினை விளையாட அழைக்கின்றனர். இவை மட்டுமா? அந்த நிலாவின் ஒளியில் நாம் ஓடி ஆடி விளையாடுகின்றோம். குழந்கைளும், பெண்களும் ஆனந்தமாக ஆடிப் பாடுகின்றனர். பலரும் ஒன்றாக கூடியிருந்து நிலவொளியில் உரையாடி மகிழ்கின்றோம், பாட்டிமார் தம் பேரக் குழந்தைகளுக்கு இந்த நிலவொளியில் கதைகள் பல சொல்லி தூங்கச் செய்கின்றனர். இவ்வளவு ஏன் காதலர்க்கு மகிழ்ச்சி ஊட்டிடும்பொழுதும் இந்த நிலவொளி நிறைந்த இரவுப் பொழுதே என்றால் மிகையில்லை. ஆனால் பிரிந்த காதலர்க்கு மட்டும் நிலவானது கொஞ்சம் துன்பத்தைக் கொடுப்பானாம் என்கின்றன நம் இலக்கியங்கள்.
ஆனால் இன்றைய காலத்தில் நாம் நிலாக் காட்சியை இரசித்திட நேரம் ஒதுக்குவது இல்லையே. அதன் வியத்தகு சிருங்கார அழகினை எம் குழந்தைகளுக்கு காட்டி மகிழ்வது இல்லையே. வீட்டிற்குள்ளேயே மின்குமிழ் வெளிச்சத்தில் பொழுதைக் கடத்துகின்றோம். கொஞ்சம் உள்ளிருந்து வெளியே வந்து வானைப் பாருங்கள். நிலவொளியைக் கண்ணுறுங்கள். மெய் மறந்து போய்வீர்கள்.

> இயற்கை எமக்குக் கொடுத்துள்ள கொடைகள் ஏராளம். அதில் ஒரு சிலவற்றின் எழிலை நாம் சுவைத்தோம். இவை தவிர, மலையில் இருந்து வழிந்தோடும் நீர் அருவிகள், தாமரை மற்றும் அல்லி மலர்களால் சூழ்ந்திருக்கும் குளங்கள், வானில் தோன்றிடும் வானவில், வாய்க்கால் வழியே ஓடிச் செல்லும் நீர் என இயற்கையின் எழில் மிகுந்த காட்சிகளை கண்டு கொள்ளலாம். இன்றைய நவீன காலத்தில் நாம் வேகமாக சென்று கொண்டிருக்கின்றோம். அதனால், இயற்கையின் அழகினையோ, அதன் சிறப்பினையோ நாம் கண்டு கொள்வதில்லை. வெறுமனே தொலைக்காட்சியும், தொலைபேசியும் மட்டுமே வாழ்வில் மகிழ்ச்சியைத் தருவன என எண்ணி வாழ்கின்றோம்.

**மழையில் நனைந்து குதூகலிப்போம்**

இயற்கை எமக்கு அளித்த ஓர் அற்புதமான எழில் மழை. இந்த பாரானது செழிப்புடன் இருப்பதற்கு மழை மிகமிக அவசியமானதாகும். ஆனால் அந்த மழை பொழிவது நம் சிந்தையில் ஆச்சரியமான செயலாகும். வானில் உள்ள மேகங்கள் கடலில் ஆவியாகி மேலே செல்லும் நீரினை உள் இழுத்து கருமேகங்களாகி பின் நிலத்தினில் மழையை பொழிகின்றது. இதனால் மண் குளிர்மை கொள்கின்றது. செடி, கொடிகள் தழைத்து வளர்கின்றன. இத்தகு நன்மைகளைக் கொடுக்கும் மழையானது எம் மனதில் மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஓர் இயற்கையின் தன்மையாகும். இடி முழங்கி, மின்னல் மின்னி பொழிகின்ற மழையானது கொள்ளை அழகு. அவ்வாறு மழையில் நனைவதென்றால் பலருக்குக் கொள்ளைப் பிரியம். ஆனால் மழை வாராத போது எப்போ மழை வரும் என ஏங்கும் நாம் மழை வந்ததும் இது எப்போ நிற்குமோ? என எண்ணுவதே அதிகம். ஆக இயற்கை எமக்களித்த மழையினையும் இரசித்திடுவோம். அதைப் போற்றிடுவோம். இயற்கையின் அழகினைக் கண்டு மகிழ்வோம்.
ஆகவே, இயற்கை எமக்கு கொடுத்துள்ள கொடைகள் ஏராளம். அதில் ஒரு சிலவற்றின் எழிலை நாம் சுவைத்தோம். இவைதவிர, மலையில் இருந்து வழிந்தோடும் நீர் அருவிகள், தாமரை மற்றும் அல்லி மலர்களால் சூழ்ந்திருக்கும் குளங்கள், வானில் தோன்றிடும் வானவில், வாய்க்கால் வழியே ஓடிச் செல்லும் நீர் என இயற்கையின் எழில் மிகுந்த காட்சிகளை கண்டு கொள்ளலாம். இன்றைய நவீனகாலத்தில் நாம் வேகமாக சென்று கொண்டிருக்கின்றோம். அதனால், இயற்கையின் அழகினையோ, அதன் சிறப்பி னையோ நாம் கண்டு கொள்வதில்லை. வெறுமனே தொலைக்காட்சியும், தொலைபேசியும் மட்டுமே வாழ்வில் மகிழ்ச்சியைத் தருவன என எண்ணி வாழ்கின்றோம். ஆனால் எமது மனதிற்கு ஆனந்தம் அளித்து, மனதை திருப்தி கொள்ளச் செய்து, மனதை உற்சாகப்படுத்தி எம்மை வாழ வழிசமைப்பது இயற்கையில் அழிவில்லாத எழில்களே என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆக, இனியாவது சிறிது நேரம் ஒதுக்கி இயற்கையினை இரசிப்போம். நம் வருங்கால சந்ததியினருக்கு இயற்கையின் வியப்பினை சொல்லிக் கொடுப்போம். இயற்கையை பேணிக் காத்திட வழிவகை செய்திடுவோம்.

**நாளை**

**25.07.2018**

புதன்கிழமை

**ஆடி 09**

திதி: திரயோதசி மு.இ 10.20 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ. 08.31 வரை
சுபநேரம்: 04.32 – 06.02 வரை
ராகுகாலம்: 12.02 – 01.32 வரை

# முட்டை




இயற்கை மனிதனுக்கு வழங்கியுள்ள அற்புதமான உணவுப் பொருள் முட்டை ஆகும். மனிதனின் கரம் படாததும் எது விதமான இரசாயன பாதுகாப்பியும் சேர்க்கப்படாததுடன் அதிதரமான புரச்சத்துக்கொண்டதாகவும், முட்டை விளங்குகிறது. விற்றமின் 'சி' தவிர்ந்த அனைத்து விற்றமின்களும், அவற்றோடு இரும்பு, பொஸ்பரஸ், மகனீசியம் முதலான 13தாதுப் பொருள்களையும் முட்டை தன்னுள் கொண்டுள்ளது.

உலக மக்கள் அனைவரினதும் உணவில் முட்டை பிரதான ஒரு பொருளாகவுள்ளது.

பண்டை வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு வாழ்கின்ற புஸ்மன்கள், பிக்மிஸ்கள், வேடர்கள் போன்ற இனத்தவர்கள் பறவை முட்டைகளை மட்டுமன்றி முதலை, ஆமை முட்டைகளையும் தமது உணவாகக் கொள்கின்றனர். சொர்க்கத்திலிருந்து நிலத்தில் விழுந்த ஒரு முட்டை பொரித்ததால் மனிதன் தோன்றினான் என்பது சீனரின் நம்பிக்கை. உண்மையோ பொய்யோ எனத் தெரியாது. ஆனால் மனிதர் அளவு கணக்கின்றி முட்டைகளை விழுங்கக் கூடியவர்கள் எனக் கூறப்படுகின்றது. சராசரியாக ஒரு ஐரோப்பியர் ஒரு வருடத்தில் 600முட்டைகளை உண்கிறார்.

சந்தையில் முட்டைகளின் விலை, அவற்றின் தரத்திலும் பருமனிலும் தங்கியுள்ளது. துப்பரவும், ஓட்டின் தடிப்பு, வெள்ளைக் கருவின் தடிப்பு, மஞ்சள்கருவின் அளவு என்பனவற்றைப் பொறுத்து முட்டைகள் நிறையின் அடிப்படையில் பெரிய, சிறிய என்ற பிரிவுகளில் அடங்குபவை விலை அமைகின்றது. எனினும் அளவும் நிறமும் முட்டையில் எவ்வகையிலும் தாக்கத்தை நிர்ணயிப்பவை அல்ல. பழுதடையாத முட்டையை நீரில் போட்டால் அமிழ்ந்து விடும். பழுதடைந்த முட்டை நீரில் மிதக்கும். ஒரு பொழுதும் பழுதடைந்த முட்டையை பயன்படுத்தக் கூடாது. அதில் பக்ரீரியாக்கள் நிறைந்திருக்கும்.

முட்டையை வளரும் சிறார்களின் உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம். கலோரிப் பெறுமானத்தில் அதிக புரதம்கொண்டது. 100 கிராம் நிறையுள்ள ஒரு முட்டையில் 144 கலோரிப் புரதமுள்ளது. கொழுப்புக் கூடியதால் கொலஸ்ரோல் வியாதிக்குட்பட்டவர்கள் முட்டையை ஒதுக்கி விடவேண்டும். இன்று கோழிகளை முட்டை தரும் இயந்திரங்களாகக் கருதுகின்றனர். 1930இல் ஒரு கோழி ஆண்டுக்கு 121 முட்டைகளையிட்டது. இன்று 235 முட்டைகளை இடுகின்றது. ஆறு இறாத்தல் நிறை உடைய முன்னைய கோழிகள் ஒரு டசின் முட்டைகளை இடுவதற்கு 9 இறாத்தல் உணவை உண்டன. இன்று 2 இறாத்தல் நிறையுள்ள கோழிகள், 4 இறாத்தல் உணவுடன் ஒருடசின்முட்டைகளைத் தருகின்றன. 20வாரத்தில் கோழி. முட்டையிடத் தொடங்கும். 20 வாரத்திலிருந்து 36ஆவது வாரம்வரை கோழி நன்கு முட்டையிடும். பின்னர் படிப்படியாகக் குறைந்து 72ஆவது வாரத்தில் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படத் தயாராகிவிடும்.




## குறுக்கெழுத்துக் கட்டங்களை நிரப்புவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | |
| | | | | | |
| 4 | | | 5 | | 6 |
| | | 7 | | | |
| 8 | | | | | |
| | | | | 9 | |

**இடமிருந்து வலம்**
1. காலில் அணிவது
4. மழையில் காப்பது
7. நாட்டை ஆள்பவன்
8. மிருகங்களின் தலைவன்
9. நிலத்தில் வளர்வது

**மேலிருந்து கீழ்**
1. கடலில் கிடைப்பது
2. களி மண்ணால் செய்யப்படுவது
3. உடலை மறைப்பது
5. நிழலைத் தருவது
6. கண்ணைப் பறிப்பது
7. வீட்டின் மறு பெயர்
8. கல்லால் ஆனது

# ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது



நான்கு சீடர்கள் ஒரு குருவிடம் கற்க வேண்டிய கல்வி அனைத்தையும் முறையாகக் கற்றனர். பின்னர் தாம் கல்வி கற்ற குருவிடம் விடைபெற்றுச் சென்றனர். அவர்கள் செல்லும் வழியில் கல்வி பயின்ற அனுபவம் இல்லாத ஒருவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

இந்த ஐவரும் ஒரு காட்டு வழிப் பாதையில் சென்று கொண்டிருக்கையில், ஒரு இறந்த சிங்கத்தின் எலும்புக் கூட்டைக் கண்டார்கள். குருவிடம் கல்வி பெற்றவர்களில் ஒருவன், மந்திர வித்தைகள் அதிகம் கற்றவன். இவன் மற்ற மூவருடனும் பேசினான். "நாங்கள் நால்வரும் கற்ற வித்தைகளைப் பயன்படுத்தி சிங்கத்தை உயிருடன் எழுப்புப் பார்ப்போமா?"என்றான். எல்லோரும் அதற்கு ஒரு மனதாகச் சம்மதித்தனர். தாம் கற்றதை நடைமுறைப்படுத்திப் பார்ப்பதில் அத்தனை அவசரம். இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு நின்ற கல்வி கற்காத அந்த ஒருவன்! இவர்கள் திட்டத்துக்கு மறுப்புத் தெரிவித்தான். சிங்கம் பொல்லாத மிருகம். அது மனிதரைக் கொன்று தின்று விடும்.ஆதலால் சிங்கத்துக்கு உயிர் கொடுத்து எழுப்ப வேண்டாம் என அவர்களை வருந்தி, வற்புறுத்திக் கேட்டுக்கொண்டான். ஆனால் அந்த படித்த நால்வரும் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். "நீ என்ன பெரிய இவனா? எங்களுக்கு புத்தி சொல்கிறாய்? புத்தக வாசனையே அறியாத தற்குறி நீ. நாங்களோ குருவிடம் எல்லா வித்தை களையும் கற்றுத் தேறியவர்கள். அப்படியே சிங்கம் எம்மைத் தாக்க வந்தாலும், அதனைத் தடுத்து நிறுத்தவும் எம்மிடம் நிறைய வித்தைகள் இருக்கின்றன. நீ உன் வாயை மூடிக்கொண்டிருந்து நடப்பதை மட்டும் 'கவனி' என்று அவனை ஏளனம் பேசி அவன் பேச்சை அலட்சியம் செய்தனர்.

படிக்காதவன் இனிப்பேசிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தான். அங்கிருந்த ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டான்.


இப்போது அவர்கள் நால்வரும் தாம் கற்ற வித்தைகளைப் பயன்படுத்தி சிங்கத்தின் எலும்புக் கூட்டைத் தூக்கி நிறுத்தி அதற்கு நரம்புகள், தசைகள் மற்றும் உள்ளுறுப்புக்கள் அனைத்தையும் அவ்வுடலில் இருக்க வேண்டிய இடங்களில் பொருத்தினர். இறுதியில் சிங்கத்தின் வாய், பற்கள், கண், உரோமங்கள், நகங்கள் என்று உடல் முழுவதும் அச்சுப் பிசகாமல் உறுப்புக்களை வைத்து உரோம் நிறைந்த தோலினால் உடலை அப்படியே மூடினர். இப்போது சிங்கத்தை நால்வரும் தூக்கி நிறுத்தினர். இனி உயிர் கொடுக்க வேண்டியதுதான். எழுந்து நின்ற சிங்கத்தைக் கண்டதும் படிக்காதவன் எழுந்து நின்று உஷாரானான்.

இதோ சிங்கத்துக்கு உயிர்கொடுக்கப்பட்டது. சிங்கமோ எழுந்து நின்று அந்தக் காடே அதிரும்படி தன் பிடரி மயிரைச் சிலிர்த்து கர்ஜனை செய்தது. இப்போது படிக்காதவன் பயற்சி பயத்தினால் பரபரவென்று மரத்தில் ஏறினான்.

ஆனால் சிங்கத்தை எழுப்பிச் சீண்டி விட்ட நால்வரும் மரமேறத் தெரியாமையால் சிங்கம் அவர்களைக் கொன்று தின்று விட்டுச் சென்றது.

**படித்தால் மட்டும் போதாது**
**உலக அறிவும் நிச்சயம் வேண்டும்.**

# தண்ணீர்



- தண்ணீர் எமக்கு மிகவும் அவசியமானது. நாம் தண்ணீரைப் பலதேவைகளுக்குப் பயன்படுத்துகிறோம். குடிக்கின்றோம்; குளிக்கின்றோம்; உணவு சமைக்கின்றோம்; துணி கழுவுகின்றோம்.
- தண்ணீரால் வேறு பல நன்மைகளும் கிடைக்கின்றன. பயிர்களுக்குப் பாய்ச்சுகிறோம். விவசாயத்துக்கு நீர் மிகவும் அவசியமானது. தண்ணீர் இன்றி பயிர் இல்லை. பயிர் இன்றி எமக்கு உணவில்லை.
- தண்ணீர் மூலம் பல இயந்திரங்கள் இயங்குகின்றன. மின் சாரத்தை உற்பத்தி செய்கிறோம்.
- இவை மட்டுமா? நீரில் பல உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றில் மீன்கள் முக்கியமானவை. புரதச் சத்து அதிகம் நிறைந்த இவை எமக்கு உணவாகின்றன.
- கடல் ஆறுகள் போன்ற வற்றில் கப்பல்கள், படகுகள் மூலம் பிரயாணம் செய்கிறோம்.
- கிணறு, ஆறு, குளம், மழை ஆகியவற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்கிறோம். நீரின்றி அமையாது உலகம்.

## புலிப்...

ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் மக்களிடையே கலந்துரையாடல் ஒன்றையும் ஏற்படுத்தியிருந்தனர். எழுதப்பட்ட வசனங்களை அப்பகுதி மக்களே அழித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-110)

## புதிய...

உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். பத்தரமுல்லையில் இடம்பெற்ற சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. அரசமைப்பை மாற்றுவதற்காகவே அரசமைப்பு நிர்ணய சபை உருவாக்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றியுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பன்னாட்டுச் சமூகத்திடம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனின் ஏன் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வர முனைய வேண்டும்.

அரசமைப்பு வழிநடத்தல் குழுவில் மக்கள் விடுதலை முன்னணியும் அங்கம் வகிக்கிறது. வழிநடத்தல் குழுவிலேயே அது குறித்து பேசித் தீர்மானித்திருக்கலாம். 20 ஆவது திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை.

நல்லாட்சி அரசு, அரசமைப்பை மாற்றப்போவதில்லை. வடக்கிலுள்ள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்கே புதிய அரசமைப்புக் கொண்டுவரவுள்ளதாக கதைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றிக்கொண்டே நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்தது. தற்போதும் அவ்வாறான செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகின்றது -என்றார். (உ-5)

## பல்வேறு...

காசத்தில் ஈடுபட்டனர். சுமார் இரண்டு மணி நேரத்தில் அடுத்தடுத்து அவர்கள் கொள்ளையிலும் வழிப்பறியிலும் தாக்குதலிலும் ஈடுபட்டுவிட்டுப் பொலிஸாரிடம் பிடிபடாமல் தப்பியோடி உள்ளனர். மானிப்பாயில் இருந்து அரியாலை வரை இவர்களுடைய அட்டகாசம் பதிவாகியது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடர்ச்சியாகவே வாள்வெட்டுக் குழுவினர் என்று தெரிவிக்கப்பட்டு பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று இரவு அவர்களுடைய அட்டகாசம் யாழ்ப்பாணத்தில் எல்லை மீறியது.

சிறிய வர்த்தகர்களை இலக்கு வைத்து அவர்களை மிரட்டிக் கப்பம் பெற்றுள்ளனர். மானிப்பாயில் ஆரம்பித்த இந்தக் கொள்ளை அரியாலை வரை நீடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நான்கு மோட்டார் சைக்கிள்களில் மழை அங்கி அணிந்தவாறும், முகத்தை மூடிக்கட்டியவாறும் வந்த 6பேரே இந்தப் பாதகச் செயலில் ஈடுபட்டனர். வர்த்தக நிலையங்களை மூடும் நேரம் உள்புகுந்து உரிமையாளர்கள் மிரட்டப்பட்டுள்ளனர். மானிப்பாயில் வீதியில் சென்ற ஒருவரிடம் இந்தக் கும்பல் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றது. வர்த்தகர்கள் சிலரை மிரட்டிப் பணம் பறித்தனர். அதையடுத்து கோண்டாவிலிலும் வீதியில் சென்ற ஒருவரிடம் வாள்களைக் காட்டி மிரட்டி சங்கிலி பறித்தனர். தொடர்ந்து யாழ்ப்பாணம் முடமாவடிச் சந்தியில் உள்ள வர்தகர் ஒருவரிடம் சுமார் 25 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நேற்று முழுவதும் வியாபாரம் செய்த பணம் அப்படியே கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சிறிது நேரத்திலேயே அரியாலை புங்கன்குளம் பகுதியில் உள்ள வர்தக நியையத்தில் புந்த குழும்பல் அங்கும் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது. அங்கிருந்த இளைஞர்களுக்கும் குறித்த வாள் வெட்டுக் கும்பலுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதில் சில இளைஞர்கள் காயமடைந்தனர். தொடர்ந்து தெல்லிப்பழையில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த கும்பல் அங்கிருந்த பெண்ணை வாளினால் வெட்டிக் காயப்படுத்த முயன்றது. ஆனால் அவர் சமயோசிதமாகத் தப்பினார். எனினும் வீட்டிலிருந்த மற்றும் இருவருக்கு கேபிள்களால் தாக்கியத்தில் அவர்கள் காயமடைந்தனர். அயலவர்கள் ஒன்றுகூடியதும் வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்து தப்பியோடியது. ஓடும்போது ஒரு வாளையும் கைவிட்டுச் சென்றுள்ளது. அந்த வீட்டிலிருந்த ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பொருள்களையும் அடித்துச் சேதமாக்கியுள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அனைத்தும் நிறைவடைந்த பின்னர் அவர்கள் சம்பவ இடங்களுக்குச் சென்றனர். இங்கு விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் நள்ளிரவு வரை எவரும் கைது செய்யப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் வாள் வெட்டுக் குழுவினருடைய அட்டகாசம் அதிகரித்திருப்பதை அடுத்து அண்மையில் சட்டம் ஒழுங்கு அமைச்சர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் நேரில் இங்கு வருகை தந்து நிலமை குறித்து நேரில் ஆராய்ந்து சென்றனர். அதன் பின்னரே இந்த அட்டகாசம் இடம்பெற்றுள்ளது. (உ-21,101,106,8)


### தேவை

புத்தூர் அச்சுவேலியில் இயங்கும் உணவகத்திற்கு உணவு பரிமாறுவோர் (சப்ளையர்) இருபாலாரும் தேவை.

**தொடர்பு - 077 129 4121**

### வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், கோண்டாவில் பகுதியில் வீடொன்று வாடகைக்குத் தேவை. களஞ்சியப் பாவனைக்கு உகந்ததாக இருப்பது விரும்பத்தக்கது.

**தொடர்பு - 077 9510 280**

### ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1485
சீட்டிழுப்பு திகதி 23.07.2018
வெற்றி இலக்கங்கள்
04 27 41 70 E
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 31, 540, 336/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3060
திகதி: 2018.07.23
திங்கட்கிழமை
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து
37 49 53 54 J
போனஸ் இலக்கம்
39
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
33,911,020/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 320
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.07.23
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 53,060,170/-
வெற்றி இலக்கங்கள்
04 10 24 73 W
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


### விழிநீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
திரு. க.கௌரிகாசன்
அவர்களின் மாமா

**கந்தையா சண்முகலிங்கம்**



கடந்த (22.07.2018) அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/நீர்வேலி தெற்கு இ.த.க. பாடசாலை**

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி சர்மிளா கௌரிஹாசன் அவர்களின்
அன்புத்தந்தையார்.

**கந்தையா சண்முகலிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், யா /கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

**சிதம்பரன் பூபாலசிங்கம்**
(சிதம்பரன் ரேடேர்ஸ் ஸ்தாபகர், கைதடிச் சந்தி)



பிறப்பு 21.05.1952
இறப்பு 24.06.2018

கடந்த 24.06.2018 எம் எல்லோரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி எம்மைவிட்டுப் பிரிந்தவரின் மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (24.07.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**கைதடி மத்தி, கைதடி.** (CS18376(11)) **குடும்பத்தினர்.**






### Galaxy Star

வெற்றி வாரம் 261 / திகதி 22.07.2018
வெற்றி இலக்கங்கள்
07 03 10 24 37
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,538,556/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


### இதயபூர்வமான அஞ்சலி



## S.பொன்னம்பலம்

*(முன்னாள் அதிபர் - யா/இந்துக் கல்லூரி)*

"பொன்னர்" எங்கள் பெருமான்
போன இடமெங்கும் புகழ் பரப்பிய பேராசான்
இந்து அன்னை ஈன்றெடுத்த
இனிய அதிபர்.
நெடிய தோற்றமும் நீடித்த அன்பும்
நயந்தரும் சொல்லும் நாகரிகப்பொலிவும்
எமக்குக் கிடைத்த வரம்.

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்.

**1991 உயர்தர மாணவர்கள்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

### மரண அறிவித்தல்

## கிறிஸ்ரி ஜெயக்குமார்



கோப்பாய் வடக்கு, பூதர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட கிறிஸ்ரி ஜெயக்குமார் நேற்று (23.07.2018) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் இலங்கைநாயகியின் அன்புக் கணவரும் கிறிஸ்தபல் ஜெயதேவி, சாந்திகுமார், ஜெகதீஸ்வரன், நொயெலா ரவீந்திராதேவி, எல்மோ ரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தையல்நாயகி, லோகநாயகி, செல்வநாயகி, கமலாதேவி, காலஞ்சென்ற உமாபரன் மற்றும் உமாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (25.07.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்க ஆராதனைகளுக்காக கோப்பாய், இராசவீதியிலுள்ள "கானான்" சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**077 288 8779** (CS 18481/15/18)
**தகவல்: ஜெ.இலங்கைநாயகி (மனைவி)**

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 600 | 800 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 700 |
| முரல் | 400 | 400 | 500 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 200 |
| நகரை | 250 | 300 | 400 | 250 |
| சூடை | 180 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |

# எலும்புகளை வலிமையாக்கும் முருங்கைக்காய்



பலரும் விரும்பிச் சாப்பிடும் முருங்கைக்காயில் ஊட்டச்சத்துக்களானவை நிரம்பியுள்ளன. முருங்கைக்காயில் உள்ள அதிக அளவு கல்சியம் சத்து, இரும்புச் சத்து மற்றும் விற்ற மின்கள் போன்றவை எலும்புகள் வலிமையடைய உதவுகின்றன.

அதிலும் இதனை பாலுடன் சேர்த்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், எலும்புகளில் அடர்த்தி அதிகரித்து, குழந்தைகளின் எலும்புகளின் ஆரோக்கியம் மேம்படும். முருங்கைக்காய் மற்றும் அதன் இலைகள் குருதியைச் சுத்தம் செய்யும் தன்மையைக் கொண்டவை.

மேலும் இது சிறந்த ஊட்டச்சத்தாகவும் செயல்படும். அதற்கு முருங்கைக்காயை சாப்பிடுவதோடு, அதன் இலையை சாறு எடுத்து, காய்ச்சிக் குடித்து வந்தால், குருதி சுத்திகரிக்கப்பட்டு, முகப்பரு மற்றும் இதர சருமப் பிரச்சினைகள் வருவதைத் தடுக்கலாம்.

முருங்கைக்காய் குருதியில் உள்ள சர்க்கரையின் அளவைக் குறைத்து, நீரிழிவைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளும் சக்தி உள்ளது.


மேலும் இதனை உட்கொண்டு வந்தால், சிறுநீர்ப்பை நன்கு செயல்பட்டு, இதனால் சர்க்கரை அளவு குறைந்து, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ உதவும்.

தொண்டைப்புண், சளி அல்லது இருமல் போன்றவை இருந்தால், ஒரு கோப்பை முருங்கைக்கீரை சூப் வைத்துக் குடித்து வந்தால் சுவாச பிரச்சினைகளில் இருந்து விடு தலை கிடைக்கும் குறிப்பாக முருங்கைக்காய் மற்றும் முருங்கைக்கீரையை உணவில் சேர்த்து வந்தால், நுரையீரல் நோய்களான ஆஸ்துமா, நுரையீரல், காசநோய் போன்றவற்றில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 120 | 70 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 200 | 160 | 200 |
| பாகல் | 280 | 280 | 300 | 240 |
| க.கிழங்கு | 100 | 140 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 105 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 130 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 280 | 280 | 180 | 260 |
| வாழைக்காய் | 40 | 100 | 80 | 50 |
| கீரை | 40 | 20 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 450 | 500 | 300 |
| புடோல் | 120 | 70 | 80 | 120 |
| கோவா | 140 | 160 | 180 | 160 |
| வெண்டி | 100 | 90 | 120 | 100 |
| போஞ்சி | 300 | 320 | 240 | 260 |
| லீக்ஸ் | 240 | 160 | 200 | 280 |
| தேங்காய் | 70 | 55 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 130 |
| தேசிக்காய் | 80 | 60 | 40 | 120 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 300 | 300 | 240 |
| கரட் | 280 | 280 | 250 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 200 | 300 |

# சூரிய வணக்கம் மிகவும் அவசியம்



1. விரிப்பில் இரண்டு கால்களையும் நன்றாகச் சேர்த்து, நேராக நிமிர்ந்து நின்று, கைகளை பக்கவாட்டில் கொண்டு வந்து, வணக்கம் செய்வது போல கைகளை ஒன்றாக சேர்த்து, மூச்சை நன்றாக உள்ளிழுத்து, பின், மிக மெதுவாக மூச்சை வெளியிடவும்.
2. மூச்சை உள்ளிழுத்து, கைகளை மேலே தூக்கி, இடுப்பை சற்று பின்னே வளைத்து, இரு கைகளையும், காதுகளை ஒட்டி இருக்கும்படி செய்யவும். வானத்தை எட்டிப்பிடிக்க முயலும் பாவனை போல், இருக்க வேண்டும்.
3. மூச்சை வெளியே விடும்படியாக கைகள் இரண்டையும், தரையைத் தொடும்படி வைத்துக் கொள்ள வேண்டும். தலை வளைந்து, மூக்கும், நெற்றியும் முழங்காலை முட்ட முயலட்டும். முழங்கால் வளையாமல் செய்ய வேண்டும்.
4. மூச்சை உள்ளிழுத்தபடி, வலது காலை பின்னோக்கி வைத்து, இடது காலை முன்னோக்கி வைத்து, இரண்டு கைகளையும் தரையில் ஊன்றி, தலையை மேலே தூக்கி, சில வினாடிகள் அப்படியே இருக்க வேண்டும்.
5. மூச்சை வெளியே விட்டபடி, இரண்டு கால்களை பின்னே வைத்தும், இரண்டு கைகளை முன்னே வைத்தும், இடுப்பை மேலே தூக்கி, முக்கோண வடிவத்தில் முழு உடம்பும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
6. மூச்சை உள்ளிழுத்து, தரையில் சாஷ்டாங்கமாக படுத்துக் கொள்ள வேண்டும். இரு கால் விரல்கள், இரு முழங்கால்கள், மார்பு, நெற்றி, இரு உள்ளங்கைகள் என்று எட்டு அங்கங்களும், தரையைத் தொடும்படி இருக்க வேண்டும்.
7. மூச்சை உள்ளிழுத்து, தரையில் குப்புறப்படுத்து, தலையை தூக்கி, முதுகை பின்னால் இடுப்பின் பலத்தில் வளைக்க வேண்டும். முதுகுத் தண்டு இப்போது வெளிப்புறமாக வளைகின்றது. உடலின் பளு முழுவதும் உள்ளங்கைகளிலும், கால் விரல்களிலும் இருக்கும்.
8. இது, ஐந்தாம் நிலை போன்றதே. மூச்சை உள்ளே நிறுத்தி, இடுப்பை உயர்த்தி, கைகளை தரையில் நன்கு ஊன்றி, முழு ஓய்வும், தளர்ச்சியும், நாடி, நரம்புகளுக்கும் கொடுக்க வேண்டும்.
9. இது, நான்காம் நிலை சார்ந்ததே. கால்கள் மட்டும் மாறியிருக்கும். வலது காலை முன்னால் கொண்டு வருவதால், நாபிச் சக்கரம், பால் கோளங்கள், விந்து பைகள் சரிவர இயங்கும். மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே செய்ய வேண்டும்.
10. இது, மூன்றாம் நிலை போன்றதே. கைகள், பாதங்களுக்கு பக்கத்தில்; ஆனால், சற்று முன்னால் இருக்கட்டும். மூச்சை வெளியில் விட்ட படியே செய்ய வேண்டும்.
11. இது, இரண்டாம் நிலையே. மூச்சை நன்கு உள்ளிழுத்தப்படியே செய்ய வேண்டும்.
12. முதல் நிலையே, இறுதியிலும் செய்ய வேண்டும். மூச்சை வெளியிடும்படி செய்ய வேண்டும்.

இந்த, 12 நிலைகளும் சேர்ந்து ஒரு வணக்கம்.

'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை உச்சரிக்கும் போது, மூலாதாரத்திலிருந்து நாதம் மேலோங்கி வரும். பீஜ மந்திரங்கள் ஆறு; சூரியனின் பெயர்கள் 12. இவற்றுடன், 'ஓம்' சேர்த்து சத்தமாக உச்சரித்தபடியே இந்த சூரிய வணக்கத்தைச் செய்வது, நம் மனதை தட்டி எழுப்புவதற்கும், அதற்கு உரமூட்டுவதற்கும் உதவும்.

ஆசனம், பிராணாயாமம், மந்திரம் மற்றும் சக்கர தியானம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட உடற்பயிற்சி சாதனாவாக

உள்ள இந்த சூரிய வணக்க முறையை, கொஞ்சம் கொஞ்சமாக பழகிக் கொண்டு, தினமும், 1 நிமிடங்கள் ஒதுக்கினால், எமது ஊனுடல் பிரணவ தேகமாக மாறி அமையும் என்பது நிச்சயம்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...


## கோட்டையிலிருக்கும்...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பான மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இராணுவம் குடியிருப்பது தொடர்பில் முடிவெடுக்க வலியுறுத்தினார் இதன்போதே முதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இராணுவம் தொடர்ச்சியாக இருப்பதற்காகவே அவர்கள் நிலைகொண்டுள்ளனர் போலத் தெரிகின்றது. எனவே அவர்களின் ஆதிக்கத்தை கோட்டைக்குள் அனுமதிக்க முடியாது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும் என்றார்.

இதற்குப் பதில் அளித்த தொல்பொருள் திணைக்கள அதிகாரி, கோட்டைக்குள் இராணுவத்தினர் தற்காலிகமாகச் சிறிய முகாம் அமைத்து இருந்தனர். அங்கு கட்டுமான வேலைகள் நடப்பதால் அவர்கள் தற்காலிகமான முகாம் ஒன்றை அங்கிருந்த சிறிய இடத்தில் அமைத்துள்ளனர். அதற்கே எமது திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. நிரந்தரமாக அமைக்க அனுமதி கொடுக்கப்படவில்லை - என்றார். (உ-8)



# நிலவுப் பயணங்கள்

## ஓய்வின்றி இயங்கும் அழகியல்

நம் அண்டைய உலகமான சந்திரனை நோக்கிய பயணச் சாதனைகள் கடந்துபோன ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்தேறி வருகின்றன.

அப்போலோ பயண சாதனைகளுக்குப் பிற்பாடு ஏறத்தாழ 20 ஆண்டுகள் கழித்து 1992 டிசெம்பர் 7 ஆம் திகதியன்று சந்திரனை உற்று நோக்கிய கலிலியோ எனும் அமெரிக்க விண்கலம் சந்திர வட துருவம் அருகே நிலாப் பள்ளங்களில் நிரந்தரப் பனிக்கட்டி படிந்திருப்பதனை அறிவித்தது.

தொடர்ந்து 1994 பெப்ரவரி தொடக்கம் மார்ச் மாதங்கள் வரை அமெரிக்காவின் 'கிளமென்டைன்' (Clementine) எனும் ஆய்வுக் கலம் சந்திரனின் தென் துருவத்தில் தண்ணீர்ப் பனிக்கட்டிகள் உறைந்திருப்பதாகத் தெரிவித்தது. நிலவின் வட கோளத்தில் 10 ஆயிரம் முதல் 50 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பிலும், தென் பகுதியில் 5 ஆயிரம் முதல் 20 ஆயிரம் சதுர கிலோ மீற்றர்கள் அளவிலும் ஏறத்தாழ 30 கோடி தொன்கள் நீர் ஒளிந்திருப்பது நிச்சயம் எனச் சொல்லப்பட்டது.

இந்த அளவிடானது ஏற்கனவே அறிவித்திருந்ததை விடவும் ஏறத்தாழ 20 மடங்கு அதாவது 600 கோடி தொன்கள் எனப்படுகிறது. குறிப்பாக சந்திர நிலத்தடி நீரின் அளவு என்பது இந்துமா கடலின் தண்ணீர் அளவின் ஒரு கோடியில் ஒரு பங்கு:கின்றனர் விஞ்ஞானிகள். விண்வெளி நாடுகள் யாவுமே நிலவுத் தண்ணீரைக் குறிவைக்கின்றன. குறி வைத்துக்கொண்டுள்ளன.

நிலவுப் பயணங்கள் மேற்கொண்ட நாடுகளின் வரிசையில் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பிறகு ஐரோப்பாவும், ஜப்பானும், சீனாவும் சேர்ந்து கொண்டன. அதன் பிற்பாடு ஆறாவது இடத்திலே இந்தியாவும் இணைந்துகொண்டிருந்தது.

சிறப்பாக சந்திராயன் விண்கலானது நிலவை 100 கிலோ மீற்றர் துருவப் பாதையில் சுற்றிய விடயங்கள் நாமறிந்ததே.

சந்திரனின் கனிம வளங்கள் பற்றி ஆராய்ந்ததில் சந்திரயானில் இடம் பெற்ற அமெரிக்காவின் 'எம்3' (Moon Mineralogy Mapper MMM) என்பது குறித்து நோக்கத்தக்கது.

இது அமெரிக்காவின் ஜே.பி.எல். என்கிற 'ஜெட் புரொப்பல்ஷன்' லேபோரட்டரி (தாரை உந்தும ஆய்வுச்சாலை) ஆராய்ச்சிக் கூடமும், பிரௌன் பல்கலைக்கழகமும் இணைந்து வடிவமைத்த கருவி. ஏறத்தாழ 95 வீதம் நிலவைத் தனக்குள் பொதிந்து, பதிந்து கொண்டதாக கூறப்படுகிறது. சந்திரனில் செறிந்து உள்ள கைட் ராக்சில் நீர்க்கூறு அம்சம் கண்டுபிடிக்கப்பட்டது.

உலக வரலாற்றில் இது முற்றிலும் புதிய கண்டுபிடிப்பாக சொல்லப்பட்டது.

2009 ஓகஸ்ட் மாதத்தில் வடதுருவப் பனி அளவை ஆராய்வதற்கு சந்திரக் கண்காணிப்புச் சுற்றுகலம் (Lunar Reconnaissance Orbiter) என்ற விண்கலன் நிலவுக்கு அனுப்பப்பட்டது. அதில் நாசாவின் சிறு வானலை அதிர்வு ஏற்பி (Miniature Radio Frequency) ஒன்று இடம் பெற்றது. அதன் விம்பங்கள் நிலவை முப் பரிமாணத்தில் பதிவு செய்தது. அங்கு துருவப் பகுதிகளில் பனி உறைந்து இருந்ததைக் கண்டுபிடித்து அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் நிலவுக் கண்காணிப்புச் சுற்று கலமும் சந்திரயானின் மினிசார் எனும் சிறிய செயற்கைத்துளை ரேடார் (MiniSynthetic Aperture Radar) கருவியும் சேர்ந்து ஒரே தருணத்தில் நிலவின் வட துருவத்தில் மேலாக நின்று 'எர்லாங்கர்' குழுவினைப் படம் பிடித்தன. நான்கு நிமிடங்களாக இவை பதிவு செய்த தகவல்கள் பூமியில் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் பயன்பாட்டு இயற்பியல் ஆய்வுக்கூடத்தில் பெறப்பட்டு ஆய்வுகள் நடந்தன.

தொடர்ந்து செப்ரெம்பர் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் அமெரிக்காவின் நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளிக் கழக அறிவியலறிஞர்கள் ஒன்றுகூடி ஆய்வில் ஈடுபட்டனர். அதன்படி நிலவில் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டதாக சொல்லப்படுகிறது. இருந்தும் அவை குடிப்பதற்கான திரவ நீராகவும் பனிக்கட்டிகளாகவும் இருக்கவில்லை. மண் படிகங்களிலும், மணலிலும் பிணைந்து உள்ள நீர்க்கூறுகளாக காணப்பட்டதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

தவிர நிலவுப் பாறைகளில் உலோகத் தாதுக்கள் உள்ளன என்பதும் அவற்றில் இருந்த சுவாசிக்க உவுதவும் ஒட்சிசனை பிரித்து எடுக்கும் ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் ஈடுபட்டு வெற்றி பெற்றதும் உண்மையே.

நிலவுத் தண்ணீர் மனதுக்குக் குளிர்ச்சி. விலகும் சந்திரன் சந்திரனுக்கே குளிர்ச்சி தரும் எனப்படுகிறது. இந்த நிலையிலே சந்திரன் குறித்தான புரியதோர் தகவல் கண்டறியப்பட்டுள்ளது.


குறிப்பாக சந்திரனின் பருவம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறதாக கூறப்படுகிறது. நிலவுக் கண்காணிப்புச் சுற்றுக் கலன் பார்வையில் நிலவின் தரைப்பரப்பில் பல்வேறு முண்டு விரிசல்கள்ப (Lobate Scarps) திவாகி உள்ளதாக கூறப்படுகிறது.

இந்தநிலையிலே கடந்த 100 கோடி ஆண்டுகளுக்குள் நிலவு 100 மீற்றர்கள் அளவு சுருங்கி விட்டது என்கிறார் அமெரிக்காவில் ஸ்மித்சோனியப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக் குழுத் தலைவர் தாமஸ் வாட்டர்ஸ்.

அதாவது ஒவ்வொரு நூற்றாண்டும் நிலவு 10 மைக்ரோன் அளவு மெலிந்து வருகிறது. சராசரித் தலைமுடி அளவின் பத்தில் ஒரு பங்காக இது காணப்படுகிறது.

# தேனெறும்புகள்

## காவல் செய்யும் படைவீரர்கள்



'அசுவினி' என்றழைக்கப்படும் ஒரு வகைப் பூச்சியினங்களை எறும்புகள் தங்கள் புற்றுகளில் வைத்து வளர்க்கின்றன. இவற்றுக்கு ஒருவகைப் புற்களை உணவாக அளித்து அவற்றிலிருந்து சுரக்கும் தேன் போன்ற இனிய பானத்தை கறந்து எறும்புகள் உணவாக உட்கொள்கின்றன. எனவேதான் இவை 'எறும்புப் பசு' என்று அழைக்கப்படுகின்றன.

இவற்றைப் பாதுகாக்க, உணவளிக்க ஒரு தனி எறும்புப்பிரிவே இருக்கிறது. இவை 'தேனெறும்புகள்' என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் வேலை அசுவினிகளை எதிரிகளிடமிருந்து பாதுகாப்பதும், அவற்றுக்கு உணவளிப்பதுமே. அவை இடும் முட்டைகளை பாதுகாத்து வைப்பதில் தேனெறும்புகள் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ளும்.

குளிர்காலங்களில் முட்டைகளை சரியான வெப்பநிலை உள்ள இடங்களுக்கு எடுத்துச்சென்று பாதுக்காக்கின்றன. முட்டை பொரிக்கும் காலத்தில் அவற்றை இரை கிடைக்கும் இடங்களுக்கு எடுத்துச் செல்கின்றன.

பொதுவாக அசுவினிகளுக்கு இறக்கை இல்லாவிட்டாலும், அசாதாரண சூழ்நிலைகளில் அதாவது இனப்பெருக்கம் அதிகமாகி உணவுப்பற்றாக்குறை ஏற்படும் தருணங்களில் இறக்கை முளைத்துப் பறந்து செல்வது உண்டு. ஆனால் தமது உணவு ஆதாரங்கள் கைவிட்டுப் போகக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வில் எறும்புகள் அவற்றின் இறக்கைகளை வெட்டி விடுகின்றன. மேலும் ஒருவித இரசாயனத்தை உபயோகித்து தாம் வளர்க்கும் அசுவினிகளுக்கு இறக்கை முளைக்க விடாமல் தேனெறும்புகள் தடுப்பதாக அண்மைய ஆய்வில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# பறவைகள்

## இயற்கை பேணும் தொண்டர்கள்

பறவைகள், மரங்கள் தருகின்ற பழங்களைத் உண்பதோடு, மரக்கிளைகளில் கூடு கட்டி மரங்களைத் தங்கள் இருப்பிடமாக்கிக் கொள்கின்றன. பதிலுக்கு அவை மனிதர்கள் போலே 'நன்றி' என்று சொல்லிவிட்டு போய்விடுவதில்லை. அதற்கான நன்றிக் கடனை வேறுவிதமாகச் செலுத்துகின்றன.

பறவைகளைப் பாடாதா கவிஞர் இல்லை. மரங்களைப் புகழாத புலவர்கள் இல்லை. இந்தளவுக்கு பறவைகளும் மரங்களும் மனிதனிடத்தில் ஆழ்ந்த தொடர்பைக் கொண்டுள்ளன.

***"சின்னஞ்சிறு பறவை போலே நீ***
***திரிந்து பறந்து வா பாப்பா.***
***வண்ணப் பறவைகளைக் கண்டால் நீ***
***மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா"***

என்று பாரதி பாடிக் களித்துள்ளான்.

**அற்புதச் செயல்**

பாரதியின் இந்தப் பாட்டு குழந்தைகளுக்கானது மட்டுமல்ல, உலகில் உள்ள அனைவருக்குமுரியது. பறவைகளைப் பார்த்து மகிழ்கிறோம். பாடுகிறோம். குதூகலிக்கிறோம். ஆனால் பறவைகளிடத்தில் நாம் கவனிக்காத அம்சங்கள் பல உள்ளன. அதில் ஒன்றுதான், மரங்களின் விதைகளை பரப்புகின்ற அற்புதச் செயல். ஆம், தனக்கு உணவையும் உறைவிடத்தையும் தரும் மரங்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவை தன் எச்சம் மூலம் விதைகளை ஆங்காங்கே இட்டுச் செல்கின்றன.


நாவல், சீத்தா, இலுப்பை, கொடுக்காய்புளி, கொய்யா, சப்போட்டா போன்ற மரங்களிலிருந்து பழங்களை உண்ணும் பறவைகள், அதன் விதைகளை தான் செல்லும் இடங்களில் இடுகின்றன. 'மகிழம்', 'செண்பகம்' போன்ற பூ மரங்களின் கனிகளை "புல்புல்" பறவைகள் விரும்பி உண்கின்றன. வேப்பம்பழங்களை விரும்பி உண்ணும் காக்கைகள் மரம்நடும் தன்னார்வத் தொண்டர்களாகவே மாறி விடுகின்றன. பறவைகளுக்குப் பிடித்த பழங்களான அரசு, ஆலம், அத்தி போன்றவற்றின் விதைகள் வெகுவாக பறவைகளால் பரப்பப்படுகின்றன.

**செய்ய வேண்டியவை**

பறவை இனம் விதைகளை ஆங்காங்கே பரப்பினாலும், அவற்றுள் வளர்ந்து மரங்களாகும் விதைகள் சொற்பமானவையே. சரியான சூழ்நிலையும், நீர் வசதியும் கிடைக்கும் விதைகள் மட்டுமே பல்வேறு பருவநிலைகளைத் தாக்குப்பிடித்து மரங்களாகின்றன.

நாம் செய்திருக்க வேண்டிய கைங்கரியம் யாதெனில், கோடை காலங்களில் தாகத்தில் தவிக்கும் பறவைகளுக்கு எமைச் சூழவுள்ள சுற்றுப்புற இடங்களில் தண்ணீர் வைப்பதுதான். இந்தச் செய்கை மூலம் பறவைகளுக்கு தாகத்தை தீர்த்த மகிழ்ச்சி ஒருபுறம் கிடைத்தாலும், பறவைகள் அங்கு விட்டுச் செல்லும் விதைகள் நிலங்களில் மரங்களாக வளர்ந்து செழிப்புறும்.






## இந்தியாவை எதிர்த்து டெஸ்ட்டில் அடில் ரசிட்?

இங்கிலாந்து அணியின் நட்சத்திரச் சுழற்பந்து வீச்சாளரான அடில் ரசிட் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடுவாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.
அடில் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்கள் கொண்ட தொடரிலேயே விளையாடி வருகிறார். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கக அவர் கடந்த சில மாதங்களாக டெஸ்ட் ஆட்டங்களைப் புறக்கணித்து வருகிறார். ஆனால் அவர் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவிக்கவில்லை. இந்த நிலையில், அடில் ரசிட் விரும்பினால் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்டில் விளையாட முடியும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதையடுத்தே இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரசிட் களமிறங்குவாரா என்பது தொடர்பில் எதிர்பார்க்கப்படுகிறது.
(ம)

## இந்து இளைஞர் அணி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 24
புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் 'ஓவர்கேம்' முறையிலான கரப்பந்தாட்டத் தொடரில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இறுதியில் சைனிங்ஸ்




யாழ்ப்பாணம், ஜூலை 24
சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் சைனிங்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உதயசூரியன் அணியை எதிர்த்து சைனிங்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி 8.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது. கயன் அதிகபட்சமாக 14 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் பிரசாந் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
34 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சைனிங்ஸ் அணி 8 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. சுரேன் அதிகபட்சமாக 15 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் கபிலன் 3 இலக்குகளையும், கயன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
(ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

**உதயதாரகை வி.க கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

**வடக்கு - கிழக்கு கால்பந்துத் தொடர்**

வடக்கு கிழக்கு பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டக்களப்பு சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து மன்னார் எவ்.சி. அணி மோதவுள்ளது.
இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லை பீனிக்ஸ் அணியை எதிர்த்து நோதன் எலைட் அணி மோதவுள்ளது.
(ம-23)

## வென்றது வைகறை

யாழ்ப்பாணம், ஜூலை 24
சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வைகறை அணி வெற்றிபெற்றது.
வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வைகறை அணி வெற்றிபெற்றது. (ம-23)





44ஆவது தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினமும் கடந்த சனிக்கிழமையும் நடைபெற்றது. பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனையாக வடமாகாணத்தின் எப்சியா வொஷிங்டன் கிளே தெரிவானார். (ம-23)

## இறுதிக்குத் தகுதி பெற்றது ரெ்யின்போ அணி

யாழ்ப்பாணம், ஜூலை 24
சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது றெயின்போ அணி.
றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தி[illegible] இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நேதாஜி அணியை எதிர்த்து றெயின்போ அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய றெயின்[illegible] அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கபிலன் 55 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் பிரபு, ராஜேந்திரா இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
117 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நேதாஜி அணி 88 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 28 [illegible] இறுதிக்குத் தகுதி பெற்றது றெயின்போ அணி. (ம-23)



# வழித்துத் துடைத்தது இலங்கை

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று 2:0 என்ற அடிப்படையில் தொடரை வழித்துத் துடைத்தது இலங்கை அணி.

கொழும்பில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இல்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தனஞ்சய 60 ஓட்டங்களையும், குணதிலக 57 ஓட்டங்களையும், கருணாரத்ன 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மகாராஜ் 9 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி காலியில் எதிர்கொண்ட தடுமாற்றத்தைப் போன்று கொழும்பிலும் தடுமாறியது. 124 ஓட்டங்களில் தென்னாபிரிக்கா சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் பிளாசிஸ் 48 ஓட்டங்களையும், குயின்டன் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தனஞ்சய 5 இலக்குகளையும், டில்ருவான் 4 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 5 இலக்குகளை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. கருணாரத்ன 85 ஓட்டங்களையும், மத்தியூஸ் 71 ஓட்டங்களையும், குணதிலக 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மகாராஜ் 3 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்காவுக்கு இலக்காக 490 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 290 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 199 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இலங்கை அணி. (ம)

# உலக மரபுரிமை அமைவிடமாக காலி தொடரும் புதிய பவிலியன்களை இடிக்க நடவடிக்கை தயார்

இலங்கையின் தென்மாகாணங்களின் தலைநகரான காலி இந்த நாட்டிலுள்ள பெரிய நகரங்களில் ஒன்று. மேலும் இலங்கையின் முக்கியமான துறைமுகமான காலி துறைமுகமும் அங்கே அமைந்துள்ளது. இந்தியப் பெருங் கடலில் பன்னாட்டுக் கடற்பாதையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் காலி துறைமுகம் அமைந்துள்ளதால் உரோமானியர்கள், கிரேக்கர்கள், அரேபியர்கள், சீனர்கள் மற்றும் இந்தியர்களின் வணிகத் தளமாகவும் பயன்படுத்தப்பட்டது. 2 ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்னர் தொலமி வரைந்த உலக வரை படத்தில் காலி நகரம் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் அந்த நகரத்தின் பழமையை அறிந்து கொள்ள முடியும்.



இலங்கையில் போர்த்துக்கீசியர்களின் ஆட்சிக் காலத்தில் காலியில் கி.பி. 1620ஆம் ஆண்டு கோட்டை ஒன்றைக் கட்ட ஆரம்பித்தார்கள். பின்னர் டச்சுக்காரர்களின் ஆட்சிகாலத்தில் காலி கோட்டை 52 ஹெக்டேர் நிலப்பரப்பில் 14 கொத்தளங்கள், நூலகம், பள்ளி, தேவாலயம், மருத்துவமனை, காவலர் விடுதி, நீதிமன்றம், சிறைச்சாலை, கலங்கரை விளக்கம் ஆகிய கட்டமைப்புக்களுடன் விரிவுபடுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து 1796ஆம் ஆண்டு டச்சுக்காரர்களிடமிருந்து கோட்டையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். 1876ஆம் ஆண்டு காலி கோட்டைக்கு அருகே ஆங்கிலேயர்களால் விளையாட்டு மைதானமும் கட்டப்பட்டது.

தற்போதையை காலி கோட்டையின் தேவாலய வீதியில் நூலகம், வணிக நிலையங்களும் ராணி வீதியில் கடல்சார் தொல்பொருள் கூடம், நீதிமன்ற வளாகம், பொலிஸாரின் குடியிருப்பு, மூர் வீதியில் கைவினைப் பொருள்கள், ஆடைகள், மரச்சிற்பங்கள், ஆபரணங்கள், அலங்காரப் பொருள்கள் விற்பனை கூடங்களும் உள்ளன. மேலும் காலி கோட்டையில் சிறந்த உணவகங்களும், தங்கும் விடுதிகளும் உண்டு. கோட்டை அருகே உள்ள விளையாட்டு மைதானத்தில் 1984ஆம் ஆண்டில் இருந்து முதல் தர கிரிக்கெட் ஆட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

1988ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு காலி கோட்டையை உலக மரபுரிமை அமைவிடமாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து காலிக்குச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாக காலி விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தி 1988ஆம் ஆண்டிலிருந்து பன்னாட்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் 2006ஆம் ஆண்டு காலி கோட்டையில் இருந்து கிரிக்கெட் போட்டிகளை பார்வையாளர்கள் பார்த்து ரசிப்பதற்கு பார்வையாளர் அரங்கம் மற்றும் கட்டிடங்களும் புதிதாகக் கட்டப்பட்டன. இந்த நிலையில் காலி கோட்டையில் புதிதாக கட்டப்பட்ட பார்வையாளர்கள் அரங்கத்தையும், கட்டிடங்களையும் அகற்ற வேண்டும் இல்லாவிட்டால் காலே கோட்டையை மரபுரிமை பட்டியலில் இருந்து நீக்க வேண்டிய நிலை ஏற்படும் என யுனெஸ்கோ நிறுவனம் 2007ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசுக்கு தெரிவித்து வந்தது.

இந்த நிலையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அமைச்சர்கள் காலி கோட்டையை பாதுகாக்கும் வகையில் யுனெஸ்கோ அதிகாரிகளிடம் பேச்சு நடத்தினர். இதையடுத்து காலி கோட்டையை பாதுகாக்க கிரிக்கெட் மைதானத்தை அகற்றுவதற்கு அரசு முடிவெடுத்துள்ளதாக இலங்கை ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இதற்கிடையே முன்னாள் வீரர்களான அர்ஜுன ரணதுங்க, ஜெயவர்த்தன ஆகியார் இலங்கை கிரிக்கெட் அணியை உலகறியச் செய்த காலி கிரிக்கெட் மைதானத்தை அகற்றக்கூடாது என கோரிக்கை விடுத்தனர்.

இது குறித்து இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கேள்விநேரத்தில் கேட்கப்பட்டபோது இளைஞர்விவகாரத்துறை அமைச்சர் சாகல ரத்னாயக்க "காலி பன்னாட்டு கிரிக்கெட் மைதானத்தை அகற்ற வேண்டும் என்ற நோக்கம் அரசுக்குக் கிடையாது. இந்த மைதானத்தில் தொடர்ந்து தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகள் எப்போதும் போல நடைபெறும். 2006ஆம் ஆண்டு முன்னாள் அரச தலைவர் ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் காலி கோட்டையில் கட்டப்பட்ட கிரிக்கெட் பார்வையாளர் அரங்கம், கட்டிடங்கள் மட்டுமே அகற்றப்படும்" எனத் தெரிவித்தார். ஆக, மைதானத்தை அல்லாமல் பவிலியன்களை நீக்கிவிட்டு மைதானத்தையும் யுனெஸ்கோவின் சான்றையும் தக்க வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# குணதிலகவுக்கு தற்காலிகத் தடை

## நடவடிக்கை மேற்கொண்டது இலங்கை கிரிக்கெட் சபை



விளையாட்டு வீரருக்கு உரித்தான ஒழுக்க விதிகளை மீறி நடந்தார் என்று தெரிவித்து இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஸ்க குணதிலக மீது. தற்காலிகத் தடை விதித்து நடவடிக்கை மேற்கொண்டது இலங்கை கிரிக்கெட் சபை. இன்று முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை விடுத்துள்ள அறிவிப்பில். "வீரரின் ஒழுக்க விதிகளை மீறி குணதிலக நடந்துகொண்டதால் தனுஸ்க குணதிலக ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுகிறார். விசாரணைகள் முடியும் வரை தனுஸ்க குணதிலகவுக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்படுகிறது. அத்துடன் தனுஸ்கவின் ஆண்டு ஊதியத்தில் இருந்து 20 சதவீதம் தண்டம் விதிக்கப்படுகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குணதிலகவைப் பொறுத்தவரை அடிக்கடி சர்ச்சைக்குரிய விடயங்களில் சிக்கி வந்துள்ளார். பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தமீம் இக்பாலுடன் அவர் முரண்பட்டார்.

கடந்த ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரின் போது, ஒழுக்கக்குறைவாக நடந்ததால், 6 ஆட்டங்களில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டார். இந்தியாவுக்கு எதிரான உள்நாட்டில் நடந்த அனைத்துத் தொடர்களிலும் பயிற்சியில் பங்கேற்காமல் குணதிலக புறக்கணித்துள்ளார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதற்காக 3 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டு, பின்னர் திரும்பப் பெறப்பட்டது. இவ்வாறு பெரும் சர்ச்சை மன்னனகவே குணதிலக இலங்கை கிரிக்கெட்டில் வலம் வருகிறார்.

இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் வண்டர்சே கடந்த வாரம் ஓர் ஆண்டுக்குத் தடை செய்யப்பட்டார். மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிய போது வண்டர்சே குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு மணிநேரம் தாமதமாக விடுதிக்குத் திரும்பியதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்தியாவின் பந்துவீச்சு மிகவும் வலுவாயுள்ளது

இந்தியாவின் பந்துவீச்சு வரிசை மிகவும் வலுவாக உள்ளது. இதனால் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி தனதாக்க வாய்ப்பு அதிகம் உள்ளது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் சகீர் கான்.



இங்கிலாந்து இந்திய அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாவுள்ள நிலையில் இவ்வாறு தெரிவித்தார் சகீர் கான்.

'இந்தியாவின் பந்துவீச்சு வரிசை மிகவும் பலமாக இருக்கிறது. உமேஷ் யாதவ் நன்றாக வீசுகிறார். இஷாந்த் சர்மா, சமி இருவரும் நல்ல திறனில் உள்ளனர். புவனேஷ்வர் குமாரும், பும்ராவும் முதல் டெஸ்டில் விளையாடா விட்டாலும் இந்தியாவின் வேகப்பந்து வீச்சு நன்றாகவே இருக்கிறது. ஐந்து டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடர் என்பதால் நீண்ட நாள்கள் நடைபெறும். எனவே அனைத்துப் பந்துவீச்சாளர்களும் தொடர்ந்து உடல் தகுதியுடன் இருப்பது அவசியம். இந்த டெஸ்டில் தொடர்ந்து இந்திய அணி சிறப்பாக விளையாடும்' என்று சகீர் கான் மேலும் தெரிவித்தார். (ம)

Techno World (வெலிங்டன் சந்தி, யாழ்)
A/ L தொழில்நுட்பப்பிரிவு
மாபெரும் செயலமர்வு
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)
பௌதீகவியல் - யாழின் தனித்துவ ஆசிரியர்
(பௌதீகவியல் ஆசான்)
இரசாயனவியல்.- யாழின் தனித்துவ (இரசாயனவியல் ஆசான்)
ICT - லவன் (விரிவுரையாளர்)
24, 25, 26. 07. 2018 9.00 am
T. P : 077 017 5346

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS

அறைகள் வாடகைக்கு விடப்படும்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் மாணவிகளுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு.
021 222 1116, 076 169 5750, 076 481 5151



## ரியல் மட்ரிட் கடும் பயிற்சி

ஸ்பெய்னின் பிரபல கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட் அணியின் வீரர்கள் 2017 - 2018 சீசனுக்காக நேற்று முதன்முதலாகக் கடும் பயிற்சியில் ஈடுபட்டனர்.

ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரராகச் செயற்பட்டு வந்த ரொனால்டோ அண்மையில் அந்தக் கழகத்தில் இருந்து விலகிச் சென்று இத்தாலியின் யுவென்டாஸ் கழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். ரொனால்டோவின் விலகலை அடுத்து ரியல் மட்ரிட் கழகம் பெரியதொரு தடுமாற்றத்தைக் காணும் என்று பரவலாக விமர்சிக்கப்படுகிறது. இதனால் அணியில் உள்ள ஏனைய வீரர்களுக்கு இந்தப் பருவகாலத்தில் பொறுப்புக்கள் மிகவும் அதிகம். இத்தகையதொரு இக்கட்டான நிலையில் 2017 - 2018 பருவகாலத்தை ஆரம்பித்துள்ளது ரியல் மட்ரிட். ரியல் மட்ரிட்டின் ஏனைய வீரர்கள் மீது மிகப்பெரும் எதிர்பார்ப்பும் அழுத்தமும் உள்ள நிலையில் அவர்கள் நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டனர். இன்னும் சில நாள்களில் இந்தப் பருவகாலத்துக்கான ஆட்டங்கள் ஆரம்பமாகவுள்ளமை

## கண்ணகி அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வசந்தசிறி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 8:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கண்ணகி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## சென். பிலிப் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென். பிலிப் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென். பிலிப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் சென். பிலிப் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.